Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU




முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 27 வெள்ளிக்கிழமை (13.12.2013) பக்கங்கள் 20 ஓசை - 073

## வடக்கின் அபிவிருத்திக்கு அதிக நிதி ஒதுக்கீடு

### மாகாணசபை உறுப்பினர் தவநாதன் வரவேற்பு



(கைதடி)

வடக்கின் அபிவிருத்தி கருதி மத்திய அரசு வடக்கு மாகாண சபைக்கு அதிக நிதியை விடுவித்தமை மிகவும் வரவேற்கத்தக்க விடயம் என்று வடமாகாண சபையின் எதிர்க் கட்சி உறுப்பினர் தவநாதன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் முதலாவது வரவு-செலவுத் திட்டத்தை வழிமொழிந்து நேற்று உரை நிகழ்த்தும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் முதலாவது வரவு-செலவுத்திட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை மாகாணசபையின் முதலமைச்சரும், நிதி 'அமைச்சருமான சி.வி.விக்கினேஸ்வரனால் சமர்ப்பிக்கப்பட்டு ஒவ்வொரு துறைகள் மீதும் விவாதங்கள் இடம்பெற்று வந்தது. நேற்று வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் வை.தவநாதன் வரவு-செலவுத் திட்டத்தை வழிமொழிந்ததைத் தொடர்ந்து ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன்போது உரையாற்றிய வை.தவநாதன் இந்த வரவு-

(19) பக்கம் பார்க்க...

## பொலிஸ் உத்தியோகத்தரை வீட்டுக்குள் அழைத்து தாக்குதல்

### அரியாலையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் ஒன்று யாழ். அரியாலை மாம் பழம் சந்தியில் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது.

யாழ். பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் யாழ். மாம்பழம் சந்திப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவருடன் வாஞ்சையுடன் பழகி வந்துள்ளார்.

இவர்கள் இருவருக்குமான உறவு பெண்ணின் வீட்டாருக்கு தெரியவந்ததைத் தொடர்ந்து குறித்த பெண்ணின் தாயார் மகளைப் போன்று தொலைபேசியில் கதைத்து குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை தமது வீட்டிற்கு அழைத்துள்ளார்.

இவ்வாறு வீட்டிற்கு அழைத்த போது, குறித்த பொலிஸார் தான் பழகும் பெண்ணே தன்னை அழைத்ததாக எண்ணி பெண்ணின் வீட்டிற்குள் சென்றுள்ளார்.

இதன்போது அங்கிருந்த குறித்த பெண்ணின் சகோதரன் மற்றும் தாயார் இணைந்து குறித்த

(19) பக்கம் பார்க்க...

03



பூர்த்தி

11



ஏன் பிடிக்கிறது?

# வதிவிட உரிமையை தடுக்க முடியாது

### வடக்கு நிலைவரம் குறித்து ஐ.நா.வில் அறிக்கை



(ஜெனிவா)

யுத்தத்துக்குப் பிந்திய இலங்கையில் பொதுமக்கள் தமது வாழ்விடங்களைத் தேர்வு செய்யும் உரிமையும், பொதுமக்களின் நடமாட்டத்துக்கான சுதந்திரமும் தேசிய பாதுகாப்புக்கான இராணுவ கரிசனைக்கு சமனாகப் பேணப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் குறித்த சிறப்புப் பிரதிநிதி சலோகா பெயானி தெரிவித்துள்ளார்.

அண்மையில் தாம் மேற்கொண்ட இலங்கை விஜயம் குறித்தும், இடம்பெயர்ந்த மக்களின் பிந்திய நிலைப்பாடு தொடர்பாகவும் அவர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்குச் சமர்ப்பித்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போரினால் இடம்பெயர்ந்தவர்களின் பிரச்சினைக்கு ஒரு காத்திரமான தீர்வைக் காண்பதற்கு வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட யுக்தி தேவை என்றும் சலோகா பெயானி தெரிவித்தார்.

இலங்கையில் போர்ப்பகுதி

(19) பக்கம் பார்க்க...

## இந்திய மீனவர்கள் 30 பேருக்கு விளக்கமறியல்

யாழ். அனலைதீவு கடற்பரப்பில் வைத்து கடந்த செவ்வாய்க் கிழமை கைது செய்யப்பட்ட 30 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் நீதிமன்றபதில் நீதவான் என்.தம்பிமுத்தன் நேற்று உத்தரவிட்டார்.

இந்திய புதுக்கோட்டை ஜனதாப்பட்டிணம் மற்றும் கோட்டைப்பட்டிணம் பகுதிகளிலிருந்து 8 படகுகளில் 30 மீனவர்கள் யாழ். அனலைதீவுக்கு அண்மித்த கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட வேளையில், காங்கேசன்துறை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 30 மீனவர்களும் யாழ். மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

(19) பக்கம் பார்க்க...

## சுகாதார தொழிலாளர்களுக்கு மீண்டும் தொழில் வாய்ப்பு

### முயற்சிகள் தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையில் சுகாதாரத் தொழிலாளிகளாக நீண்ட காலம் பணியாற்றி அண்மையில் இடைநிறுத்தப்பட்ட ஊழியர்களுடனான கலந்துரையாடலொன்று ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

கட்சியின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி. குகேந்திரன் (ஜெகன்) தலைமையில் இடம்பெற்ற இச்சந்திப்பில் மாநகர சபையில் சுமார் 7 ஆண்டுகள் பணியாற்றிய 30 இற்கும் அதிகமான சுகாதார தொழிலாளிகள் கலந்து கொண்டனர்.

பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டதால் தாம் எதிர்கொள்ளும் அன்றாட வாழ்க்கை நெரு

(19) பக்கம் பார்க்க...

## கலாநிதி நிமலதாசனுக்கு ஆராய்ச்சியாளர் விருது



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கணக்கியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி பாலசுந்தரம் நிமலதாசன், 'சிறந்த விஞ்ஞான ஆராய்ச்சியாளர்' எனும் விருதிற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவிலுள்ள அபிவிருத்தி, விஞ்ஞான மற்றும் கல்வியாளர் சங்கத்தினாலேயே இந்த விருது இவருக்கு வழங்கப்படுகின்றது. இந்த விருது வழங்கலானது எதிர்வரும் 30ஆம் திகதி இந்தியாவின் புதுச்சேரி மாநிலத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கலாநிதி பாலசுந்தரம் நிமலதாசனின் நூற்றுக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஏற்கனவே பிரசுரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (இ)

## சட்ட ஆவணங்கள் வழங்கும் விசேட நடமாடும் சேவை

### கிளிநொச்சியில் நாளை

(கிளிநொச்சி)

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் நீதி நியாயத்தை சமமாக அணுகும் கருத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பூநகரி ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட அனைத்துக் கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் இலவச நடமாடும் சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

நாளையும், நாளை மறுதினமும் இந்த விசேட நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

நாளை கரைச்சி பிரதேச செயலகத்திலும், நாளை மறுதினம் கண்டாவளை பிரதேச செயலகத்திலும் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெறவுள்ளது.

பொதுமக்களுக்கான கீழ்வரும் சேவைகளை இத்தினங்களில் நிறைவேற்றிக்கொள்ளலாம்

(19) பக்கம் பார்க்க...

## காற்றமுத்த தாழ்வுநிலை காங்கேசனுக்கு வடக்கே

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைக்கு வடக்காக 450 கிலோ மீற்றர் தொலைவில் கடலில் ஏற்பட்டிருக்கும் காற்றமுத்தத் தாழ்வு நிலையினால் வடக்கு கடல் அசாதாரணமாகவும் காற்றின் வேகம் மணிக்கு 70 முதல் 80 கிலோமீற்றர் வரை அதிகரிக்கலாம் என்று தெரிவித்துள்ள வானிலை நிலையம் வடக்கு மற்றும் வடமத்திய பகுதிகளில் இடையே மழை பெய்யும்

(19) பக்கம் பார்க்க...

# ஆட்டோ சாரதிகளுக்கு சீருடை; வடபகுதி முழுவதும் ஜனவரி முதல்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்திலுள்ள ஆட்டோச் சாரதிகளுக்கு சீருடை வழங்க வேண்டும் என மாகாண சபையில் பரிந்துரையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரிந்துரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாண சபை உறுப்பினர் கந்தையா சர்வேஸ்வரனால் முன்வைக்கப்பட்டுள்ளது.

வட மாகாண வரவு - செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதம் நேற்று வியாழக் கிழமை இடம்பெற்றது. இதன் போது மாகாண சபை உறுப்பினர் கந்தையா சர்வேஸ்வரனினால் குறித்த பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த சீருடையில் சாரதியின். பெயர் மற்றும் அடையாள அட்டை இலக்கம் ஆகியன பொறிக்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த சீருடை வழ்ங்கும் நடவடிக்கை ஜனவரி முதலாம் திகதியிலிருந்து அமுல்படுத்தப்படும் என வட மாகாண போக்குவரத்து மீன்பிடித்துறை அமைச்சர் பீ. டெனீஸ்வரன் இதற்கு பதிலளித்தார்.

## விபத்தில் சிக்கியவர் மரணம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் படுகாயமடைந்த இளைஞன் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

குறித்த பகுதியில் முச்சக்கர வண்டியும், மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இளைஞன் படுகாயமடைந்துள்ளார்.

இதில் மருதங்கேணி வத்திராயன் பகுதியைச் சேர்ந்த தங்கவேல் கலையமுதன் (வயது - 27) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே மரணமடைந்தவராவார்.

விபத்தில் படுகாயமடைந்த குறித்த இளைஞன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இவர் உயிரிழந்தார். (109)

## மனித உரிமைகள் தினம் கிளிநொச்சியில் இன்று

(கிளிநொச்சி)

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.காரியாலயத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மனித உரிமைகள் தினம் இன்று காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் கிளி.கூட்டுறவு சபை மண்டபத்தில் கொண்டாடப்படவுள்ளது.

முதல் தடவையாக சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்வு கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெறுவது குறித்து தகவல் தெரிவித்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.காரியாலய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவிக்கையில்,

இந்த நிகழ்விற்கு கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீட முதுநிலை விரிவுரையாளரும், முன்னாள் பீடாதிபதியுமான செல்வக்குமரன் பிரதம விருந்தினராகவும், கிளி.மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.ஸ்ரீனிவாசன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் சிவில் சமூகப்பிரதிநிதிகள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், மனித உரிமை ஆர்வலர்கள், முதலானவர்களை கலந்துகொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டார். மேலும் இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் பங்கு பற்றும் விவாத அரங்கும் நடைபெறவுள்ளது. (பா)

## ஒளிவிழா நிகழ்வு

கட்டைவேலி மெதடிஸ்த தேவாலயத்தின் கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு ஒளிவிழாவும், இன்னிசை நிகழ்வும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

தேவாலய அருட்சகோதரி டெய்சி தேவகுமார் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. (109)

## பிரதிஷ்டை வழிபாடு

புனரமைப்புச் செய்யப்பட்ட நெல்லியடி மெதடிஸ்த திருச்சபையின் தேவாலய பிரதிஷ்டை வழிபாடும், நன்றி செலுத்தும் வழிபாடும் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் தலைவர் அருட்திரு.ஜெபநேசன் கலந்து கொள்ளவுள்ளார். (109)



காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் திருவெம்பாவை உற்சவம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற போது· சுவாமி வீதியுலா வரும் காட்சியையும் கலந்து கொண்ட பக்தர்களையும் காணலாம் (10)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(கரணவாய்)

உடுப்பிட்டி நாவலடி சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் 27 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டமும் அமரர் இ.செல்வரத்தினத்தின் நினைவு தின பரிசில் வழங்கலும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தலைவர் கொ.குணசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகன், யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க சமாசத்தலைவர் செ.இலகுநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து நினைவுப் பேருரை நிகழ்வும், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (109,18)

## உள்ளூராட்சி வார நிகழ்வுகள்

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வும், விருந்தினர் கௌரவிப்பும் இன்று காலை 9 மணிக்கு வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சபைத்தவிசாளர் பொ.வியர்கேசு தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடமாகாண போக்குவரத்து, மீன்பிடித்துறை அமைச்சர் பா.டெனிஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (18,109)

* * *

(வடமராட்சி)

பருத்தித்துறை பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வும் பரிசில் வழங்கலும் இன்று பிற்பகல் 2 மணிக்கு புலோலி பொதுநூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபைத் தவிசாளர் பூ.சஞ்சீவன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடமாகாண சுகாதாரத்துறை அமைச்சர் பா.சத்தியலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (109)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2486 திகதி 11-12-2013

ஆங்கில எழுத்து: E

வெற்றி எண்கள் 13 21 57 63

போனஸ் இல: 16

ஜக்பொட் பரிசு ரூ.17,016,275/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 248258 | 20/- | 4,965,160/- |
| 2 இல | 17694 | 100/- | 1,769,400/- |
| 3 இல | 363 | 1,000/- | 363,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9612 | 40/- | 384,480/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 751 | 1,000/- | 751,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 16 | 10,000/- | 160,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 17,016,275/- | - |
| 1 இல + போனஸ் இல | 11802 | 100/- | 1,180,200/- |
| 2 இல + போனஸ் இல | 536 | 500/- | 268,000/- |
| 3 இல + போனஸ் இல | 07 | 100,000/- | 700,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 430 | 200/- | 86,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 27 | 1,500/- | 40,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 01 | 150,000/- | 150,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 289498 | | 11,817,740/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2013.12.14 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 17,692,775/-

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/3212)



## மாடு திருட்டு அதிகரிப்பு

(கொடிகாமம்)

கொடிகாமம் வடக்கு, இராமாவில் மிருசுவில் போன்ற பகுதிகளில் இரவில் மாடுகள் திருட்டுப்போவதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இரவு வேளைகளில் மாடுகளை கட்டி விட்டு காலையில் பார்த்தால் காளை மாடுகள் சிலவற்றை இரவோடு இரவாக திருடிச்சென்று அயல் கிராமங்களில் மறைவான பற்றைக்காணிக்குள் வைத்து இறைச்சிக்காக வெட்டப்படுவதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான சம்பவங்களினால் மக்கள் இரவு நேரப் பொழுதினை அச்சத்தில் களிப்பதாகவும், இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (130)





'இந்துநெறி காப்போம் இந்துவாக வாழ்வோம்'

"ஓம் நமசிவாய ஆன்மீக வங்கி"

இந்துக்களே உங்களுடைய தார்மீக கடமையாக ஓம் நமசிவாய மந்திரத்தினை 1008 முறை எழுதி அருகில் உள்ள ஆலயங்களில் சமர்ப்பித்து எமதுசமயத்தினையும் சமயவிழுமியங்களையும் எம்மக்களையும் காத்திட

அர்ப்பணிப்புடன் ஐந்தெழுத்துமந்திரம் முதலீடு செய்வீர்களாக!

# மீனவர்களுக்கான உயிர்காப்பு அங்கி ஜனவரி முதல் அமுலுக்கு வருகிறது

## கடற்றொழில் நீரியல்வள திணைக்கள உதவிப்பணிப்பாளர் த.கணேசமூர்த்தி

(யாழ்ப்பாணம்)

கடற்றொழிலாளர்கள் கடற்றொழில் நடவடிக்கையின் போது உயிர்காப்பு அங்கி (ஜக்கற்) அணிந்து கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபடுவது எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இருந்து கட்டாயமாக்கப்படவிருப்பதாக யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப்பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் வடமராட்சிக்கடற்பரப்பில் இவ்வாறு உயிர்காப்பு அங்கி இல்லாது கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்றொழிலாளி ஒருவர் படகுகவிழ்ந்து உயிரிழந்த சம்பவம் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே வடமராட்சிக் கடற்பரப்பு போன்ற ஆழமான கடற்பரப்புகளில் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபடும் கடற்றொழிலாளர்கள் உயிர்காப்பு அங்கி அணிந்து கடலுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தனர். இருந்தும் குறித்த கடற்றொழிலாளி அவ்வாறு செல்லாததின் காரணமாகவே உயிரிழந்திருப்பதாகத் தெரிவிததார்.

இந்நிலையில் எதிர்வரும் ஜனவரி மாதம் இந்த நடவடிக்கை கட்டாயமாக் கப்படவுள்ளதாகவும் அத்துடன் ஒரு தொகுதி உயிர்காப்பு அங்கிகள் தென்பகுதியில் இருந்து எடுத்து வரப்படுவதாகவும் இவை வந்து சேர்ந்ததும் கடற் றொழிலாளர்களுக்கு விநியோகிக்கப்படவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(பா)

# சான்றிதழ் கற்கைநெறிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் கணனி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர் (acaomputer Hardware Technician) பயிற்சி நெறியில் தேசிய தொழில் தகைமைச் சான்றிதழைப் பெற யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வித்தகைமையாக, க.பொ.த.(சா/த) வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும், விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவு திகதியன்று 16 - 35 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும்.

தகுதி உடையவர்கள் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமைகள், தொலைபேசி இலக்கம், என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட முகாமையாளர் NAITA, இல 44, சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டும்.

அத்துடன் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கணனி வன்பொருள் கற்கை நெறிக்கான விண்ணப்பம் எனத் தவறாது குறிப்பிடப்பட வேண்டும் என மாவட்ட முகாமையாளர் இ.கிருஷ்ணபாலன் தெரிவித்தார்.

# வடபகுதியில் இந்திய வீட்டுத்திட்டம் 4 ஆயிரம் வீடுகள் இதுவரை பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் சுமார் 4000 வீடுகள் இந்தவருடத்தில் பூர்த்தியாக்கப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்படவிருப்பதாக இலங்கைச செஞ்சிலுவைச்சங்கத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதன் கீழ் யாழ்.மாவட்டத்தில் 1600 வீடுகளும் மன்னார் மாவட்டத்தில் 900 வீடுகளும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 750 வீடுகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 675 வீடுகளும் இவ்வாறு இந்த வருடத்தில் பூர்த்தியாக்கப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்படவிருப்பதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

மேலும் இந்திய வீட்டுத்திட்டத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணப்பணிகள் வடபகுதியில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆதரவுடன் 18000 வீடுகள் நிர்மாணப்பணி தற்சமயம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வீடுகளுக்கான நிதி இந்திய அரசாங்கத்தினால் நேரடியாக பயனாளிகளின் கணக்கில் வரவு வைக்கப்பட்டு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தொழில்நுட்ப உதவியுடன் பயனாளிகளினால் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(பா)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் பின்நவீனத்துவமும் சமூக விளைவுகளும் எனும் தலைப்பில் கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு ஆடிய பாதம் வீதியில் அமைந்துள்ள செயல்திறன் அரங்க இயக்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தொடக்கவுரையினை சி.றமேஸ், கருத்துரையினை ஞா.மீநிலங்கோ ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும்.

# தென்மராட்சி கல்விவலயத்தின் முழுநிலாநாள் கலைவிழா

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சிக் கல்வி வலயம் நடாத்தும் மார்கழித் திங்கள் முழுநிலா நாள் கலை விழா எதிர்வரும் 16ஆம் திகதி காலை 9 மணிக்கு சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.ஸ்ரீதரன், வடக்குமாகாண விவசாயத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்குமாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன், வடக்குமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், வடக்குமாகாண கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா சாவகச்சேரி நகராட்சி மன்ற தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

# தமிழரும் வள்ளுவரும்




தமிழர்களை உலகம் ஏமாற்றுது. இந்தியா ஏமாற்றுது. சிங்கள ஆட்சியாளர் ஏமாற்றுகிறார்கள். இலங்கை அரசாங்கம் ஏமாற்றுது. ஏன் தமிழ்த்தலைவர்களும் தமிழர்களைத் தாராளமாக ஏமாற்றுகிறார்கள்.

அதைப்போல தமிழர்களும் உலகத்தை ஏமாற்றுகிறார்கள்.

[புலம்பெயர் தமிழர்களில் பெரும்பாலானவர்கள் அந்தந்த நாட்டுச் சட்டதிட்டங்களில் ஓட்டைபோட்ட பெரும்கில்லாடிகள். அந்தந்த நாட்டு அரசாங்கங்களுக்கே அந்த நாட்களில் தண்ணி காட்டியவர்கள். இப்பொழுதும் இதுதான் கதை. இதை விட இன்னும் ஏராளம் ஏமாற்றுக்கதைகள் உள்ளன].

இந்தியாவையும் தமிழர்கள் ஏமாற்றினார்கள். தன்னை ஏமாற்றிய குற்றத்திற்குத் தண்டனையை இந்தியா தொடர்ந்த வழங்கிக் கொண்டிருக்கிறது.

அப்படியே நன்மை செய்த இலங்கை அரசையும், அந்த நன்மைகளை வாங்கிக்கொடுத்தவர்களையும் ஏமாற்றியவர்கள் தமிழர்கள்.

அப்படியானபடியால்தான் அவர்களிடம் கிழக்குமாகாணத்தின் எம்.பியான தேவநாயகம் என்ற நீதியமைச்சர் தோற்றார்.

பிறகு இந்து கலாசார அமைச்சர் செல்லையா இராசதுரை தோற்றார்.

தபால்தந்தி அமைச்சர் செல்லையா குமாரசூரியர் தோற்றார்.

இதுபோலப் பல கதைகள் உண்டு.

ஆனால், இவர்கள் எல்லாம் தங்களின் சொந்த நலனுக்காக அரசாங்கத்தைக் கட்டிப்பிடிச்சுக்கொண்டிருந்தவர்கள் இல்லை.

தமிழ் மக்களுக்கான தலைமைகள் என்று சொல்லிக்கொண்டிருந்தவை எவையும் தமிழர்களுக்கு உதவத் தயாரில்லை என்றபோது தங்களால் முடிந்ததைத் தாம் சார்ந்த சமூகத்துக்குச் செய்ய வேணும் என்று கருதிச் செயற்பட்டவர்கள் இவர்கள்.

அரசாங்கத்தை எதிர்த்து ஒரு நல்ல காரியமும் நடக்கப்போவதில்லை எண்டு தெரிந்த பிறகே அதை ஆதரித்தார்கள்.

இவர்களைப்போலத்தான் மலைநாட்டில் தொண்டமான் அரசாங்கத்தை ஆதரித்தார்.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அஷ்ரப் முஸ்லிம் சமூகத்திற்காக அரசுடன் இணைந்து நின்றார்.

அரசாங்கத்தில் இணைந்து நின்றவர்கள் என்பதற்காக அரசின் அத்தனை நடவடிக்கைகளையும் இவர்கள் ஏற்றுக்கொண்டவர்கள் என்றில்லை. தங்கள் சமூகத்தின் நலன்களை எப்படித் தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்பதைப் பற்றியே இவர்கள் அதிகமாகச் சிந்தித்தார்கள்.

இவர்கள் அரசாங்கத்தை முற்றாக எதிர்த்து நிண்டிருந்தால் இந்தச் சமூகத்தினரின் கோவணத்துண்டும் இப்ப இருந்திருக்காது.

அதுக்காக இவர்கள் மலைநாட்டிலும் முஸ்லிம் சமூகத்திலும் பெரிய புரட்சியெல்லாம் செய்தவர்கள் எண்டும் இல்லை.

ஆனால், பாதகமான சூழலுக்குள் சிக்கிவிடாமல் தங்களின் சமூகத்தை ஓரளவுக்குப் பாதுகாத்துக்கொண்டவர்கள்.

இவர்களைப்போலத்தான் தேவநாயகமும் இராசதுரையும் குமாரசூரியரும் ஏதோ தங்களால் ஆகக்கூடியதைச் செய்தார்கள்.

ஆனால், இவர்கள் அமைச்சர்களாக அதிகாரத்தில் இருந்தபொழுது இவர்களுடைய கையையும் காலையும் பிடிச்சுக் காரியம் பாத்துப்போட்டு, பொறுத்த சந்தர்ப்பத்தில் கையைக்கழுவினார்கள் தமிழர்கள்.

அப்படித் தமிழ் மக்கள் கையைக் கழுவியதால் நட்டப்பட்டது குமாரசூரியரோ, தேவநாயகமோ, இராசதுரையோ இல்லை.

கையைக் கழுவிய மக்கள்தான் நட்டப்பட்டு அழிஞ்சார்கள்.

இதைத்தான் வள்ளுவர் முன்னரே சொல்லியிருந்தார்.

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லைச் செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என.

நன்றி மறந்தவர்களை நாயும் மதிக்காது. அவர்களை வரலாறும் மன்னிக்காது.

எப்படித் தேவநாயகத்தையும் இராசதுரையையும் குமாரசூரியரையும் ஏமாற்றலாம் என நினைத்தார்களோ அதைப்போல. இந்த நாட்களில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் பெற வேண்டியதை எல்லாம் பெற்றுக்கொண்டவர்கள், தேர்தலில் தூரநின்றார்கள். ஏமாற்ற முனைந்தார்கள்.

இது தமிழர்களின் கூடப்பிறந்த குணமா அல்லது பழக்க தோஷமா? தெரியவில்லை.

காரியம் ஆகுமட்டும் காலைச் சுற்றிக்கொண்டே நிற்பார்கள்.

பிறகு அந்தக் காலையே வாரிவிட்டுப் பெரிய தூய தத்துவம் பேசுவார்கள்.

அப்படித் தூய தத்துவம் பேசுவோர், தங்களுக்கு மாறானவர்களிடம் உதவியோ சலுகையோ பெறாமல் இருக்க வேண்டியதுதானே.

ஆனால், அதற்கு வக்கில்லை. அது மட்டும் இல்லை அதற்கு வெட்கமும் ரோசமும் கூட இல்லை.

இந்த மாதிரி அறத்துக்கும் நீதிக்கும் நேர்மைக்கும் மனச்சாட்சிக்கும் அறிவுக்கும் மாறான வாழ்க்கையை உலகில் வறு எந்தச் சமூகங்களும் செய்வதில்லை.

இப்படிக் கீழ்த்தரமாக நடந்து கொள்வதால்தான் தமிழர்கள் இன்னும் தோற்றவர்களாக இருக்கிறார்கள்.

ஆமாம், 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லைச் செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்ற வள்ளுவரையே ஏமாற்றித் துரோகம் செய்தவர்கள் தமிழர்கள் இல்லையா!.

உழைப்பு எப்போதும் வீண் போகாது உழைப்பிற்குத் தகுந்த பலன் ஒருநாள் கட்டாயம் கிடைக்கும்.

- சாமுவேல் மைல்ஸ்.

தினமுரசு THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## மண் காத்திட வேண்டும்!

தொழிற்சாலைகளாலும் வாகனங்கள் மற்றும் இரசாயன உபகரணங்களாலும் நாம் காற்றை நஞ்சூட்டிக் கொண்டிருப்பதற்குச் சமமாக இரசாயன உரங்கள், கழிவுகள் மற்றும் கிருமிநாசினிகளால் நிலத்தையும் நஞ்சூட்டிக் கொண்டிருக்கிறோம். பெரும்பகுதியில் சிமெந்தும் தாரும் இட்டு மண் மூச்சுவிட முடியாமல் செய்து கொண்டிருக்கிறோம்.

இரசாயனங்களால் கெட்டழிந்து கொண்டிருக்கும் இந்த மண்ணைக் காக்கும் வழிமுறைகள் பற்றி அவுஸ்ரேலிய விஞ்ஞானிகள் ஆராய்ந்துள்ளனர். மண்ணின் உயிர்ச்சத்தை அதிகரிப்பதற்கு மண்புழு உரம் மற்றும் தாவரக்கரி சேர்ப்பதால் நுண்ணுயிர்கள் பெருகி, மண்ணின் உற்பத்தித் திறன் அதிகரிப்பு ஏற்படும் என்கிறார்கள்.

மண்ணில் வாழும் பெரும்பான்மையான பற்றீரியா, பூசணங்கள், பூச்சி வகைகளனைத்தும் தங்களது உயிர்வாழ் சக்திக்கு, மண்ணின் உயிர்ச் சத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. நல்ல வளமான பூமியில், ஒரு தேக்கரண்டி அளவுள்ள மண்ணில், சுமார் 6 கோடி நுண்ணுயிர்கள் இருக்கிறது.

ஜப்பானில் இந்த நுண்ணுயிர் அதிகரிப்புக்காக 'அக்ரிசார்' எனப்படும் ஒரு லட்சம் தொன் தாவரக்கரி மண்ணிலிடப்படுகிறது. பிரேசில் நாட்டின் பழங்குடியினர் பின்பற்றிய அந்த விவசாயத் தொழில் நுட்பத்தையே தற்போது உயிர்ப்பித்துள்ளனர்.

மண்புழு உரம் மற்றும் தாவரக்கரி இடுவதால் மண்ணின் ஈரம், கடும் கோடையிலும், இது இடாத மண்ணை விட 40 சதவிகிதம் அதிகமாக உள்ளதையும், அதிக விளைச்சல் கிடைத்துள்ளதையும் அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இலைகள் மற்றும் சாணத்தைப் பயன்படுத்தி, மண்புழு உரம் தயாரிக்கலாம்.

மிக வேகமாக வளரும் மலைவேம்பு மரத்தை, வரப்போரம் நட்டு, மிக அதிக விவசாயக் கரியாக உருமாற்றலாம். இதை கோமியம் மற்றும் நுண்ணுயிர் கலவைகளில் கலந்து அடியுரமாக மண்ணிலிடலாம். ஒருமுறை இட்டாலே, 50 முதல் 100 ஆண்டுகள் வரை தொடர்ந்து தாவரக்கரி பயன் அளித்துக்கொண்டே இருக்கும் என அவர்கள் கூறுகின்றனர். தரமிழந்த நிலங்களின் வளத்தையும் இதன்மூலம் மேம்படுத்தலாம் என்கின்றனர்.

அத்துடன், மண்புழு உரமிடுவதால், 30 முதல் 50 சதவிகிதம் அதிக அளவு நைதரசன் சத்தையும், 100 சதவிகிதம் அதிக அளவு பொட்டாசியம் மற்றும் பொஸ்பரஸ் சத்தையும் உறிஞ்சி, செடிகளின் வளர்ச்சியும், விளைச்சலும் அதிகரிக்கும் எனவும் கண்டுள்ளனர். மண்புழு உரமிட்ட பூமிகளில் 100 மடங்கு அதிக அளவு நுண்ணுயிர்கள் உள்ளதும், தாவரங்களின் தரம் காக்கப்படுவதும் உறுதியாகியுள்ளது.

இரசாயன உரங்களுக்குப் பதிலாக இந்த இயற்கைத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மண்ணைக் காக்கும் வழிமுறை பற்றி நாமும் தீவிரமாக யோசிக்க வேண்டும். உண்டி கொடுத்து உயிர் கொடுக்கும் மண்ணைக் காக்காவிட்டால் நாம் காப்பாற்றப்படமாட்டோம்.

மண்மாற்றத்தைச் செம்மைப்படுத்தி, வளத்தையும், நலத்தையும் ஒருங்கிணைக்கவல்ல, அறிவியலால் வாழ்வியலைச் செம்மைப்படுத்த வேண்டும். நீரின்றி அமையாது உலகு என்றால், மண் சீரின்றி அமையாது மன்னுயிர். மண்ணை, பொன்னைவிட இன்றியமையாத கண்ணைப்போல போற்றிக் காத்திட வேண்டும். ஏனென்றால் மண்சத்து தரும் உணவினால் தான் மனிதர் நமது உயிர்ச்சத்து காப்பாற்றப்படுகிறது.

- ஆசிரியர்

# பேருந்து கட்டண அதிகரிப்பு போதாது; சட்ட நடவடிக்கைக்கு ஏற்பாடு

(கொழும்பு)

தனியார் பேருந்து கட்டணம் 7 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டமை போதாது என்பதால் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், அதன்படி 10 சதவீத கட்டண அதிகரிப்புக்கான தீர்ப்பு நீதிமன்றில் கிடைக்கும் என தான் எதிர்பார்ப்பதாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவிததார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதிவேக வீதியில் நாள் ஒன்றுக்கு 80,000 ரூபா வருமானம் கிடைக்கின்றது. அதில் எரிபொருள், சாரதி, நடத்துனர் கட்டணம் கழிய 10,000 ரூபா இலாபம் கிடைக்கின்றது.

ஆனால் சாதாரண பேருந்துகளுக்கு அவ்வாறு இலாபம் கிடைப்பதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இன்று பேருந்து நேர அட்டவணை பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தான் 10 சதவீத பேருந்துக் கட்டண அதிகரிப்பு கோருவது பொது மக்களை பள்ளத்தில் தள்ளுவதற்கு அல்ல எனவும் பேருந்து தொழிலை எழுச்சியடையச் செய்யவே எனவும் கெமுனு கூறியுள்ளார்.

பேருந்து தொழில் வீழ்ச்சிக்கு அரசாங்கம் முழு பொறுப்பு ஏற்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

வரவு - செலவுத் திட்டத்தில் கூட பேருந்து தொழிலை முன்னேற்ற நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பயணியை தடியால் அடித்த பாதுகாப்பு அதிகாரிக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

பயணியை அடித்த ரயில்வே பாதுகாப்பு அதிகாரி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

90 வயதான ரயில் பயணியின் தலையில் தடியால் அடித்ததாக குற்றம் சாட்டப்பட்ட ரயில்வே பாதுகாப்பு அதிகாரியை இன்று வரை தடுப்புக் காவலில் வைக்குமாறு கொழுமபு நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

தலையில் காயமடைந்த இந்த முதியவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

இந்தச் சம்பவத்தை நேரில் கண்ட ஒரு ரயில் பயணி கோட்டை பொலிஸில் முறையிட்டதை அடுத்து ரயில்வே பாதுகாப்பு அதிகாரி கைது செய்யப்பட்டார்.

இந்த முதியவர் பாதுகாப்பு அதிகாரியுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டார் எனவும் அதன் போது இவர் தனது ஊன்று கோலால் பாதுகாப்பு ஊழியரை அடிக்கமுயன்றுள்ளார். பாதுகாப்பு அதிகாரி கோலைப் பறித்து அவரது தலையில் அடிக்க அவர் கீழே விழுந்துவிட்டதாக அப்பயணி தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

சநதேக நபரான எம்.ஜ.மொஹமட் நவாஸ் கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே முன்னிலையில் ஆஜர்ப் படுத்திய போது அவரை இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் பணித்தார்.

# உலகில் வாரி வழங்கும் நாடுகளில் இலங்கைக்கு பத்தாவது இடம்

(கொழும்பு)

உலகில் வாரி வழங்கும் நாடுகளின் வரிசையில் இலங்கை பத்தாவது இடத்தைப் பிடித்துள்ளது.

சர்வதேச நன்கொடை மன்றத்தினால் வெளியிடப்பட்டுள்ள தரப்படுத்தல் பட்டியலில் இலங்கைக்கு பத்தாவது இடம் கிடைத்துள்ளது.

இந்தப் பட்டியலில் அமெரிக்கா முதலாவது இடத்தையும், கனடா, நியூஸிலாந்து மற்றும் மியன்மார் ஆகிய நாடுகள் இரண்டாவது இடத்தையும் பிடித்துள்ளன.

அயர்லாந்து, பிரித்தானியா, அவுஸ்ரேலியா, நெதர்லாந்து, கட்டார் மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன.

# மனைவியை மீட்டுத் தரக்கோரி கணவன் உண்ணாவிரதப் போராட்டம்

(கொழும்பு)

வெளிநாட்டில் பணிப்பெண்ணாக சென்றுள்ள தனது மனைவியை மீட்டுத்தருமாறு கோரி திருகோணமலையைச் சேர்ந்த ஒருவர் மூன்று பிள்ளைகளுடன் நேற்றுக் காலை முதல் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

திருகோணமலை, புல்மோட்டை அரபாத் நகர் -1 ஐச் சேர்ந்த அபூபக்கர் முகமட் ரபக் என்பவரே, பாத்திமா முபிசா (வயது-10) தரம்-5, முகம்மது வசீம் (வயது-8) தரம்- 4, முகம்மது ரொசான் (வயது-3 ) ஆகிய தனது மூன்று பிள்ளைகளுடன் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

வெளி நாட்டுக்குச் சென்றிருந்த தான், நாட்டுக்கு திரும்பிய போது மனைவி வீட்டில் இருக்க வில்லை. அலியார் மைமூனாஸ் என்ற பெயரை கொண்ட தனது மனைவியை அலியார் அஸீமா என பெயரை மாற்றி போலியான அடையாள அட்டையை பயன்படுத்தி வெளி நாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

தனது மன்வியை உள்ளூரிலுள்ள முகவர் ஒருவரே கொழும்புக்கு அழைத்துச் சென்று போலியான ஆவணங்களை தயாரித்து வெளிநாட்டுக்கு அனுப்பியுள்ளார்.

தனது மனைவி 1970.10.05 ஆம் திகதியன்றே பிறந்திருக்கின்றார். எனினும் 857414915 V என்ற இலக்கத்திலேயே அடையாள அட்டை தயாரிக்கப்பட்டுள்ளது. கடவுச்சீட்டு தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட அடையாள அட்டையும் போலியானது. எனது மனைவியுடைய பிறந்த திகதி உள்ளிட்ட ஆதாரங்கள் என்னிடம் இருக்கின்றன.

இது தொடர்பில் கொழும்பிலுள்ள பல பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடு செய்வதற்கு சென்றபோதிலும் பல நிலையங்களில் பொலிஸார் தன்னுடைய முறைப்பாட்டை பதிவுசெய்துகொள்ளவில்லை சில பொலிஸ் நிலையங்களில் முறைப்பாட்டை எடுத்த போதிலும் எந்த விதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையிலேயே தனது மனைவியை உடனடியாக மீட்டுத் தருமாறு உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளதாகவும் உரிய தரப்பினரிடமிருந்து சாதகமான பதில் கிடைக்காவிடின் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

# பொதுச் சுகாதார பரிசோதகர் இல்லாததால் அசௌகரியம்

(கொழும்பு)

சிறைச்சாலைகள் தலைமையகத்தில் பணிபுரிந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கடந்த இரண்டு வார காலமாக காணாமற போயுள்ளதாக தெரிய வருகிறது. பணிக்கு வராமை தொடரபில் குறித்த அதிகாரி சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு இதுவரை அறிவிக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் சிறைச்சாலைகள் தலைமையகத்தில் அசௌகரிய நிலை ஏற்பட்டுள்ளது. குறித்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தொடர்பில் விசாரணை நடத்தி உடன் அறிக்கை சமர்ப்பிக்குமாறு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ஜெனரல் சந்திரரத்ன பல்லேகம அதிகாரிகளுக்கு பணித்துள்ளார். எனினும் குறித்த அதிகாரி ஏதோ ஒரு காரணத்திற்காக பணிக்கு வராது இருப்பதாக இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இது குறித்து சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

**விடுதலைப் புலிகளிற்கென கொண்டு வரப்பட்ட ஆயுதங்கள், திருவான்மியூர் அருகே உள்ள கடற்கரை ஓரமாக இருந்த பிரபாகரனது வீட்டின் காணிக்கு கன்டெயினர் மூலமாக எடுத்து வரப்பட்டு அங்கு வைத்து திறக்கப்பட்டது. புலிகள் இயக்கத்திற்கு ஒரு கன்டெயினரில் ஆயுதங்கள் இறக்கப்பட்டது அதுதான் முதல் தடவையாகும். பிரபாகரன் உட்பட அனைத்து தளபதிகள், போராளிகள் எல்லோருக்கும் ஒரு உற்சாகமான செயற்பாடாகவும் ஒரு திறிலாகவும் இருந்தது. எல்லாம் சரியாக முடிந்த பின் பிரபாகரன் ராமாவரத்திலுள்ள எம்.ஜி.ஆரின் தோட்டத்திற்கு சென்று அவரை சந்தித்து நன்றி தெரிவித்ததுடன் தங்களது செயற்பாடுகள், செயற்திட்டங்கள் தொடர்பாக விரிவாக அவருக்குத் தெரியப்படுத்தினார்.**

வே.அர்ச்சுணன்

# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள் 57



விடுதலைப் புலிகளின் ஆயுதக் கொள்வனவுக்கென கோரப்பட்ட பணத்தினை உடனடியாக வழங்குவதென முடிவெடுக்கப்பட்டதுடன் இதற்குரிய ஏற்பாடுகளையும் புலிகள் இயக்கம் ஏற்படுத்திக் கொடுத்தது. புலிகளின் அனைத்துலக தொடர்பகத்திற்கும் சர்வதேச விவகாரங்களை கையாளுவதற்கான பொறுப்பினையும் இறுதிக் கட்டத்தில் மேற்கொண்டு வந்த கஸ்ரோ என்பவர் இதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டதுடன் ஆயுதக் கொள்வனவிற்கான நிதியுதவிகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு அனைத்துலக நாடுகளிலுமுள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகங்கள் ஊடாக நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

இருந்த போதிலும், இந்த ஆயுதக் கொள்வனவு விவகாரம் மீண்டும் பிசுபிசுத்தே போனது. அதாவது இவர்களது டீலின் போது ஆயுதங்கள் எவையுமே ஐவரிகோஸ்ட்டில் நேரடியாக காண்பிக்கப்படவில்லை. மாறாக புகைப்படங்கள் மட்டுமே காண்பிக்கப்பட்டது. அத்துடன் இவர்கள் கேட்கின்ற ஆயுதங்கள் அனைத்தினதும் புகைப்படங்கள் உடனுக்குடன் காண்பிக்கப்பட்டது. இந்த வேளையில் கூட ஆயுதக் கொள்வனவில் ஈடுபட முனைந்த புலிகள் இயக்கத்தின் புலனாய்வுத் துறை பிரமுகருக்கு சந்தேகம் எதுவும் ஏற்படவில்லை.

அதாவது எல்லா வகையான ஆயுதங்களையும் இவர்களால் எப்படித் தர முடியும்? வேறு நாடுகளின் ஆயுத உற்பத்திகளை உடனடியாக கறுப்புச் சந்தையில் எவ்வாறு கொண்டு வர முடியும்? என்ற சந்தேகங்கள் எவையுமே இந்த புலனாய்வுத் துறை நியமித்த ஆயுதக் கொள்வனவாளருக்கு விளங்கவில்லை.

இந்த நிலைமையை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திய குறித்த வெளிநாட்டு ஆயுத முகவர் இவரை ஏமாற்றி விட்டு இலகுவாகவே காய்நகர்த்துவதற்கு வழிவகுத்தது. அதாவது தன்னை ஆயுத கொள்வனவின் போது ஏமாற்றி விட்டார் அல்லது பெருமளவு பணத்தை சுருட்டி விட்டார்... என்று சட்ட ரீதியாக இவர் எங்குமே முறைப்பாடு செய்ய முடியாது என்பதை ஐவரிகோஸ்டில் இருந்தவர் நன்றாக தெரிந்து வைத்திருந்தமையால் இவரை ஏமாற்றுவது அவருக்கு இலகுவாகி விட்டது.

புலிகள் ஏற்கனவே பல நாடுகளில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களை தங்களது கைவசம் வைத்திருந்தனர். அமெரிக்க இராணுவம் பயன்படுத்துகின்ற எம் 16 ரகத் துப்பாக்கி கடற்புலிகளின் படகுகளில் பயன்படுத்தப்பட்ட ரேதியோன் ராடார் கட்டமைப்பு மற்றும் பிரித்தானிய தயாரிப்பான கடல் ஸ்கூட்டர் உட்பட ரஷ்யா நாட்டு சுடுகலன்கள் மற்றும் பங்களாதேஷ் நாட்டில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஸ்லின் ரக விமானங்கள் உட்பட பல நாடுகளில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களை உடனுக்குடன் தங்களது பயன்பாட்டிற்காக பெற்று வந்தனர். இந்த ஆயுதக் கொள்வனவையும் இதற்குரிய டீலையும் கே.பி எனப்படும் குமரன் பத்மநாதன் மேற்கொண்டு வந்தமையால் இவை அனைத்தும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

ஆனால் கே.பி யை ஓரங் கட்டிய பின்னரே ஆயுதக் கொள்வனவுகள் பிசுபிசுத்துப் போனது. ஆயுதக் கொள்வனவின் அடுத்தடுத்த கட்டங்களில் என்ன நடந்தது என்பதைப் பார்ப்பதற்கு முன்னர் விடுதலைப் புலிகள் இயக்கம் ஆரம்பித்த காலப்பகுதியில் ஆயுதக் கொள்வனவு எப்படி இருந்தது? என்பதை சுருக்கமாகப் பார்த்துவிட்டுச் செல்வது பொருத்தமானதாக இருக்கும்.

ஆரம்பத்தில் இந்தியா ஊடாக ஆயுதக் கொள்வனவை வேறு நாட்டிலிருந்து பெற்று அதனை இந்தியாவிற்கு எடுத்துவர தமிழ்நாட்டு அரசு சம்மதம் தெரிவித்திருந்தது. அதாவது இந்தியாவின் அப்போதைய முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர் உடன் செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டின் பிரகாரம் ஆயுதக் கொள்வனவுகள் தமிழ் நாட்டின் ஆதரவுடன் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வந்தது. இந்த வேளையில் பிரபாகரனிடம் எம்.ஜி.ஆர் ஒரு கோரிக்கையை முன்வைத்தார். அதாவது நீங்கள் கொள்வனவு செய்கின்ற ஆயுதங்களில் ஒவ்வொரு தடவையும் எனக்கு ஒவ்வொரு ஆயுதத்தை ஞாபகார்த்தமாக வழங்கிச் செல்லுங்கள் என்பதே அந்தக் கோரிக்கையாகும்.

அதாவது எந்தவித சிக்கலுமின்றி சென்னைத் துறைமுகத்தில் புலிகளிற்கான ஆயுதங்கள் கன்டெயினர் ஊடாக இறக்கப்பட்டது. இவ்வாறு ஆயுதங்கள் இறக்கப்பட்ட தகவல் பிரபாகரனிற்கு உடனடியாக தெரியப்படுத்தப்பட்ட போது பிரபாகரன் மட்டற்ற மகிழ்ச்சியில் இருந்தார். இந்தியாவில் பிரபாகரன் அப்போது தங்கியிருந்த இடம் பெரியளவில் வசதிகள் இல்லாத ஒரு இடமாக இருந்தபோது எம்.ஜி.ஆர் பிரபாகரனினது வீட்டிற்கு அனைத்து வசதிகளையும் வழங்குதற்குரிய மறைமுகமான ஏற்பாடுகளை உடனடியாகவே மேற்கொண்டிருந்தார். இந்த ஏற்பாடு பிரபாகரனிற்குத் தெரிந்திருந்தால் பிரபாகரன் இதனை சிலவேளை விரும்பமாட்டார் என எண்ணிக்கொண்ட எம்.ஜி.ஆர் வேறு டீல்கள் ஊடாக இந்த வேலைகளை கச்சிதமாக செய்து முடித்தார்.

திருவான்மியூர் அருகே உள்ள கடற்கரை ஓரமாக பிரபாகரனது வீடு இருந்தது. விடுதலைப் புலிகளிற்கென கொண்டு வரப்பட்ட ஆயுதங்கள் குறித்த வீட்டின் காணிக்குள் கன்டெயினர் மூலமாக எடுத்து வரப்பட்டு அங்கு வைத்து திறக்கப்பட்டது. புலிகள் இயக்கத்திற்கு ஒரு கன்டெயினரில் ஆயுதங்கள் இறக்கப்பட்டது அதுதான் முதல் தடவையாகும். பிரபாகரன் உட்பட அனைத்து தளபதிகள், போராளிகள் எல்லோருக்கும் ஒரு உற்சாகமான செயற்பாடாகவும் ஒரு திறிலாகவும் இருந்தது.

எல்லாம் சரியாக முடிந்த பின் பிரபாகரன் ராமாவரத்திலுள்ள எம்.ஜி.ஆரின் தோட்டத்திற்கு சென்று அவரை சந்தித்து நன்றி தெரிவித்ததுடன் தங்களது செயற்பாடுகள், செயற்திட்டங்கள் தொடர்பாக விரிவாக அவருக்குத் தெரியப்படுத்தினார். எம்.ஜி.ஆர் கேட்டபடியே ஏ.கே.47 துப்பாக்கி ஒன்றை அன்பளிப்பாக கொடுத்தபோது எம்.ஜி.ஆர் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்து பிரபாகரனை கட்டி தழுவியதுடன், தமிழீழம் கிடைக்கும்போது நான் உயிருடன் இருந்தால், நீங்கள் வெற்றிபெற்று உங்களுக்கான ஆட்சியை அமைத்துக் கொண்டால், இதைவிடப் பெரிய பரிசு ஒன்றை நான் அங்கு வைத்து உங்களுக்கு வழங்குவேன் என்று கூறினார். ஆனால் பிரபாகரன் முடிவு என்னவாக அமையும் என்பதைத் தெரிந்துகொள்ளாமலே எம்.ஜி.ஆர். காலமாகிவிட்டார்.

இந்த நிலையில், புலிகளிற்கு ஆயுதங்கள் வந்த விவகாரங்கள் றோவிற்கோ அல்லது மத்திய அரசிற்கோ தெரியக் கூடாது என்பதில் எம்.ஜி.ஆர் மற்றும் விடுதலைப்புலிகள் இயக்கம் என்பன உறுதியாக இருந்தனர். ஆனால் றோ அமைப்பினர் எப்படியோ இந்த விடயத்தை மணந்து பிடித்துவிட்டனர். இருந்த போதிலும் இவர்களால் எம்.ஜி.ஆரை மீறி எதுவுமே செய்ய முடியாத சூழலில் இருந்தனர்.

இந்த ஆயுத விவகாரம், விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குள் ஆயுதமிறக்கி தங்களது பெயரை பிரபல்யப்படுத்தும் ஆசையை பலருக்கு ஊட்டியது. ஆனால் இந்த விவகாரத்தை எல்லோரிடமும் நம்பி ஒப்படைக்க முடியாது என்பதில் உறுதியாக இருந்த பிரபாகரன் தனது உற்ற நண்பராகிய சங்கரை இதற்கென தேர்ந்தெடுத்தார். சங்கரின் நிஜப்பெயர் சொர்ணலிங்கம் ஆகும். இவர் பிரபாகரனின் இளமைக் கால நண்பராக இருந்து கனடாவில் சிறிது காலம் வசித்தார். இக்காலப் பகுதியில் கனடாவில் ஏயார்-கனடாவின் மொன்ட்ரியல் மெயின்டெனென்ஸ் ஹாங்கரில் பணிபுரிந்தவர்.

ஏயார்-கனடா, பிரெஞ்ச் தயாரிப்பு ஏயார்-பஸ் விமானங்களின் திசையில் போவதற்கு முந்திய காலம் அது. மொன்ட்ரியல் ஹாங்கரில் அப்போதெல்லாம் DC-9 மற்றும் 727 விமானங்களுக்கே அதிகமாக மெயின்டெனென்ஸ் வேர்க் செய்து கொண்டிருந்தார்கள். இந்த இரு ரகங்களையும் ஏயார்-கனடா 1990களின் ஆரம்பத்திலேயே தலை முழுகிவிட்டது. சங்கர் பணிபுரிந்தது DC-9 ராஸ்டரில். 1983இல் ஏயார் - கனடா வேலையை உதறிவிட்டு சென்னை வந்த சங்கர் தனது இளமைக்கால நண்பர் பிரபாகரனைச் சந்தித்து விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டார். பின்னைய நாட்களில் விடுதலைப் புலிகளின் வான் படையின் பிரதான தளபதியாகவும், சங்கரே திகழ்ந்தார்.

பிரபாகரனைச் சந்தித்த சங்கர் பிரபாகரனுடன் இணைந்து ஆயுதக் கொள்வனவு தொடர்பாக என்ன செய்து கொண்டார்? இவர்களது ஆயுதக் கொள்வனவு வெற்றி அளித்ததா? அடுத்து என்ன நடந்தது? இந்த ஆரம்ப கட்ட நிகழ்வுகளை தமிழ் ஊடகங்கள் அறிந்து கொண்டனவா என்பதை தொடர்ந்து பார்ப்போம்..

(தொடரும்)

# நாகரீகம் என்ற ரீதியில் இலங்கை மீது விமர்சனம்

## பெல்போட்டிங்கர் நிறுவனத் தலைவர்

(கொழும்பு)

இலங்கையை விமர்சிப்பது நாகரிகமாக இருந்து வருவதாகவும், இலங்கை அரசாங்கத்துடன் தொடர்ந்தும் இணைந்து பணியாற்றி வருவதாகவும் பிரித்தானியாவின் பெல்போட்டிங்கர் நிறுவனத் தலைவர் டிம் பெல் தெரிவித்துள்ளார்.

கார்டியன் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இதனை கூறியுள்ளார்.

இலங்கையுட்பட பல அரசாங்கங்களின் தோற்றப்பாட்டை மேம்படுத்தும் சர்வதேச ரீதியான விளம்பரப்படுத்தல், ஊக்குவித்தல் போன்ற பணிகளில் மேற படி நிறுவனம் சேவைகளை வழங்கி வருகிறது.

இலங்கையுடன் நாங்கள் தொடர்ந்தும் பணியாற்றி வருகிறோம். எனினும் வணிக நன்பகத்தனமை மற்றும் எமது வாடிக்கையாளர்களுடனான உத்தியோக பு.ர்வமான இரகசியமான செயறபாடுகள் பற்றிய முழு விபரங்களையும் வெளியிட முடியாது.

இலங்கையை விமர்சிப்பது ஒரு நாகரிகமாக இருந்து வருகிறது. பிரதமர் டேவிட் கமரூன் இலங்கையில் வடக்கில் உறவினர்களை இழந்த 200 பேர் என்ற ஒரு சிறிய கூட்டத்தை சந்தித்தார்.

அங்கு நடந்த 30 வருடகால சிவில் போரை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். தமிழ் புலிகள் கனவான்களோ மென்மையான மனிதர்களோ அல்ல.

பிரித்தானியா உலகம் முழுவதும் மனித உரிமைகளைப் பற்றி பேசுகிறது. பிரித்தானியா ஆப்கானிஸ்தானில் என்ன செய்தது. இது வின்ஸ்டன் சேர்ச்சிலின் இது எங்கள் வழக்கமான ஏற்றுமதி என்பது போன்ற பாசாங்குத்தனம் என்றார்.



தென் ஆபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, கென்யாவுக்கான நான்கு நாள் விஜயத்தை ஆரம்பித்து நேற்றுமுன்தினம் நைரோபி நகரை சென்றடைந்தார். ஜோமோ கென்யாட்டா சர்வதேச விமான நிலையத்தில் வரவேற்கப்பட்டார்.

# 73 பொலிஸாருக்கு எதிராக விசாரணை

(கொழும்பு)

தென் மாகாணத்தைச் சேர்ந்த 73 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக தேசிய பொலிஸ் ஆணைக்குழு விசாரணகளை ஆரம்பித்துள்ளது.


காலி மாவட்டத்தில் 42 உத்தியோகத்தர்கள், மாத்தறை மாவட்டத்தில் 20 உத்தியோகத்தரகள் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 11 உத்தியோகத்தர்களுக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காலி கரன்தெனிய மற்றும் யக்கலமுல்ல ஆகிய பொலிஸ் நிலையங்களில் கட்மையாற்றி வரும் உத்தியோகத்தர்களுக்கு எதிராகவே அதிகளவில் முறைபபாடு செய்யப்பட்டுள்ளன.

அதிகார துஸ்பிரயோகம், இலஞ்ச ஊழல், சந்தேக நபர்களை பலவந்தமாக தடுத்து வைத்தல், கடமைகளை உரிய முறையில் மேற்கொள்ளாமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பெற்றோருக்குப் பின் பிள்ளைகளுக்கு காணியில் சம உரிமை

## காணி அபிவிருத்தி அமைச்சர்



(கொழும்பு)

காணி உரிமை பெற்றோரைத் தொடர்ந்து மூத்த ஆண் பிள்ளைக்கு மட்டுமன்றி பெண் பிள்ளை உள்ளிட்ட அனைத்து பிள்ளைகளுக்கும் சமஉரிமை வழங்கப்படும் வகையில் காணி கட்டளை சட்டத்தில் மறுசீரமைப்பு செய்யப்படுமெனவும் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக்க பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கணக்கெடுப்புகளின் படி காணியில்லாத சுமார் 2 இலட்சம் பேர் நாட்டில் உள்ளனர். தற்போது சராசரியாக 5 ஏக்கர் காணி வைத்திருக்கும் ஒருவர் சுமார் 20 வருடங்களின் பின்னர் 10 பேர்ச் வரையிலான காணியினையே கொண்டிருக்கக் கூடும்.

எதிர்காலத்தில் இவ்வாறான பாரிய காணி பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் ஒரே காணியில் மாடி வீடு அமைத்து வதியும் அனைத்து குடும்பத்தினருக்கும் குறித்த காணிக்கான உரிமைகளை வழங்க தீர்மானிக்கப்பட்டது.

காணிப் பிரச்சினை காரணமாக ஏற்படும் குடும்பத் தகராறுகளை தீர்க்கும் வகையில் இணக்க சபையொன்று உருவாககப்படவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யுத்தகால வாகன மோசடி பிரதிவாதி தடுத்து வைப்பு

(கொழும்பு)

யுத்தகாலத்தில் வடக்கு, கிழக்கில் அத்தியாவசிய பொருட்களை ஏற்றிச் செல்வதற்காக வாடகை அடிப்படையில் அமர்த்தப்பட்ட வாகனங்களை மோசடி செய்தமை தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பிரதிவாதியை தொடர்ந்து தடுத்துவைப்பதற்கு நீதிமனறம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுளளது.

அத்தியாவசிய பொருட்களை ஏற்றிச்செல்வதற்காக வாடகைக்கு அமர்த்தப்பட்ட சுமார் 165 கோடி ரூபா பெறுமதியான 71 வாகனங்கள் மோசடி செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

தனியார் வங்கிகள் சிலவற்றில் காணப்படுகின்ற பிரதிவாதியின் 11 கணக்குகள் தொடர்பான விபரங்களை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு வழங்குமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதவான ஷிரான் குணதிலக்க உத்தரவிட்டார்.

மோசடியின் மூலம் பெற்றுக் கொண்ட பணத்தை, தனது கணக்கிலும், மனைவி மற்றும் பிள்ளைகளின் கணக்குகளிலும் பிரதிவாதி வைப்பு செய்துள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

வங்கிகளில் பணம் வைப்பில் இடப்பட்ட பின்னர், தனது குடும்ப அங்கத்தவர்கள் சகிதம் வெளிநாடு சென்று, சில காலத்தின் பின்னர் மீண்டும் நாடு திரும்பியபோது குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த வழக்கு தொடர்பான மேலதிக விசாரணைகள் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

# ஊடகத்துறை ஒதுக்கங்கள் திருத்தங்களின்றி நிறைவேற்றம்

(கொழும்பு)

வரவு செலவுத் திட்டம் தொடர்பான நாடாளுமன்ற விவாதத்தில் நேற்று முன்தினம் ஊடகத்துறை அமைச்சுக்கான ஒதுக்கங்கள் திருத்தங்கள் இன்றி நிறைவேற்றப்பட்டது.

இதன்போது இடம்பெற்ற விவாதத்தில் அரசாங்கம் மற்றும் எதிர்கட்சிகளின் உறுப்பினர்கள் வெவவேறு கருத்துக்களை முன்வைத்தனர்.

இதில் உரையாற்றிய கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.துமிந்த சில்வா, ஊடகங்கள் தங்களின் சொந்த நிலைப்பாட்டை அல்லாமல், பொது நிலைபபாட்டையே வெளிப்படுத்தவேண்டும்.

இந்த காலத்தில் ஊடகங்கள், அரசியல் வாதிகள் குறித்த செய்திகளை வெளியிடும்போது, அவர்களின் குற்றங்கள் குறித்தே தமது செய்தியை ஆரம்பிக்கின்றன.

ஊடகங்கள் எப்போது பொதுவான நிலைப்பாட்டில் செயற்பட வேண்டும் என்பதுடன், உண்மையை மாத்திரமே கூற வேண்டும்.

எதிர்கால ஊடக சுதந்திரம் மற்றும் தகவல் அறியும் சுதந்திரம் குறித்து பேசுகின்றனர்.

ஆனால் தற்போது சில ஊடகங்களில் தொழில் புரிகின்ற ஆசிரியர்கள் மற்றும் செய்தியாளர்களின் சுதந்திரம் எவ்வாறு அமைந்திருக்கிறது?

ஊடக சுதந்திரம் குறித்து பேசுகின்றவர்கள், ஊடக தொழில் தர்மத்தை பின்பற்றுகின்றனரா?

தற்போது ஊடகவியலாளர்கள் தாம் பணியாற்றுகின்ற ஊடக நிறுவனத்தின் கொள்கைகளின் அடிப்படையிலேயே செயற்படவேண்டிய நிலைமைகள் காணபபடுகின்றது.


ஊடகவியலாளர்கள் அவர்களின் நிறுவனத்திற்குள்ளேயே சுதந்திரமான முறையில் செயற்படக்கூடிய சூழ்நிலை காணப்படுகிறதா? என்றார்.

இதன்போது உரையாற்றிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பி.அரியநேந்திரன், ஊடகவியலாளர்களின் கொலைகள் தொடர்பில் இது வரையில் யாரும் தண்டிக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்து உரையாற்றிய ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன், இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள ஊடகங்களுக்கு ஊக்கமளிக்கவேண்டும் என்று தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற மோசமான சில சம்வங்களின் நினைவு நாட்களை அனுஷ்டிக்கக்கூடிய பொறிமுறை ஒன்று முன்வைக்கப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# போத்தல் குடிநீரின் சுகாதாரநிலை ஆராய்வு




(கொழும்பு)

போத்தல்களில் அடைக்கப்பட்ட குடிநீரின் தரம், சுகாதாரத் தன்மை தொடர்பாக உணவு மற்றும் சுகாதாரப் பணியகம் கவனம் செலுத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சின் மீதான குழு நிலை விவாதத்தில் பதிலளித்து உரையாற்றும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

சபையில் அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில், 6 பேரிடமிருந்து சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

இவர்களின் சாட்சி.யங்களின் அடிப்படையில் எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்துக்குள் எம்.எஸ்.டி.பீ.எஸ்.டி உட்பட மோப்ப நாயின் உதவியுடன் சோதனையிட்ட போது பாம்பு இருப்பது கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் பூச்சாடியின் ஊடாக பாம்பு உள்ளே வந்திருக்க முடியுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

பூச்சாடிகள் கொண்டு வரப்பட்டபோது அது முழுமையாக பரிசோத னைக்கு உட்படுத்தப்படவில்லையென்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்படி கீழ் தளத்திலிருந்து பூச்சாடிகள் மேலே கொண்டு வரும் போதும் முழுமையாக சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றும் வாரத்தில் ஒரு முறை பூச்சி கொல்லி மருந்துகள் தெளிக்க வேண்டுமென்று விசாரணைக் குழு பரிந்துரை செய்துள்ளது எனத் தெரிவித்துள்ளார்.




மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலையில் பணியாற்றி ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி க.நடராசாவுக்கான சேவை நலன் பாராட்டுவிழா வைத்தியசாலை ஊழியர்களினால் அண்மையில் நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் தற்போதைய வைத்திய அதிகாரி ஆ.காந்தநேசன் வைத்திய அதிகாரிக்கு பாராட்டுப் பத்திரம் வழங்கு வதையும், ஊழியர்களுடன் அமர்ந்திருப்பதையும் காணலாம். (104)

# பண்பாடு சார் தொல்பொருட்கள் பாதுகாக்கப்படுவது அவசியமாகும்

## பாடசாலை அதிபர் தவகீஸ்வரன்

(யாழ்.நிருபர்)

தமிழ் மக்களுடைய பண்பாட்டைப் பிரதிபலிக்கும் புண்டைய அரும்பொருட்கள் பேணிப்பாது காக்கப்பட வேண்டும். இப் பொருட்கள் தமிழர் வரலாற்றின் பண்பாட்டுச் சான்றுகள் என்பதை இன்றைய இளையதலைமுறையினர் அறிந்துகொள்வதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுப்பது அவசியமாகும் என கோண்டாவில் இந்து மகாவித்தியாலய அதிபர் கே.கே.தவகீஸ்வரன் தெரிவித்தார்.

கோண்டாவில் இந்து மகா வித்தியாலய நூலகத்துடன் இணைந்த அரும்பொருட்காட்சியகத்தைத் திறந்து வைத்து உரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். நூலகப் பொறுப்பாசிரியர் இ.இராஜ்குமார் தலைமையில் அண்மையில் நடைபெற்ற இவ் விழா வில் அவர் தொடர்ந்து பேசுகையில்,

மூக்குப் பேணி என்றால் என்ன என்று விசித்திரமாகப் பார்க்கும் நிலையில் இன்றைய மாணவர்கள் இருக்கிறார்கள். குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் மோர், தேநீர் போன்ற பானங்களை அருந்துவதற்கு மூக்குப்பேணி பயன்படுத்தப் பட்டது. இது தமிழர் சுகாதார முறைப்படி பானங்களை அருந்துவதற்குப் பயன்படுத்திய பாத்திரமாகும்.

இவ்வாறு மத்து, திருகை, அம்மி குழவி, அண்டா, கிடாரம், குண்டுச்சட்டி போன்றவையும், உறி, திருகாணி, பட்டை போன்ற பனையோலைப் பாவனைப் பொருட்களும் இன்று அருகி வருகின்றன.

பழைய காற்சதம், அரைச்சதம், ஒருசதம், இரண்டு சதம் போன்ற சில்லறை தாள் நாணயங்கள் இன்று புழகத்தில் இல்லை இவைபோன்ற பொருள்களை ஒவ்வொரு பாடசாலைகளும் தமது நூலகங்களில் பேணிப்பாதுகாக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார். நூலகப் பொறுப்பாசிரியர் இ.இராஜ்குமார் நன்றி நவின்றார். (10)

# அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தினால் 'சமகால முகாமைத்துவ சர்வதேச ஆய்வரங்கு' ஒன்று அடுத்த வருடம் மார்ச் மாதம் 14ஆம், 15ஆம் திகதிகளில் நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வரங்கானது உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் ஆய்வாளர்களை ஒருங்கிணைத்துத் தத்தமது ஆய்வுகளுக்குரிய முடிவுகளை வெளிக்கொணரும் ஓர் சந்தர்ப்பத்தினை வழங்கவுள்ளது. இதன் பிரகாரம் இவ்வாய்வரங்கு தொடர்பான அறிமுகநிகழ்வு நாளை சனிக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் யழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சபா மண்டபத்தில் நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# தொழிற் பயிற்சி அதிகாரசபையின் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தினால் பின்வரும் கற்கைநெறிகள் எதிர்வரும் 2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது. தகவல் தொடர்பாடல், தொழில் நுட்பவியலாளர், கட்டட நிர்மாண உதவியாளர், மோட்டார் சைக்கிள் திருத்துனர், வீட்டு மின்னிணைப்பாளர், காய்ச்சி இணைப்பாளர் (வெல்டிங்), ஆடை வடிவமைப்பாளர் வெளியிணைப்பு இயந்திரம் திருத்துனர், மரவேலை தொழில் நுட்பவியலாளர் (தளபாடம்) ஆகிய கற்கைநெறிக்கு தேசிய தொழில்தகைமை (NVQ) சான்றிதழ் வழங்கப்படவுள்ளது. இக் கற்கைநெறிகளை கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை மாவட்ட அலுவலகம், 1ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே. எஸ்.வீதி, யாழ்ப்பாணம் (தொ.பே.021 222 7949) அல்லது காரைநகர் பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் தெரிவித்தார்.

# வீதிப்புனரமைப்பால் இலகுபடுத்தப்படும் பயணம்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை பிரதேசசபைக்குட்பட்ட ஜே/232 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள பட்டிக் கடவை கிராமத்தில் வீதிகள் தார் இட்டு அமைக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

மக்களின் போக்குவரத்தினை இலகு படுத்தும் நோக்கில் மேற்படி செயற்றிட்டம் பிரதேசசபையால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. நீண்ட காலமாக இடம்பெயர்ந்து தற்போது மீளக்குடியமர்ந்த இம்மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுவதை இட்டு மக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். (17)

# பொதுக்கூட்டம்

(யாழ்.நிருபர்)

கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திருமதி வாசுகி தவபாலன் தலைமையில் நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் எதிர்கால அபிவிருத்தித்திட்டங்கள் பற்றி ஆராயப்படுவதோடு பழைய மாணவர்சங்க புதிய நிர்வாக சபை உறுப்பினர் தெரிவும் இடம்பெறவுள்ளதால் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு செயலாளர் இ.திருப்புகலூர்சிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (10)

# "கழுகுநிழல்" கட்டுரைத்தொகுப்பு நூல் அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)




கோவை நந்தனின் கழுகு நிழல் கட்டுரைகளின் தொகுப்பு யாழ்ப்பாணம் அறிமுக நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பொதுநூலகபின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கவிஞர் கருணாகரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை சட்டத்தரணி ரெங்கன் தேவராஜன், ஆய்வுரையை இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர் அனந்த பாலகிட்ணர் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து மறவன்புலவு க.சச்சிதானந்தன், எஸ்.எஸ்.குகநாதன், என்.உருத்திரமூர்த்தி ஆகியோர் உரையாற்றவுள்ளனர். தொடர்ந்து இன்றைய இலங்கையின் தமிழ் அரசியல் நெறிப்படுதல் என்னும் விடயம் பற்றி ஜெயச்சந்திரனின் கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது.

# முரசின் இன்றைய பலன்




(13.12.2013 வெள்ளிக்கிழமை)

விஜய வருஷம் கார்த்திகை மாதம் 27 ஆம் திகதி.
ஏகாதசி விரதம். ஏகாதசி/அமிர்த சித்தம்.
அச்சுவினி நட்சத்திரம் மு.இ.07.04 வரை. பின் பரணி.
இராகுகாலம 10.50 - 12.20 வரை. சுபநேரம 06.20 - 07.50 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வெளியூர் உறவினர் வருகையினால் மகிழ்ச்சி, சோடிக்கப்பட்ட பழி அற்றுப்போதல். |
| ரிஷபம் | மனையை திருத்தியமைக்க நகையை அடகு வைத்தல், இழுபட்ட விவாகம் சம்மதத்திற்கு பச்சைக் கொடி காட்டல். |
| மிதுனம் | நீரிழிவுநோயினால் தேக சுகப்பாதிப்பு, மகிழ்ச்சியான செய்தியால் குடும்பத்தில் குதூகலம். |
| கடகம் | குறுக்கறுத்த பிராணியுடன் ஏற்படவிருந்த விபத்து விலகிவிடல், வெளியூர் பயணம் பணப் பிரச்சினையால் ஒத்திவைத்தல். |
| சிம்மம் | திறமையை மேலதிகாரிகள் பாராட்டியதால் மகிழ்வு, தேங்கிய பொருட்கள் அதிரடியாக விற்பனையாதல். |
| கன்னி | பிதாவின் தேகநலம் விருத்தியடைந்ததால் கவலை மறைதல், புதியன ஆரம்பிக்குமுன்னர் சோதிடர் மூலம் உகந்த காலத்தை அறிதல். |
| துலாம் | ஏழரைச்சனி நடப்பதினால் பயணம் பற்றிய செயற்பாட்டில் தேக்கநிலை, விவாக முயற்சி இழுபட்ட வண்ணம் இருத்தல். |
| விருச்சிகம் | நீண்டநாள் கடன் தொல்லை அகன்றதால் நிம்மதி, புதிய முயற்சி ஆரம்பிக்க சகோதரர் உதவி. |
| தனுசு | பிரச்சினையைத் தீர்த்து வைக்க தெய்வத்தை மன்றாடுதல், தவறியவர் பற்றிய தகவல் அறிய முயற்சியில் இழுபடல். |
| மகரம் | விவாக முயற்சி இழுபடுவதினால் கவலையில் மூழ்குதல், முரண்பட்டிருந்த மாமன் உறவில் சகஜநிலை ஏற்படல். |
| கும்பம் | குழந்தைப் பேற்றினால் குதூகலமேற்படல், உயர் கல்விக்காக அயல் நாடு செல்ல ஆயத்தனித்தல். |
| மீனம் | குணப்படுத்தாதிருந்த நோய் மாறியதால் பதட்டம் நீங்கல், அநாமதேய தொலைபேசிச் செய்திகேட்டு பதகளிப்பு நிலை. |





# வெண்கலப் பதக்கம் வென்ற அனுஷனுக்கு மாபெரும் வரவேற்பு

(கோண்டாவில்)

விசேட ஆசிய பசுபிக் ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற அனுஷன் மற்றும் இப்போட்டியில் பங்கு பற்றிய துஷ்யந்தன், ராஜன் பிளக்னோ ஆகியோருக்கு மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஆசிய பசுபிக் விசேட ஒலிம்பிக் போட்டி கடந்த வாரம் அவுஸ்ரேலியாவின் நியூகாஸ் நகரில் நடைபெற்றது. இதில் வடமாகாணம் சார்பாக கோண்டாவில் சிவபூமி மன விருத்தி பாடசாலையைச் சேர்ந்த எஸ். துஷ்யந்தன், எஸ். அனுஷன், ராஜன் பிளக்னோ ஆகியோர் பங்குபற்றினர்.

இதில் எஸ். அனுஷன் 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெண் கலப் பதக்கம் வென்று அசத்தினார். இப்பிரிவில் எஸ். துஷ்யந்தன் இறுதி நேரத்தில் தடக்கி வீழ்ந்ததினால் பதக் கத்தைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் நாடு திரும்பிய மேற்படி மூன்று வீரர் களுக்கும் சிவபூமி மனவிருத்தி பாடசாலைச் சமூகத்தினால் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டதுடன் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது. வீரர்கள் பலாலி வீதி கோண்டாவில் சந்தியிலிருந்து கோண்டாவில் சிவபூமி மனவிருத்தி பாடசாலை வரை மேளவாத்தியங்கள், மேலைத்தேய இசையுடன் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர். கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது.

இக்கௌரவிப்பு நிகழ்வில் விளை யாட்டுத்துறையைச் சேர்ந்த அதிகாரிகள், கல்வி அதிகாரிகள், விளையாட்டு நலன் விரும்பிகள், ஆர்வலர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்துகொண்டு வீரர்களை வாழ்த்தி கருத்துத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (48, 137)

# ஷரபோவா தோல்வி

காயம் காரணமாக ஓய்வில் இருந்த முன்னணி ரென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவா மீண்டும் களமிறங்கினார். கொலம்பியாவின் போகோடா நகரில் நடை

பெற்ற காட்சிப் போட்டியில் சேர்பியாவின் அனா இவானோவிச்சிடம் 6-1,1-6,12-10 என்ற செட் கணக்கில் ஷரபோவா தோல்வி யடைந்தார். தரவரிசையில் 4ஆவது இடத்தில் உள்ள ஷரபோவா கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற சின்சினாட்டி ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் முதல் சுற்றில் காயமடைந்து வெளியேறினார். வலது தோள்பட்டையில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் கடந்த 4 மாதங்களாக எந்த ரென்னிஸ் போட்டியிலும் பங்கேற்கவில்லை. இந்நிலையில் கொலம் பியாவில் நடைபெற்ற காட்சிப் போட்டியில் அவர் பங்கேற்றார்.

# 3ஆவது ஆஷஸ் டெஸ்ட் இன்று ஆரம்பம் அரங்கேறும் ஆச்சரியமான சாதனை

(பேர்த்)

அவுஸ்ரேலியா-இங்கிலாந்து கிரிக் கெட் அணிகள் இடையிலான ஆஷஸ் டெஸ்ட் தொடரின் 3ஆவதுபோட்டி உல கின் அதிவேக ஆடுகளமான பேர்த்தில் இன்று ஆரம்பமாகவுள்ளது. இந்த டெஸ்டில் ஆச்சரியமான ஒரு சாதனை அரங்கேறப்போகிறது.

அவுஸ்ரேலிய கப்டன் 32 வயதான மைக்கல் கிளார்க்குக்கு இது 100 ஆவது டெஸ்ட் போட்டியாகும். இந்த மைல்கல்லை எட்டும் 12ஆவது அவுஸ் ரேலிய வீரர் கிளார்க் ஆவார். தனது 98, 99ஆவது டெஸ்ட்களில் சதம் அடித்த அவர் செஞ்சரி டெஸ்டிலும் சதம் விளாசும் ஆவலில் இருக்கிறார். 2004ஆம் ஆண்டு பெங்களூரில் நடந்த இந்தியாவுக்கு எதிரான டெஸ்டில் சதத்துடன் சர்வதேச டெஸ்ட் அரங்கிற்குள் நுழைந்த கிளார்க் இதுவரை 26 சதங்கள் உள்பட 7940 ஓட்டங்கள் (சராசரி 52.58) குவித்து இருக்கிறார்.

இந்த மாத இறுதியில் 29ஆவது பிறந்த நாளை கொண்டாடவுள்ள இங்கிலாந்து கப்டன் குக்கிற்கும் இது 100ஆவது டெஸ்ட் போட்டியாகும். 2006ஆம் ஆண்டு நாக்பூரில் நடந்த இந்தியாவுக்கு எதிரான டெஸ்டில் அறி முகம் ஆனதுடன், இவரும் முதல் போட்டியிலேயே சதம் அடித்து பிர மாதப்படுத்தினார். இதுவரை 25 சதங்கள் உள்பட 7883 ஓட்டங்கள் (சராசரி 47.20) சேர்த்துள்ள குக், 100ஆவது டெஸ்டில் ஆடப்போகும் 11ஆவது இங்கிலாந்து நாட்டவர் ஆவார்.

கிரிக்கெட் வரலாற்றில் ஒரே போட்டியில் இரு அணிகளின் கப்டன் களும் தங்களது 100ஆவது டெஸ்டில் விளையாட இருப்பது அரிய நிகழ்வு களில் ஒன்றாகும். உலக அளவில் மொத்தம் 56 பேர் 100 டெஸ்ட்களுக்கு மேல் விளையாடி இருக்கிறார்கள். இவர்களில் 7 பேர் தங்களது 100ஆவது டெஸ்டில் சதம் அடித்து சரித்திரம் படைத்திருக்கிறார்கள். இந்தப்பட்டியலில் கிளார்க், குக் இணைவார்களா? என் பதைப்பொறுத்திருந்து பார்ப்போம்.

# வலுவான நிலையில் நியூசிலாந்து



மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி வலுவான நிலையில் உள்ளது.

மேற்கிந்தியத்தீவு, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது டெஸ்ட் போட்டி நியூசிலாந்தின் வெலிங்டன் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித் தது. இதற்கமைய முதல் இனிஸிற்காக ஆடிய நியூசிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 441 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரெய்லர் 129, வைற்லிங் 65, வில்லியம்ஸன் 45, மக்கலம் 37, ஜே. அண்டர்சன் 38 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பெஸ்ட் நான்கு, டரன் சமி இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிவரும் மேற்கிந்தியத்தீவுகள் அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, நான்கு விக்கெட்டுக்களை இழந்து 158 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எட்வேர்ட்ஸ் 55, பவள் 21 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். ஆட்டமிழக்காது சாமுவேல்ஸ் 50 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். பந்துவீச்சில் ஜே. அண்டர்சன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

# கைவிடப்பட்டது 3ஆவது ஆட்டம்

இந்திய, தென்னாபிரிக்க அணிகளுக்கிடை யிலான மூன்றாவது ஒருநாள் போட்டி கன மழை காரணமாக கைவிடப்பட்டுள்ளது. செஞ்சூரியனில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணி 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 301 ஓட்டங்களைக் குவித்தது. இதில் ஏடி..வில்லியர்ஸ் 101 பந்துகளில் 109 ஓட்டங்களையும், குயின்டன் டீ கொக் 120 பந்துகளில் 101 ஓட்டங்களையும் பெற்ற னர். இதில் குயின்டன் டீ கொக் இந்தத் தொட ரில் 3 தொடர்ச்சியான சதங்களைக் குவித்தமை குறிப்பிடத்தக்கது. தவிர, டேவிட் மில்லர் 34 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 56 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் இசாந்த் சர்மா 40 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். தென்னாபிரிக்க அணியின் துடுப்பாட் டத்தின் பின்னர் மழை தொடர்ச்சியாகப் பெய்ததன் காரணமாக இந்திய அணி துடுப்பெடுத்தாட ஆரம் பித்திருக்கவில்லை. தொடர்ந்து பெய்த கன மழை காரணமாக போட்டி கைவிடப்படுவதாக அறிவிக் கப்பட்டது.3 போட்டிகள் கொண்ட இந்தத்தொடரை தென்னாபிரிக்க அணி 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியதோடு, இத்தொடரின் நாயகனாக குயின் டன் டீ கொக் தெரிவானார்.

# இறுதியில் பாசையூர் சென். அன்ரனீஸ்




(யாழ்ப்பாணம்)

மைலோ கிண்ணக் கால்பந்துத் தொட ரின் இறுதிப் போட்டிக்கு பாசையூர் சென். அன்ரனீஸ் அணி தகுதி பெற்றுள்ளது. இதேவேளை, ஊரெழு றோயல் அணி அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறி யுள்ளது.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட விளையாட்டுச் செயலகப் பிரிவினரால் முதன் முறையாக யாழ்ப்பாணம், பருத் தித்துறை லீக் அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்டு வரும் மைலோக் கிண் ணக் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டி யாழ். துரையப்பா விளையாட்டு அரங் கில் நடைபெற்று வருகின்றது.

நேற்றைய தினம் காலிறுதிப் போட்டி ஒன்றும், அரையிறுதிப் போட்டி ஒன்றும் நடைபெற்றது. காலிறுதிப் போட்டியில் பருத்தித்துறை கொலின்ஸ் அணியும், ஊரெழு றோயல் அணியும் மோதின. இரு அணிகளும் ஒன்றுக் கொன்று சளைத்தவை அல்ல என் பதை வெளிப்படுத்தும் வகையில் ஆடி யது. இதன் காரணமாக போட்டி நிறை வுற்றவேளை இரு அணிகளும் இரு கோல்களைப் போட்டு சமநிலையில் இருந்தன. இந்நிலையில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப் பட்டது. இதில் ஊரெழு றோயல் அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் பாசையூர் சென். அன்ரனீஸ் அணியும், பொலிகை விண்மீன் அணியும் மோதின. முற்பாதி ஆட்டத்தில் சென். அன்ரனீஸ் ஒரு கோலைப் போட்டு முன்னிலை பெற்றது. இதற்குப் பதிலடி கொடுக்கும் முனைப் புடன் விண்மீன் அணி செயற்பட்டபோதும் முற்பாதி ஆட்டத்தில் அது முடிய வில்லை. பிற்பாதி ஆட்டத்தில் எழுச்சி யுற்ற விண்மீன் அணி ஒரு கோலைப் போட்டு போட்டியைச் சமப்படுத்தியது. தொடர்ந்து இரு அணிகளும் மேலதிக கோலைப்போட்டு வெற்றியைப்பெற்றுக் கொள்ள ஆக்ரோஷத்துடன் செயற்பட் டது.இதில் போட்டி நிறைவடைய ஐந்து நிமிடங்கள் இருக்கையில் பாசையூர் சென். அன்ரனீஸ் அணி மேலும் ஒரு கோலைப் போட்டு முன்னிலை பெற்றது. இதற்குப் பதில்டி கொடுக்கும் முனைப் பில் விண்மீன் அணி செயற்பட்டபோதும் இறுதி வரை அது கைகூடவில்லை. நிறைவில் பாசையூர் சென். அன்ரனீஸ் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இரண்டாவது அரையிறுதிப் போட்டி இன்றைய தினம் காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து நாவாந் துறை சென். மேரிஸ் அணி மோதவுள் ளது. இப்போட்டிக்கு நடுவர்களாக யாழ்ப்பாண லீக் மத்தியஸ்தர் சங்கத்தைச் சேர்ந்தோர் கடமையாற்றி வருகின்றனர். கொட்டும் மழைக்கும் மத்தியில் நூற்றுக்கணக்கான இரசிகர்கள் போட்டியைக் கண்டுகளித்தமை குறிப் பிடத்தக்கது. (எஸ்.பி.)

# பாடுமீன், சென். அன்ரனீஸ் இறுதியில் இன்று பலப்பரீட்சை


குருநகர் பாடுமீன்


பாசையூர் சென். அன்ரனீஸ்

(உரும்பிராய்)

யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக் தலைவர் கிண்ணக்கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி இன்றைய தினம் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக்கில் அங்கத்துவம் பெற்றுள்ள அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட லீக் தலைவர் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் லீக்கில் அங்கத்துவம் பெற்ற அனைத்து அணிகளும் மோதின. விலகல் முறையில் நடைபெற்ற இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு குருநகர் பாடுமீன் அணியும், பாசையூர் சென். அன்ரனீஸ் அணியும் தகுதி பெற்றது.

இரு அணிகளுக்குமிடையிலான இறுதிப் போட்டி இன்றைய தினம் பிற்பகல் 3.00 மணிக்கு துரையாப்பா விளையாட்டு மைதானத்தில் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டிக்குப் பிரதம விருந்தினராக இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் சிறப்பு அதி தியாகக் கலந்து கொள்ளவுள்ளார். இப்போட்டி நிகழ்வில் அனைத்து கால்பந்தாட்ட இரசிகர்களையும் கலந்துகொண்டு போட்டியாளர்களை உற்சாக மூட்டுமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். (எஸ்.பி.)

**விளையாட்டுச் செய்திகள்**

## இன்று வலிகாமம் லீக் இணைப்பு

(உடுவில்)

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கை இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்துடன் இணைக்கும் நிகழ்வு இன்றைய தினம் காலை 10.30 மணிக்கு உடுவில் பிரதேச செயலக மண்டத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் றெட்டிக்கோ கலந்துகொள்ளவுள்ளார்.

கடந்த பல வருடங்களாக வலிகாமம் கால்பந்தாட்ட லீக் இயங்கி வந்தபோதும், இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தில் அது இணைக்கப்பட்டவில்லை. பின்னர் யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக்கினர் பெரு முயற்சியாலும், வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் முயற்சியாலும் மேற்படி லீக் இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்துடன் இணைத்துக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

## சென். நியூஸ்ரார், அண்ணா அணிகள் அரையிறுதிப் போட்டிக்கு முன்னேற்றம்

(அராலி)

அராலி மாவத்தை விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதிக்கு சென். நியூஸ்ரார் மற்றும் அண்ணா ஏ அணிகள் தகுதி பெற்றுள்ளன.

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அராலி மாவத்தை விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் மாபெரும் கால்பந்தாட்டப் போட்டிகள் மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

விலகல் முறையில் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடரில் வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கில் அங்கத்துவம் பெற்றுள்ள அணிகள் மோதி வருகின்றன.

வட்டுக்கோட்டை அணிக்கும் சென். நியூஸ்ரார் அணிக்குமிடையிலான போட்டியில் சென். நியூஸ்ரார் 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து கலைவாணி அணிக்கும் வானவில் அணிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் இரு அணிகளுமே 2-2 என்ற கோல் கணக்கில் இருந்த நிலையில் போட்டி சமநிலையில் நிறைவுற்றது. இதன் பின்னர் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் வானவில் அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் திருமகள் அணியும், சென். நியூஸ்ரார் பி அணியும் மோதின. இதில் திருமகள் அணி 7-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. மற்றுமொரு போட்டியில் வட்டுக் கோட்டை பி. அணியும் அண்ணா பி அணியும் மோதின. இதில் அண்ணா பி அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து அண்ணா ஏ அணியும், சென். கொலின்ஸ் அணியும் மோதின. இதில் அண்ணா ஏ அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

அடுத்த போட்டியில் வானவில் அணியும், சென். நியூஸ்ரார் ஏ அணியும் மோதின. இதில் சென். நியூஸ்ரார் அணி 5-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இதேவேளை, இன்றைய தினம் நடைபெறவுள்ள காலிறுதிப் போட்டிகளில் அண்ணா பி, பாரதி, வளர்மதி, திருமகள் அணிகள் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

## அப்ரிடியின் அதிரடியில் அடங்கியது இலங்கை

(டுபாய்)


அப்ரிடியில் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் பாகிஸ்தான் அணி மூன்று விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.


இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட ருவெண்ரி-20 தொடரின் முதல் ஆட்டம் நேற்று முன்தினம் டுபாயில் நடைபெற்றது.


சர்வதேச கிரிக்கெட் சபையின் ஹால் ஓ ப் பேம் கௌரவம் நேற்று முன்தினம் பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் வாக்கர் யூனிஸிற்கு வழங்கப்பட்டது. இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது ருவென்ரி-20 போட்டியின் போதே ஐ.சி.சி.யினால் இக்கௌரவம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 145 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மத்தியூஸ் 50, சண்டிமல் 22, சங்கக்கார 21, திரிமன்ன 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சயிட் அஜ்மல், சோஹைல் தன்வீர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 146 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 19.1 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் எஸ். கான் 34, கப்டன் மொகமட் ஹபீஸ் 32, அப்ரிடி ஆட்டமிழக்காது 39 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லசித் மலிங்க மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் ஆட்டநாயகனாக அப்ரிடி தெரிவு செய்யப்பட்டனார்.





## கரம் சம்பியன்கள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண அமைச்சு அணிகளுக்கிடையிலான கரம் போட்டிகளில் உள்ளூராட்சி, ஆளுநர் செயலக கொத்தணி அணிகள் சம்பியனாகின.

வடமாகாண அமைச்சுக்களின் அணிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் தற்போது யாழ்.மாவட்டத்தில் நடைபெற்று வருகின்றன.

உள்ளகப் போட்டிகள், மைதான போட்டிகள் ஆகியவற்றினை உள்ளடக்கிய மேற்படி சுற்றுப் போட்டியில் கரம் போட்டிகள் கடந்த முதல் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்று வந்தன.

ஆண்களுக்கான கரம் இறுதிப்போட்டியில் கல்வி அமைச்சு அணியும் உள்ளூராட்சி அணியும் மோதியன. இதில் உள்ளூராட்சி அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது.

பெண்களுக்கான இறுதிப்போட்டியில் ஆளுநர் செயலக கொத்தணி அணியும் சுகாதார அணியும் மோதின. இதில் ஆளுநர் செயலக கொத்தணி அணி 2: 1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது.

# மண்டேலாவும் நாமும்

ஸ்ரீதரன் - சுகு -

மார்க்ஸ், காந்தி, சே, மண்டேலா போன்ற தலைவர்கள் உலகளாவிய அளவில் நேசிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த நேசம் எங்கிருந்து வருகிறது.

இந்த மனிதர்களின் ஜனநாயக உணர்வு-மனித குலத்தின் மீது பேரன்பு இவற்றில் இருந்து தான் வருகிறது.

மனிதர்களுக்கு சுதந்திரமான வாழ்வை ஏற்படுத்த அவர்கள் விரும்பினார்கள்..

மண்டேலா போன்ற தலைவர்கள் இல்லாமல் போனது மோசமான தனிமை உணர்வை ஏற்படுத்துகிறது. மக்கள் நேயமற்ற கெடுபிடியான ஆட்சித் தலைவர்கள் நிறைந்த உலகச் சூழலில் நெல்சன் மண்டேலா போன்றவர்களின் மறைவு நிரப்பமுடியாத வெற்றிடத்தை விட்டுச் செல்கிறது.

வன்மமும், பகை உணர்ச்சியும் மலிந்த எமது சமூகச் சூழலில் கூட மண்டெலாவின் அணுகுமுறைகள் விரும்பப்படுமா?

நாங்கள் பெரும்பாலும் அநீதிகள் யார் யாருக்கு எந்தெந்த சமூகத்திற்கு நேர்கிறது இதில் எமக்கென்ன லாபம் என்று பார்த்து நாடக-பாணியில் கண்டிப்பவர்கள். கருத்துச் சொல்பவர்கள்.

அத்தகைய சூழலில் மண்டேலாவிற்கு என்ன முக்கியத்துவம் இருக்கும்?

அவர் சகல இனக் குழுக்களுடனும், சக தென்னாபிரிக்க-ஆபிரிக்க மக்களுடனும் உலகத்துடனும் எவ்வாறு உறவு பூண்டார் என்பதையும் நாம் கற்றுக் கொள்ள முயலவேண்டும்.

பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு தென்னாபிரிக்க அணுகுமுறை யாழ்.மேலாதிக்க சிந்தனை முறைக்கு ஒத்து வருமா?



இது முக்கியமான கேள்வி.

தென்னாபிரிக்க அனுபவங்களைப் பார்க்கும் போது எமது போராட்டவரலாறு அதன் தார்மீக வலுக்கள் பற்றிய கேள்விகளைத் தவிர்க்கமுடியவில்லை.

போராட்ட மரபு என்று எதுவும் மிஞ்சவில்லை. எல்லாம் சிதிலமாகியுள்ளன.

போராட்ட அறமரபு சிதைந்து சுத்துமாத்துப் பேர்வழிகளின் ஆதிக்கம் எமது அரசியல் அரங்கில் ஆங்காங்கே விரவிக்காணப்படுகிறது.

தென்னாபிரிக்க ஆட்சியில் முற்போக்கு ஜனநாயக சக்திகள் இன்றளவில் இருக்கின்றன.

அங்கு வெறுப்புணர்வு அரிதானது. இங்கிதம் இருக்கிறது. கூட்டுணர்வு காணப்படுகிறது.

ஈழத்தமிழர்- எமது அரசியல் வெறுப்புணர்வால் நிரம்பியது.

தென்னாபிரிக்கர்களின் வாழ்க்கை பாடல், ஆடல் கலைநயத்துடனும் வெளிப்படைத்தன்மையுடன் இணைந்தது. எமக்குள் ஆதிக்கம் வகிப்பது இருண்டு இறுகியது.

போலியானது. உம்மணாமூஞ்சித்தனமானது.

நமக்குள்ளேயே வெவ்வேறு பிரதேசங்கள், சக சமூகங்கள், அண்டை அயலார் நாடுகள் மீது ஈடுபாடற்றது. பல சந்தர்ப்பங்களில் வெறுப்புணர்வு கொண்டது. உள்ளார்ந்து சொந்த சமூகத்தினுள்ளேயே பண்பாட்டின் பேரில் தீண்டாமை அநீதிகளை வைத்திருப்பது.

இவற்றை புலம்பெயர் நாடுகள் வரை காவிச் சென்றிருப்பது.

சகிப்புத்தன்மை குறைவானது.

எங்களை விட்ட விண்ணர்கள் இல்லை என்று இறுமாந்திருப்பது.

எங்களைவிட வேறு சக மனிதர்களும், உலக மனிதர்களும் துன்பங்களை அனுபவித்திருப்பார்கள், அனுபவிக்கிறார்கள் என்பதில் அக்கறை இல்லாத - பல சந்தர்ப்பங்களில் ஒத்துக் கொள்ளாத மனம்.

இந்த நிலை மாறுமா? மாறவேண்டும். வேறுபாடுகள் யதார்த்தமானவை என்று ஏற்றுக் கொண்டு புருவங்களை நெரிக்காமல் பரஸ்பர நல்லெண்ணத்துடன் செயற்பட முன்வரவேண்டும். பாசாங்கான வக்கிரத்தனமான அல்லது உண்மையான உணர்ச்சிவசப்படுதலுக்குப் பதிலாக மனித நேய சமூக பிரக்ஞை உணர்வுடன், தருக்க பூர்வமான சிந்தனை முறையுடன் பரஸ்பர நல்லெண்ணத்துடன் நமக்குள்ளும் நமக்கு வெளியிலும் செயற்பட முன்வரவேண்டும்.

உலகமானிடத்தின் ஒரு பகுதியினர் தான் நாமும் என்ற சிந்தனை வலுப் பெற வேண்டும்.

உலகம் பெருந்திரளான உலக மனிதர்களுக்குச் சொந்தமானது என்பதை அடிக்கடி நிறுவுபவர்கள் இத்தகைய வரலாற்றின் மனிதர்கள் தான்.

கேடுகெட்ட சர்வாதிகாரிகள், இன - நிறவெறியர்கள், ஆக்கிரமிப்பாளர்கள் உலகம் குறிப்பிட்ட ஒரு சிறுபான்மையான பிரிவினருக்கு என்று செயற்படும் போது உலகம் கோடான கோடி மானிடர்களுக்கு சொந்தமானது என்று முகத்தில் அறைந்த வாக்கில் உணர்த்துபவர்கள் இவர்கள் தான்.

இத்தகையவர்கள் வரலாறு முழுவதும் தோன்றி மறைந்து கொண்டிருப்பார்கள்.

வோல்டயர் ரூசோ போன்றவர்கள் சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் என்ற கோசங்களுடன் முதலாவது பிரான்சுப் புரட்சி 1770 களின் பிற்பகுதியில் பின்னர் மீண்டும் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டின் பின்னர் பாரிஸ் கம்யூனும் நிகழவில்லையா.

1850களில் ஜோஸ் மாட்டி போன்ற தலைவர்கள் காலணி ஆதிக்கத்திற்கெதிராக போராடினார்கள். ஏறத்தாழ ஒரு நூற்றாண்டின் பின் பிடல் - சே தலைமையில் கியூப புரட்சி நிகழ்ந்தது.

ஆபிரிக்காவை ஒருதொகுதியாக எடுத்தால் அங்கோலாவில் 1960களில் நிகழ்ந்த மாற்றங்களையும் 1980, 1990 களில் தென்மேற்கு தெற்கு ஆபிரிக்காவில் நிகழ்ந்தவற்றையும் நாம் தொடர்புபடுத்திப் பார்க்க முடியும்.

இவ்வாறு பல உதாரணங்களைப் பார்க்கமுடியும்.

வரலாற்றின் இயக்கவியலை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

மண்டேலா நிறவெறி, தீண்டாமை, இன ஒதுக்கல், காலனி ஆதிக்கத்திற்கெதிராகப் போராடிய உலகளாவிய ஒரு பன்முக ஆளுமை. எமக்கெல்லாம் நம்பிக்கையாக இருப்பவர்.

பாரபட்சமற்ற அநீதியற்ற சமூகவாழ்விற்கு அவர் ஒரு மாபெரும் உந்து விசையாக இருந்தார்.

மண்டேலா தென்னாபிரிக்க சூழலில் இயல்பாக நிறவெறிக்கெதிரான போராட்டத்தில் பிரவேசித்தவர். அதன் பலாபலன்களை எதிர்கொண்டவர். எமது சிலர் போல் நாடகபாணியில் நுழையவில்லை.

அவருடைய சுயசரிதையைப் பார்த்தால் அது ஓரளவு புரியும்.

மனிதராக இருந்துகொண்டு தான் போராடினார்.

குழுமனப்பான்மையிலிருந்து நாம் முதலில் விடுபட வேண்டும். வேறுபடுதலும், ஒன்றுபடுதலும் கலந்துரையாடுவதற்குமான இடைவெளியை நாம் பேண வேண்டும்.

பரந்த உலகைத் தரிசிப்பதற்கும், பரந்த கலந்துரையாடலுக்கும், கண்ணியமாக நடந்து கொள்வதற்குமாக எம்மை நாமே பயிற்றுவிக்க வேண்டியிருக்கிறது.





# வீரத்திற்கு வந்த சோதனை!

மெலிசா பச்மென் என்ற பெண், அமெரிக்காவில், மிகவும் பிரபலம். "டிவி" நிகழ்ச்சி தொகுப்பாளாராக பணியாற்றுகிறார். இவருக்கு, மற்றொரு முகமும் உண்டு. மிருகங்களை வேட்டையாடுவதை, பொழுதுபோக்காக வைத்துள்ளார். சமீபத்தில், தென் ஆபிரிக்கா சென்ற இவர், அங்கு, அடர்ந்த வனப் பகுதிக்குள், துப்பாக்கியுடன் களமிறங்கினார்.

மெலிசாவின் பார்வையில், அங்கு, சுற்றிக் கொண்டிருந்த, பெரிய சிங்கம் ஒன்று, சிக்கியது. அடுத்த நொடியே, தன் துப்பாக்கி குண்டுகளுக்கு, அந்தச் சிங்கத்தை இரையாக்கி விட்டார். அத்துடன், பேசாமல் இருந்திருந்தால், பிரச்சினை வந்திருக்காது. இறந்து போன சிங்கத்தின் உடல் அருகே அமர்ந்து, துப்பாக்கியுடன் கம்பீரமாக போஸ் கொடுத்து, புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

இந்தப் புகைப்படத்தை, சமூக வலைத்தளமான, "டுவிட்டர்"ல், வெளியிட்டு, "என்னுடைய வீரத்தை பார்த்தீர்களா" என, தன் புஜ புல பராக்கிரமத்தை வெட்ட வெளிச்சமாக்கியிருந்தார். இத்துடன், இதுவரை அவர் வேட்டையாடிய, பல மிருகங்களின் உடல்கள் அருகே அமர்ந்து, எடுத்த புகைப்படங்களையும் வெளியிட்டிருந்தார்.

இந்த விவகாரம், தென் ஆபிரிக்காவில், தற்போது, பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இனிமேல், மெலிசாவை, தென் ஆபிரிக்காவுக்குள், அனுமதிக்கக் கூடாது என்றும், அவர் மீது, சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், கோரிக்கைகள் வலுத்து வருகின்றன.

# சிதறுண்ட மணிக்கொடி




கல்கி, தமிழன், நாடோடி, எஸ்.வி.வி., தேவன், ராஜாஜி, டி.கே.சி., சோமு, பி.ஸ்ரீ ஆகியோரின், ஜனரஞ்சக எழுத்துகளின் முன், மணிக்கொடி எழுத்தாளர்களின், கலைப்படைப்புகள் நிற்க முடியவில்லை.

நான்கே ஆண்டுகளில், "மணிக்கொடி"யும், அடுத்த ஒன்றரை ஆண்டுகளில், க.நா. சுப்ரமணியத்தின் "சூறாவளி"யும், கடையை கட்டி விட்டன. 1939இல், இரண்டாம் உலக யுத்தம் துவங்கிய வேளையில், மணிக்கொடி எழுத்தாளர்களில் ஒரு சிலர் (பி.எஸ்.ராமையா, கி.ரா.,) ஜெமினி, ஜூபிடர் ஸ்டுடியோக்களிலும், ஒருவர் (சிட்டி) அகில இந்திய ரேடியோவிலும், மற்றொருவர் இந்து அறநிலையத் துறையிலும் (ந.பிச்சமூர்த்தி), இன்னுமொருவர் வாகினி ஸ்டுடியோவிலும் (ந.சிதம்பர சுப்பிரமணியன்) வேலைக்கு சேர்ந்தனர். மௌனி, அரிசி ஆலை தொழில் நடத்தத் துவங்கினார். புதுமைப்பித்தனுக்கு, தினமணியில் உதவி ஆசிரியர் உத்தியோகம்.

கு.ப.ரா., க.நா.சு., சி.சு.செல்லப்பா ஆகியோருக்கு, வேலையில்லாத் திண்டாட்டம். இவ்வாறாக, அவிழ்த்து விட்ட நெல்லிக்காய் மூட்டை போல், பொருளாதார நெருக்கடியைத் தாங்க முடியாமல், மணிக்கொடி கோஷ்டி சிதறுண்டு போயிற்று.

**- தாமரை, ஜூன் 1962 இதழில், டி.கே.சி., கட்டுரையிலிருந்து...**

# ஜெயகாந்தன் காதல்...


நான் பிழைப்புக்காக, என்னென்னமோ தொழில்கள் செய்திருக்கிறேன். இதில், மறக்க முடியாதது... மதுரையில், ஜட்கா வண்டிக்காரனுக்கு உதவியாக இருந்தது. அந்த வண்டிக்காரனின் மனைவிக்கு, பெரு வியாதி. வீட்டைக் கவனிப்பது, சமைப்பது எல்லாம், அவனுடைய மகள் தான். அவளுக்கு பதிமூன்று, பதினான்கு வயது இருக்கும். காதிலே ஈயத்தாலான பாம்படம் அணிந்திருப்பாள்.

அவள் தான் எனக்கு சோறிடுவாள் மரியாதையாக நடத்துவாள். என்னை, "மாப்பிள்ளை" என்று அழைத்து, ஜட்கா வண்டிக்காரன் கேலி செய்யும் போது, அவள் ஓடி ஒளிவாள் செல்லமாக சிணுங்குவாள்.

"நானும், இந்தக் கிழவன் சீக்கிரம் செத்துப் போனால், நாம் தான் இந்த வண்டியையும், குதிரையையும் வைத்துக் கொண்டு, இவளை திருமணம் செய்து இந்தக் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று நினைத்து, ஒரு ஜட்கா வண்டிக்காரனாக மாற தீர்மானித்திருந்தேன்.


வீட்டை விட்டு ஓடிப் போன என்னை, ஒருநாள், சினிமா கொட்டகையில் கண்டுபிடித்த என் மாமா மகன், பிடித்த பிடியில் என்னை இழுத்து வந்து விட்டார். அதன் பின், அந்த வாழ்க்கையும் மாறிப் போயிற்று.

**(ஜெயகாந்தன் கட்டுரையிலிருந்து)**



# மறதி மிகுந்த வயதான அந்த மனிதர்

- எம்.கே.முருகானந்தன் -



தனது வழமையான செக் அப்பிற்காக மருத்துவரிடம் சென்றார். அவரைப் பரிசோதித்த மருத்துவர் மருந்துப் பட்டியலை சிட்டையாக எழுதிக் கொடுத்தார். தொடர்ந்து பார்மசியில் வாங்கிப் போடுவதற்காக எழுதிக் கொடுக்கப்பட்டது.

எல்லா மருத்துவர்களின் கையெழுத்துப் போலவே அவரதும் யாருக்கும் புரியாத கிரந்த எழுத்துக்களாக அமைந்திருந்தன.

சிட்டையை வாங்கித் தனது பொக்கெற்றுக்குள் வைத்த வயதானவர் மருந்தை வாங்க மறந்து விட்டார்.

ஆனால் அது அவரது பொக்கெற்றுக்கள் இருந்தவாறு அவருடன் எப்பொழுதும் பயணித்த வண்ணம் இருந்தது.

அவர் தினமும் பஸ்சில் பயணித்தே கோவிலுக்குப் போவார். பஸ் கண்டக்டரிடம் இதைக் காட்டியதும் இலவசமாகப் பயணிக்க ஒவ்வொரு நாளும் அனுமதி கிடைத்தது.

கோவிலில் செருப்பு பாதுகாப்பவர் அந்தச் சிட்டையைக் கண்டதும் சலாம் போட்டபடி செருப்பை பாதுகாத்து ஒப்படைப்பார்.

ஒரு நாள் பொழுது போகவில்லை என சினிமாத் தியேட்டர் பக்கம் போனார். அங்கு இது அவருக்கு விசேட பாசாகப் பயன்பட்டது.

வாகனத்தில் போய்க் கொண்டிருக்கும் போது சோதனைச் சாவடியில் நிறுத்தப்பட்டார். இவர் தனது ஆஸ்தான சிட்டையைக் காட்டியதும் "சொறி சேர்" எனச் சலூட் அடித்து மரியாதையுடன் மேற் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

திடீரென ஒருநாள் மயங்கி விழுந்தபோது இறந்து விட்டார்.

மருந்தை ஒழுங்காகப் பாவிக்காததால் வந்த பிரச்சினை என அதே மருத்துவரிடம் உறவினர்கள் ஏச்சு வாங்க வேண்டியதாயிற்று.

அவர் மருந்துகளை போடத் தவறியது ஏன் என்பது உறவினர்களுக்குப் புரியவில்லை என்பதால் மருத்துவர் தப்பித்தார்.

அவரது பொக்கற்றுக்கள் இருந்த சிட்டையைக் கண்டெடுத்த மகள் "அது அப்பா எழுதிய கடைசி விருப்பப் பத்திரம்" என்று சொன்னாள்.

அப்பாவின் சொத்துக்களைத் தனது பெயருக்கு மாற்றிக் கொள்ள அது உதவியது.

மருத்துவர் தருகின்ற புரியாத எழுத்து மருந்துச் சிட்டைகளை வீசிவிடாதீர்கள்.

கவனமாகப் பாதுகாத்து வைத்திருங்கள். அவை எதிர்காலத்திலும் உங்களுக்கு உதவக் கூடும்.

• ஒரு சிறிய கடிகாரத்தில் 211 பாகங்கள் இருக்கும்.

• ஒரு பரல் என்பது 190.932 லீற்றர்கள் (42 கலன்கள்)

# புள்ளி விவரம்!



• ஒரு யூனிட் இரத்தம் என்பது 350 மி.லீ. இரத்தம் ஆகும்.

• அமெரிக்காவில் 50 மாநிலங்கள் உள்ளன.

• ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பு நாடுகளாக அங்கம் வகிக்கும் நாடுகள் மொத்தம் 179.

• ஆண்டுதோறும் பூமியில் 160 இலட்சம் இடி மின்னல்கள் ஏற்படுகின்றன என்று ஒரு புள்ளிவிவரம் கூறுகிறது.

• 10 மைல்களுக்கு உட்பட்டே இடி இடிக்கும் சப்தத்தைக் கேட்க முடியும்.

• விற்றமின்களில் 20 வகைகள் உள்ளன.

• மனித உடலில் 20 இலட்சம் வியர்வை சுரப்பிகள் இருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

• ஒரு ".புல்ஸ்காப்" பேப்பரின் நீள - அகலம் - 17 அங்குலம் - 13 1/4 அங்குலம்.

• ஆங்கில அகராதியில் ல என்ற எழுத்துக்குத்தான் சொற்கள் குறைவு. அதிக சொற்கள் கொண்ட எழுத்து ந.

• 17 செ.மீ. நீளமுள்ள பென்சில் 85 கிலோமீற்றர் நீளத்துக்கு கோடு கிழிக்கும் திறன் கொண்டது. 45,000 சொற்களை எழுதலாம். 17 முறை கூர்மைப்படுத்தலாம்.

• கால்பந்தின் சுற்றளவு 28 அங்குலம்.


• 100 கிராம் எடை தேங்காயில் உள்ள உப்பின் அளவு 16 மில்லி கிராம்.

• ஒரு மணிக்கு 60 நிமிடங்கள் என்று முடிவு செய்தவர்கள் பாபிலோனியர்கள்.

• உலகில் 26 நாடுகளில் கடற்கரையே இல்லை.

# ரஜினியை ஏன் பிடிக்கிறது?

- ஆர்.அபிலாஷ் -




ரஜினி படங்களின் போர்முலா என்பது ஒருவிதத்தில் தொடர்ந்து சொந்தபந்தங்களை இழப்பதும் மீட்பதும் அதன் மூலம் வீட்டுக்கு திரும்புவதும் தான். அவர் படங்களில் உள்ள மிகையான குடும்ப செண்டிமெண்ட் நம்மை எரிச்சலடைய வைக்காததன் காரணம் உறவுகளின் கசப்பான எதிர்மறையான பக்கத்தையும் அது காட்டுவது தான். விசு பாணி குடும்ப விமர்சனத்துக்கும் இதற்குமான வித்தியாசம் ரஜினியிடம் இலட்சியமான நல்ல உறவுகளே இல்லை என்பது. எல்லாரும் நம்மை ஒரு கட்டத்தில் கைவிடுவது தான் எதார்த்தம் என அவர் படங்களில் ஒரு அழுத்தம் உள்ளது.

இன்னொரு பக்கம் ஒரு எதிர்குடும்ப நாயகனாகவும் இருக்கிறார். "வேலைக்காரன்", "தளபதி", "முத்து" போன்ற படங்களில் அம்மா அல்லது அப்பாவால் கைவிடப்பட்ட "அநாதையல்லாத அநாதையாக" வருகிறார். கைவிடப்பட்ட குழந்தைகளிடம் ஒரு அவசர முதிர்ச்சியும் நீட்டிக்கப்பட்ட குழந்தைமையும் முரண்பாடாக சேர்ந்தே இருக்கும். "தளபதியில்" அம்மாவை முதன்முறை நேரில் சந்தித்து பேச முடியாது தேம்பும் இடத்திலும், "பாட்ஷாவில்" தன்னை வீட்டை விட்டு துரத்திய அப்பா வீட்டுக்கு வந்து பார்த்து திட்டும் போது தலையை குனிந்து எதிர்க்காமல் கேட்கும் அந்த அழகான காட்சியில் அந்த அநாதைத் தனமும், கைவிடப்பட்டவனின் தீராத ஏக்கமும் உள்ளது. குடும்பத்தால் கைவிடப்பட்ட குடும்பத்துக்காக ஏங்கும் எதிர்பிம்பம் எண்பதுகளில் இருந்தே ரஜினி கட்டுவித்த எதிர்சமூக நாயக பிம்பத்தோடு பொருந்திப் போகிறது.

வீட்டில் இருந்து வெளியேறுவதை நாம் ஒரு உலகப் பொதுவான தொன்மமாகவும் பார்க்கலாம் என்கிறார் உளவியலாளர் கார்ல் யுங். "துரத்தப்பட்ட இளவரசனின்" தொன்மம் பல சமூகங்களிலும் ஆதி காலத்தில் இருந்த ஒன்று என்கிறார். ஒரு இளவரசன் தன் அரசியல் எதிரிகளிடம் இருந்து தப்பிக்கும் பொருட்டு இன்னொரு ஊருக்கு தப்பிச் செல்வான். அங்கு பல அபாயங்களை சந்தித்து முறியடித்து வாழ்வான். பிறகு வளர்ந்த இழந்த தன் சமூக இடத்தை மீட்பான். யுங் இந்த தொன்மம் கர்த்தருக்கும் கண்ணனுக்கும் பொதுவாக இருப்பதை சுட்டிக் காட்டுகிறார். இதை ஒத்த வேறு பல நாட்டு தொன்மங்களையும் பட்டியலிடுகிறார். ரஜினியின் "வீட்டில் இருந்து வெளியேற்றப்படும்" தொன்மம் இந்த கண்ணனின் "துரத்தப்பட்ட இளவரசனின்" தொன்மத்தின் இன்னொரு வடிவம் தான்.

குசேலனின் கதையை தலைகீழாக எடுக்கப்பட்ட "அண்ணாமலை" இந்த விதத்தில் வெகுசுவாரஸ்யமான படம். 80 இலட்சம் சொத்துக்கு மதிப்புள்ள அண்ணாமலை அத்தனையும் வஞ்சகத்தால் இழக்கிறான். ஆனால் அவன் பிரச்சினை பணமல்ல. நண்பனுக்கு இணையாக மாறுவது. இரு சமூகத் தட்டுகளில் இருப்பவர்கள் நண்பர்களாக இருக்கும் சிக்கலைப் பற்றிய படம். இன்னொரு கோணத்தில் இருந்து பார்த்தால் இது சமூகத்தில் உள்ள சமத்துவமின்மை பற்றின படமும் தான்.

அடுத்தவருக்கு இணையாக உயர வேண்டும் என்பது நம் அனைவருக்குள்ளும் உள்ள மற்றொரு தீராத ஏக்கம். அலுவலகத்தில் அண்டை வீட்டில் இன்னொருவர் சட்டென்று நம்மை விட பொருளாதார நிலையில் உயர்ந்து விடும் போது நமக்கேற்படும்



பதற்றம் ரஜினியை போல் ஆகாயத்தை நோக்கி சவால் விட தூண்டுகிறது. ஆனால் இன்றுள்ள போட்டியில் இன்னொருவருக்கு இணையாக உயர்வதற்கு அவரை நாம் அழிக்கவும் வேண்டி இருக்கிறது. அண்ணாமலையும் மெல்ல மெல்ல தன் நண்பனை அழிக்கிறான். இறுதியில் தன் முன்னேற்றத்தின் வெறுமையை உணர்கிறான். இறுதியில் ரஜினி தொன்மத்தின் படி எல்லாவற்றையும் உதறி விட்டு மீண்டும் பால்காரன் ஆகிறார்.


சமூக மேல்நிலையாக்கம் (upward mobilization) குறித்த ஒரு ஆழமான கசப்பு நம் தமிழ் சமூகத்தில் இருக்கிறது. ரஜினியின் தொன்மம் இந்த கசப்பான மனதிடம் தான் பேசுகிறது. பழைய நிலையான சமூகம் இனி கிடைக்காது. அதேவேளை சமத்துவத்துக்கான வன்முறையும் வெறுப்பும் நமக்கு வேண்டாம். அதனால் அனைத்தையும் துறந்து விடுவோம் என்கிற தற்காலிக தீர்வை அளிக்கிறது. சமூக முன்னேற்றத்தில் மேலேயும் போக முடியாமல் கீழேயும் செல்ல விரும்பாமல் இடையில் எந்திர சக்கரத்தினிடையே மாட்டிக் கொண்ட நிறைய பேர் இருக்கிறோம். நமக்கிந்த தற்காலிக "பற்றற்று இருப்போம்" தீர்ப்பு பிடித்து போகிறது.

கடந்த ஐநூறு வருடங்களில் பல பெரும் மாற்றங்களை கொந்தளிப்புகளை எளிதில் ஒன்றுமே நடக்காதது போல் கடந்து வந்தது இப்படித் தான். எதையும் செய்யாமல் இருந்தாலும் ஏதோ ஒன்று நடக்கும் என நம்பிக் கொண்டு இருக்கிறோம்.

உளவியல் ரீதியாக, உறவுகளை கையாள்வதை பொறுத்தவரையிலும், அக ஆரோக்கியத்துக்கும் இந்த பட்டும்படாத அணுகுமுறை மிக நல்லது தான். எல்லா ஆசியர்களுக்கும் இந்த ஒட்டாமை கருதுகோளின் மீது ஆகர்சம் உள்ளது. புரூஸ்லீயின் படங்களுக்கும் ரஜினியின் தொன்மத்துக்கும் உள்ள முக்கிய ஒற்றுமை இந்த ஒட்டாமை தான். கிளைமாக்ஸில் வில்லனை கொன்று விட்டு ஒன்றுமே நடக்காதது போல் அவனது கல்லறைக்குச் சென்று மரியாதை செலுத்தி விட்டு தனியான பாதையில் நடந்து செல்வார் புரூஸ்லீ (Return of the Dragon). ரஜினியின் பல படங்களில் வில்லன் ஏதோ திருஷ்டி பூசணிக்காய் போலத் தான் இருப்பான். ஒரு சடங்கு போல் ஈடுபாடில்லாமல் அவனை தூக்கிப் போட்டு உடைத்து விட்டு போவார். "சிவாஜி", "பாட்ஷா" போன்ற படங்களை சொல்லலாம்.

இதே போன்றது தான் பெண்கள் மீதான கடும் வெறுப்பு. ரஜினியின் படங்களில் தான் நாயகி ஒரு கட்டத்துக்கு மேல் கதையில் பயணிக்க மாட்டாள். அல்லது அவள் ரஜினியை தன் அப்பாவித்தனத்தால் காட்டிக் கொடுப்பாள் ("சிவாஜி") அல்லது அவனை புரிந்து கொள்ள முடியாதவளாக இருப்பாள் ("பாபா").

பெண்கள் மீதான வெறுப்பும் கோபமும் இன்று பல படங்களில் வெளிப்படுகிறது. இது பெண் மீதான பயத்தில் இருந்து வருவது தான். ஜெயலலிதாவிடம் மோதல் ஏற்பட்ட பின் பெண்களை பழிக்கும் வசனங்களும் பாத்திர, கதை அமைப்புகளும் ரஜினி படங்களில் வந்ததை பார்த்தோம். ஆனால் அதற்கு முன்பிருந்தே பெண்களுக்கும் சமூக மாற்றத்துக்கும் எதிரான நிலப்பிரபுத்துவ கருத்துக்கள் தான் ரஜினி தொன்மத்தின் வேராக இருந்து உள்ளன. பெண்கள் தவிர்க்கப்பட வேண்டியவர்கள் எனும், ஆண்களால் மட்டும் நிரம்பிய வைதிக மரபின் தாக்கம் அவரது ஆரம்ப படங்களில் இருந்தே உள்ளது. பெண்களின் முன்னேற்றம், அவர்கள் முன்பை விட அதிக எதிர்ப்புணர்வுடன் இன்று நடந்து கொள்வதும், வீட்டுக்குள்ளும் வெளியேயும் நம் முதுகில் ஒரு துப்பாக்கியை சதா அழுத்திப் பிடித்துக் கொண்டிருப்பதும் சமூக மாற்றத்தின் அசலான பிரதிபலிப்பு எனலாம். ரஜினியை நமக்கு பிடிப்பதற்கு இன்னொரு காரணம் இந்த சமூக மாற்றம் நமக்கு பிடிக்கவில்லை என்பதும் தான்.



மாணவர்களுடன் ஆசிரியைகள் மற்றும் குருமுதல்வர்...



ஒளிவிழாவில் விருந்தினர் அழைத்துவரல்

# பல்துறை ஆழுமைவிருத்தியை மேம்படுத்திவரும் அச்சுவேலி தென்னிந்தியதிருச்சபையின் முன்பள்ளி

கடந்த பத்து வருடங்களிற்கு மேலாக **வில்லியம் குடும்பத்தினரின** ஆதரவிலும், இவழிகாட்டலிலும் சிறப்பானமுறையில் இயங்கிவரும் ஓர் இலவச முன் பள்ளி இதுவாகும். ஆங்கிலத்தில் நன்கு தேர்ச்சி பெற்ற ஆசிரியை **மேரிபூரணம் வில்லியம** தலைமையில் நடைபெற்றுவரும் இம் முன்பள்ளி அச்சுவேலி மத்திய கல்லூரிக்கு அருகாமையிலுள்ள கிறிஸ்தவ தேவாலய வளாகத்தில் அமைந்துள்ளது. இறைமகன் இயேசுவின் ஆசியுடனும் திருச்சபைக்குருவின் அரவணைப்பிலும் வளரும் இக் குழந்தைகள் பல்துறை ஆழுமை விருத்தி கொண்டவர்களாக மிளிர்கின்றனர் என்பதற்கு கடந்த 30.11.2013 சனிக்கிழமை இடம் பெற்ற ஒளி விழா நிகழ்சிகள் சான்று பகிர்கின்றன. அருட்திரு p.புனிதராசா தலைமையில் இடம்பெற்ற இன் நிகழ்வில் பல்துறைசார் விருத்தி கொண்ட மாணவர்களின் ஆற்றுகை நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன.



இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக திரு. Tp.குணசீலன் (அதிபர் அச்சுவேலி ஆரம்பப்பாடசாலை), கௌரவ விருந்தினராக அருட்திரு D.S.சொலமன் (தென்னிந்திய திருச்சபை ஆதீன செயலாளர் பிராந்திய குரு) ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அச்சுவேலிப்பாடசாலைகளிற்கு மாணவர்களை வளமாக்கிவிடும். ஊன்னத பணியை இம்முன்பள்ளி சிறப்பான முறையில் நிகழ்த்திவருகின்றது. இன்று குடாநாட்டில் பணம் கறக்கும் முன்பள்ளிகள் மத்தியில் சேவை நோக்கோடு இலவசமாக பெரியவர்கள் படித்தவர்களின் பின்னணியில் சிறப்பான முறையில் இது இயங்கிவருகின்றது.

குறிப்பாக வறிய குடும்பங்களிற்கு இறைமகன் இயேசுவின் பெயரால் இடம் பெறும் நிறைவான கறிபித்தல் களம் இதுவாகும். வாய் மொழி ஆங்கிலம் உட்பட பாடவிதான இணைபாடவிதான செயற்பாடுகள் சிறப்பான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இன்று பாடசாலை ரீதியாக பல சாதனைகளை நிகழ்த்திவரும் மாணவர்கள் இதன் பழைய மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. துன்பதுயரங்களிற்கப்பால் அடுத்தவர் எதிர்கால முன்னேற்றங்களிற்காக சேவையாற்றும் வில்லியம் குடும்பத்தினரின் சேவைமென் மேலும் பாராட்டுதற்குரியது இதனை பத்திரிக்கையில் பிரசுரித்து பாராட்ட வேண்டிய தேவை உள்ளமைக்கு பல காரணங்கள் உண்டு ஒன்று இலவச சேவை இங்கு இடம் பெற்றுவருகின்றமை அத்துடன் நிறைவான வெளியீடுகளும் இங்கு இடம் பெற்று வருகின்றமை இவ்வாறான செயற்பாடுகளிற்கு எமது பத்திரிகை என்றும் முன்னுரிமை கொடுக்கும் இது மென் மேலும் உயர வேண்டும் இதற்கு இறை மகன் இயேசு இச் சேவையாளர்களிற்கு நிறைசுகம் கொடுக்க வேண்டுமென வாழ்த்தி நிற்கும் பெற்றோர்களின் நன்றியறிதல்களுடன் இம்முன்பள்ளி நிகழ்வுகளின் புகைப்படங்கள் சில...

மாணவர்களின் ஆற்றுகையும்,
மாணவர் ஒருவரின் அபிநயமும்







மாணவர்களின் ஆற்றுகை...

# விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் சிறந்த வீட்டுத் தோட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திலுள்ள சகல மாவட்டங்களிலிருந்தும் 2013ஆம் ஆண்டில் சிறந்த வீட்டுத் தோட்டச் செய்கையாளரைத் தெரிவு செய்து பரிசு வழங்கும் செயற்றிட்டம் வடமாகாண விவசாயமும் கமநலசேவைகளும், கால்நடைஅபிவிருத்தி, நீர்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சினால் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கமைய யாழ். மாவட்டத்திலும் விவசாயப்போதனாசிரியர் பிரிவுரீதியாகவும் மாவட்ட ரீதியிலும் தேர்வுகள் நடைபெறும். இவ்வீட்டுத் தோட்டப் போட்டியானது முதலில் விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் நடாத்தப்பட்டு முதல் மூன்று இடங்களைப் பெறும் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

விவசாயப் போதனாசிரியர் பிரிவில் முதலாம் இடத்தைப் பெறும் போட்டியாளர்களிடையே மாவட்ட மட்ட மதிப்பீடு நடைபெற்று மாவட்டமட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இவ்வாறு மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் போட்டியாளர்களுக்கு பின்வரும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

1ஆம் பரிசாக 15000 ரூபாவும், 2ஆம் பரிசாக 12000 ரூபாவும், 3ஆம் பரிசாக 10000 ரூபாவும், வழங்கப்படும்.


விண்ணப்பிக்க விரும்புவோர் பின்வரும் போட்டி நிபந்தனைகளுக்கமைவாக போட்டியில் கலந்து கொள்ளமுடியும்.

சகல வீட்டுத்தோட்ட செய்கையாளர்களும் இப்போட்டியில் பங்கு கொள்ள முடியும்.

போட்டியில் பங்குகொள்ள விரும்பும் வீட்டுத் தோட்டச் செய்கையாளர்கள் தங்கள் பகுதியிலுள்ள விவசாயப்போதனாசிரியர் அலுவலகத்தில் அல்லது பிரதி விவசாயப்பணிப்பாளர் (விரி) அலுவலகத்தில் போட்டி விதிமுறைகள் பற்றிய முழுமையான விபரங்களை பார்வையிட்டு போட்டிக்கான விண்ணப்ப படிவத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் விவசாயப் போதனாசிரியருக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேற்பக்கத்தில் "சிறந்த வீட்டுத்தோட்டச் செய்கையாளருக்கான போட்டி 2013 எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கு பட்டிப்பொங்கல் தினத்திற்கு மறு நாள் வடமாகாண விவசாயமும் கமநலசேவைகளும், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசனால் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

# சுகாதார தொண்டர்களுடன் சந்திப்பு



யாழ்.போதனாவைத்தியசாலை சுகாதார தொண்டர்களுடனான சந்திப்பொன்று ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் யாழ்.மாவட்ட தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. கட்சியின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன் (ஜெகன்) தலைமையில் இடம்பெற்ற இச்சந்திப்பில் சென்ஜோண்ஸ் அம்புலன்ஸ் நிறுவனத்தின் சார்பில் தொண்டர்களாக நீண்ட காலம் பணியாற்றிய சுமார் 60இற்கும் மேற்பட்ட சுகாதார தொழிலாளிகள் கலந்துகொண்டனர்.

சுமார் நான்கு ஆண்டுகள் பணியாற்றிய இந்த ஊழியர்கள் கடந்த மாதம் இதே வைத்தியசாலையில் சுகாதார அமைச்சினால் நிரந்தர நியமனத்துக்காக நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் கல்வித்தகைமைகளை காரணங்காட்டி புறக்கணிக்கப்பட்டிருந்தனர்.

சேவைக்காக இணைக்கும்போது இக்கல்வித் தகைமைகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கவில்லையாதலால் நீண்டகாலம் பணியாற்றிய தமக்கு நிரந்தர நியமனத்துக்கு வாய்ப்பை ஏற்படுத்தி தர வேண்டுமென்பது இவர்களின் கோரிக்கையாகும்.

இதில் தேவையான தகைமைகளை கொண்டுள்ளவர்களும் இந்த ஆட்சேர்ப்பில் தவறவிடப்பட்டுள்ளமையை கவனத்தில் கொண்டு இவர்களது நியமனத்துக்கு சுகாதார அமைச்சுடன் பேசி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தெரிவித்தார்.

இதற்கான கோரிக்கை ஒன்றை தயாரித்து தருமாறும் பாதிக்கப்பட்ட தொழிலாளிகள் சார்பில் 5அல்லது 7பேர்கொண்ட குழுவுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக சுகாதார அமைச்சரைச்சந்தித்து இந்த ஊழியர்களின் நிரந்தர நியமனத்துக்கு தம்மாலான நடவடிக்கைளை மேற்கொள்ளவிருப்பதாகவும் சந்திப்பில் கலந்து கொண்ட தொழிலாளர்களிடம் அவர் உறுதியளித்தார்.

வெள்ளி நற்சிந்தனை...



# இலக்கியங்கள் இறையருள் பெற்றவை

கடவுளோடு தொடர்புடைய எந்தக் காரியமும் தெய்வீகத் தன்மையைப் பெற்று வருகிறது. அதனுடன் நிரந்தர மதிப்பும் அதற்கு ஏற்பட்டு வருகிறது.

வியாபார நோக்கத்தோடு எழுதப்படும் கவிதைகள் சிறிது காலத்தில் செல்வாக்கு இழந்து விடுகின்றன. அதே சமயம் நம்முடைய சாஸ்திரங்கள் ஆங்காங்கே காணப்படும் சிறு சம்பவங்கள் மக்களின் மனதில் நிலையான எடுத்துக் காட்டுக்களாக என்றென்றும் வழிகாட்டும் தன்மையினையும் பெற்றுவிடுகின்றன.

மூவர் பாடிய தேவாரங்களும், திருவாசகமும் மற்றுமுள்ள இறையுணர்வுப்பாடல்களும் இன்றும் சாகாவரம் பெற்றவையாக இருக்கின்றன. இதற்கு காரணம் அவை இறையருளினால், வாழ்வை வளப்படுத்துவதற்காக மனிதனின் பிறவிப் பிணி நீங்குவதற்கு உருவாகியவையாகும்.

அரசர்கள் பற்றி கதைகளைப் படிக்கின்றோம். இராஜஇராஜ சோழன் பற்றி அதிகமாகப பேசப்படுகிறது. அவன் கட்டிய தஞ்சைப் பெரிய கோவில், மாரியம்மன் கோவில் போன்றன, தெய்வங்களுக்காகக் கட்டப்பெற்ற ஆலயங்கள், ஆன்மீக ஒளிபரப்பும் அமைப்புக்களாக இன்றைக்கும் செல்வாக்குடன் திகழ்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அவன் வாழ்ந்த மாளிகை இப்போது என்னவாயின? அழிந்து மண்மேடாகிப் போய்விட்டன.

புராண இதிகாசங்கள் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும் புதுமை இலக்கியங்களாகக் காட்சி அளித்துக் கொண்டிருக்கின்றன. காரணம் என்ன? வாழ்க்கைக்குத் தேவையான, வாழ்க்கையை உயர்த்தக் கூடிய நல்ல விடயங்கள், அதில் ஏராளமாக இருப்பதுதான்.

பாண்டவர்கள் ஐந்துபேரும், ஒவ்வொருவரும் மற்ற நால்வரிடமும் காணப்படாத சிறப்பான ஆற்றலைப் பெற்றவர்களாகவே இருந்தார்கள். அப்படி இருந்தும் நான்கு தம்பிமார்களும், மூத்தவரான தர்மனின் சொல்லைக்கேட்டே நடந்து வந்தார்கள். அவருடைய அறிவுக்கும் அனுபவத்திற்கும் மரியாதை கொடுத்தார்கள்.

திரௌபதிக்கும் சத்தியபாமாவுக்கும் இடையே நடந்த உரையாடல், கணவரிடம் ஒருபெண் எப்படி நடந்து கொண்டால் அவனுடைய பரிபூரண அன்பைப் பெறலாம் என்பதை தெளிவாக எடுத்துச் சொல்லுகிறது. இம்மாதிரி வாழ்க்கைக்கு தேவையான எவ்வளவோ விடயங்கள் நம்முடைய புராண இதிகாசங்களில் இருப்பதனால் தான்? அவை சிரஞ்சீவித்துவம் பெற்ற இலக்கியங்களாக இப்போதும் வாழ்கின்றன. வளர்கின்றன.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிறக்கப் பெட்டகம்

அந்தக் காலத்தில் கவிஞர் கலாப்ரியாவின் ஏற்பாட்டில், ஆண்டுதோறும், 'கவிதைப் பட்டறை' நடக்கும். நடக்கும் இடம் குற்றாலம்.

தமிழின் தலைசிறந்த கவிஞர்கள், விமர்சகர்கள் எல்லாம் வந்து கூடுவார்கள். விமர்சகர்கள் கட்டுரை எழுதிக் கொண்டு வந்து வாசிப்பார்கள். அவற்றின் மீது வாக்குவழக்குகள் நிகழும். புதிதாகக் கவிதை எழுதத் தொடங்கி இருப்பவர்கள் ஒன்றிரண்டு கவிதைகளை வாசித்துக் காட்டுவார்கள். அவற்றின் மீதும் கருத்துகள் பகிரப்படும். அது ஒரு திருவிழா.

திருவிழாக் கூட்டத்தில் ஒரு குழந்தையாகவே என் மன உணர்வுகள் இருக்கும். பிரமிளோ, பசுவய்யாவோ, பிரம்மராஜனோ, கலாப்ரியாவோ, தேவதேவனோ, தேவதச்சனோ, விக்கிரமாதித்தியனோ, கல்யாண்ஜியோ என்ன நுணுக்கங்களைச் சொல்லுகிறார்கள் என்று என் மண்டைக்குள் எடுக்க முயல்வேன். என்றாலும் ஒரு திருவிழாக் கூட்டத்துக் குழந்தையாகவே என்னை வியப்புகள் சூழும்!

நள்ளிரவில் அருவியாடல், சாப்பாடு இப்படிப் போகும் அந்த நாட்கள். ஆட ஆடப் பசியெடுக்கும். இரவும் பகலும் சாப்பாடும் கிடைக்கும். ஆஹா! சங்ககாலத்துப் பாண்டிய சேரர்களைப் போல் அப்படியெல்லாம் தமிழ் வளர்த்தவர் கவிஞர் கலாப்ரியா. கலாப்ரியாவுக்கு நாங்கள் கடன்பட்டுள்ளோம். அவர் வாழ்க!

**– ராஜ சுந்தரராஜன்**

இங்கே கொண்டாட்டம் என்பது சினிமா நடிக நடிகையருக்கு மட்டுமே உரித்தானதாக இருந்து வருகிறது. அரசியல்வாதிகளை இதில் நாம் சேர்க்கவே முடியாது. அவர்களுடைய வாழ்க்கை ஒரு விதத்தில் பரிதாபத்திற்குரியது. கொண்டாட்டமே இல்லாத ஓர் இனம் என்றால் அது தமிழ் எழுத்தாளர்களையே குறிக்கும். சிலர் சொல்லலாம், ஒரு எழுத்தாளருக்கு தன்னுடைய கிராமத்தில் ஆடு வெட்டி அம்மனுக்கு படையல் செய்து தன் புத்தகத்தை வெளியிட்டு நண்பர்களோடு சாராயம் குடிப்பது கொண்டாட்டமாக இருக்கலாம் என. என்னால் அதை ஒப்புக்கொள்ள முடியவில்லை. பெண்களற்ற கொண்டாட்டம் கொண்டாட்டமே அல்ல. அது ஏதோ ஒன்றின் பதிலி. ஏதோ ஒரு இல்லாமையை இட்டு நிரப்பும் பலவீனமான முயற்சி. அதனால்தான் கொண்டாட்டம் அடிதடியில் முடிகிறது.

ஆக, எந்தவித அடையாளமுமே இல்லாத அனாதை ஜீவிகளான எழுத்தாளர் கூட்டத்தைச் சேர்ந்த நான் என் இனத்திலிருந்து மிகவும் வித்தியாசமானவன் என்ற முறையிலேயே, எனது புகைப்படங்களை வெளியிட்டு வருகிறேன். எனது கொண்டாட்டத்தின் ஓர் அங்கம் இது. **– சாரு நிவேதிதா**

எழுத்தாளரும் மொழிபெயர்ப்பாளரும் என் நண்பருமான என்.கோபாலகிருஷ்ணன் அருந்ததி ராயின் 'சிறிய விஷயங்களின் கடவுள்' நாவலை மலையாளத்தில் மொழிபெயர்க்க ஒப்புக்கொண்டார். அதுதொடர்பாக பதிப்பாளருக்கும் அவருக்குமிடையில் கடிதப்போக்குவரத்துகளும் நடந்தன. தன்னுடைய நாவலின் மொழிபெயர்ப்பு குறையில்லாததாக இருக்க வேண்டும் என்பது அருந்ததி ராயின் விருப்பம். பதிப்பாளருக்குத் தன்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துக் கடிதம் எழுதினார். "என்னுடைய நாவலின் மொழிபெயர்ப்பு என்னுடைய நேரடி மேற்பார்வையில் நடைபெற வேண்டும்."

மேற்படி கடிதம் மொழிபெயர்ப்பாளரான கோபாலகிருஷ்ணனுக்கு அனுப்பப்பட்டது. அதை வாசித்த கோபாலகிருஷ்ணன் பின்வருமாறு பதில் எழுதினார். "ஒரு கலைப் படைப்பை ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்குப் பெயர்ப்பதென்பது திருமணமான பெண்ணைக் காதலிப்பதுபோல. அதை அவள் கணவனின் நேரடி மேற்பார்வையில் செய்ய முடியாது."

**– ஷாஜஹான்**

'வேறு ஆதரவு எதுவும் இல்லாத தன் தாயை உடனிருந்து கவனிக்க வேண்டுமா? அல்லது தேசத்தைக் காப்பாற்றுவதற்காக சண்டையில் கலந்துகொள்ள வேண்டுமா?' –இதுகாறும் நாம் சேர்த்துக்கொண்டிருக்கும் அறிவின் ஆகப்பெரிய சொத்தால் அந்த இளைஞனுக்குத் தெளிவான பதிலைச் சொல்லிவிட முடியாது. அவன்தான் சுயமாக ஒரு முடிவுக்கு வரவேண்டும். சுயமுடிவெடுக்க சகல சுதந்திரமும் அவனுக்கு இருக்கிறது. அந்த முடிவைச் சார்ந்த சாதக பாதக விளைவுகள் அனைத்திற்கும் அவன்தான் பொறுப்பு.

**– ழீன் போல் சார்த்தர்**

# குரும்பசிட்டி கிராமத்திற்கு மின் இணைப்பு வழங்கல்

## குப்பிளான்-குரும்பசிட்டி வீதி திறப்பு



குரும்பசிட்டி கிராமத்திற்கான மின் இணைப்பினை ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) ஆரம்பித்து வைத்தார்.

வடக்கின் வசந்தம் திட்டத்தினூடாக 17 இலட்சத்து 730 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட மேற்படி பிரதேசத்திற்கான மின் இணைப்பினை கடந்தசெவ்வாய்கிழமை ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலென்ரின் (உதயன்) ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் எமது தமிழ் மக்கள் படிப்படியாக அனைத்துப் பிரதேசங்களிலும் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு வீட்டுத் திட்டம், மின்சாரவசதி, போக்குவரத்து வசதி போன்ற அடிப்படைப்பிரச்சினைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும். இவ்வாறாக மக்களின் வாழ்வாதார தேவைகள் மற்றும் எமது அரசியல் உரிமை என்பவற்றை பெறுவதற்காகவே நாம் அரசுடன் இணைந்து செயற்படுவதாகவும், சில அரசியல்வாதிகள் மக்களின் வலிகள், அவர்களின் துன்பதுயரங்ளை கிளறி அவற்றினூடாக தங்களின் அரசியலினை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் வழங்கப்பட்டுள்ள மின்சாரத்தினை பயன்படுத்தி ஆக்கபூர்வமான செயற்பாடுகளான மாணவர்களின் கல்வி வளர்ச்சி மற்றும் சுயதொழில் வளர்ச்சி போன்றவற்றை மேம்படுத்த வேண்டுமெனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வினைத் தொடர்ந்து குரும்பசிட்டி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் மின்வழங்கலினை ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து 26 வருடமாக மூடப்பட்டிருந்த குப்பிளான் குரும்ப சிட்டி பிரதான வீதியினை சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் தெல்லிப்பளை பிரதேச செயலர் சிறிமோகன், தெல்லிப்பளை திட்டமிடல் பணிப்பாளர், வடக்கின் வசந்தம் உத்தியோகத்தர்கள், ஈ.பி.டி.பியின் வலிவடக்கு இணைப்பாளர் அன்பு, ஈ.பி.டி.பியின் சுன்னாகம் உதவி இணைப்பாளர் வலன்டயன், பிரதேச உறுப்பினர் ஹரிகரன், உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்

சிவில் பாதுகாப்புத் திணைக்கள ஊழியர்களது பாடசாலை செல்லும் 28236 மாணவ மாணவியர்க்கு 96 மில்லியன் ரூபா பெறுமதியான பாடசாலைப் புத்தகங்களும் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் சேவா வனிதா பிரிவின் தலைவி திருமதி அயோமா ராஜபக்ஷவின் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு பண்டாரநாயக் ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்ற வைபவத்தின்போதே இந்தக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. அத்துடன் பொதுப்பரீட்சைகளில் தமது திறமைகளை வெளிப்படுத்திய 98 மாணவர்களுக்கு கல்விசார் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

# சமுர்த்தி வங்கிச்சங்கம் திறப்பு

வவுனியா புளியங்குளத்தில் நேற்றுமுன்தினம் சமுர்த்தி வங்கிச் சங்கம் திறந்து வைக்கப்பட்டது. வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் சமுர்த்தி திட்டம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அப்பகுதிக்கான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகஸ்தர்களும் நியமிக்கப்பட்டு சமுர்த்தி திட்டம் சிறப்பாக இடம்பெற்று வரும் நிலையில் இதுவரை காலமும் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துடன் இயங்கி வந்த புளியங்குளம் வங்கிச் சங்கம் புளியங்குளத்தில் செயற்பட ஆரம்பித்துள்ளது.

புதிதாக திறக்கப்பட்ட இவ் வங்கியை வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க. பரந்தாமன் திறந்து வைத்திருந்ததுடன் இந் நிகழ்வில் உதவி பிரதேச செயலாளா வீ. ஆயகுலன், பிரதேச செயலகத்தின் பிரதான கணக்காளர், பிரதம லிகிதர், உதவி திட்டமிடல் பணிப்பாளர், சமுர்த்தி மகா சங்க முகமையாளர் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# சிவனொளிபாதமலைக்கு மதுமயக்கத்துடன் செல்லவேண்டாம்

## -பொலிஸார் ஆலோசனை-

சிவனொளிபாதமலைக்கான யாத்திரையில் ஈடுபடும், பக்தர்களின் பாதுகாப்புக்காக பொலிஸார் விசேட ஆலோசனைகளை வழங்கியுள்ளனர்.

இந்த ஆலோசனைகளை பின்பற்றுவதன் மூலம் பக்தர்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்களை தவிர்த்துக்கொள்ள முடியுமென பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதன்படி, மது அருந்திவிட்டு சிவனொளிபாதமலைக்குச் செல்ல வேண்டாம் என யாத்திரிகர்களிடமும், வாகன சாரதிகளிடமும் பொலிஸார் கேட்டுக்கொண்டு ள்ளனர்.

அத்துடன், போதைப் பொருட்களையும் எடுத்துச் செல்ல வேண்டாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்..

இதேவேளை, பக்தர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் டி.பி.ஜி.குமாரசிறி தெரிவித்துள்ளார்.

# இளைஞர் நாடாளுமன்ற அமர்வு

(மானிப்பாய்)

இரண்டாவது இலங்கை இளைஞர் நாடாளுமன்றத்தின் ஐந்தாவது அமர்வுகள் இம் மாதம் 28ஆம் 29ஆம் திகதிகளில் மகரகமவில் அமைந்துள்ள இளைஞர் நாடாளுமன்றத்தில் இடம்பெறவுள்ளன.

இவ் அமர்வில் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ சமர்ப்பித்த 2014ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட அறிக்கையினை மையமாகக் கொண்டு விவாதிக்கப்படவுள்ளது.

இவ் அமர்வுகளின் பிரதம விருந்தினராக இளைஞர் விவகாரம் மற்றும் திறன்கள் விவகார அபிவிருத்தி அமைச்சர் டளஸ் அழகப்பெரும கலந்து கொள்வார்.

இரு நாட்கள் இடம்பெறவுள்ள இவ் அமர்வின் முதல் நாளின் சிறப்பு விருந்தினராக திறைசேரி செயலாளர் டீ.பி.ஜய சுந்தரவும், இரண்டாம் நாள் நிகழ்வின் விருந்தினராக தேசிய மொழி மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவும் கலந்து கொள்வார்கள்.

ஒவ்வொரு இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தங்களது வருகையினை உறுதிப்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற அமர்வுகளில் தொடர்ச்சியாக பங்கேற்காதவர்கள் இளைஞர் நாடாளுமன்ற உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சகல உறுப்பினர்களும் அமர்வுகளில் தவறாது பங்குபற்றுமாறும், 27ஆம் திகதி மாலை 4.00இற்கு முன்பாக ஒவ்வொருவரினதும் வருகைகளினை மகரகம சிறி லங்கா யூத் மத்திய ஸ்தானத்திற்கு வருகை தந்து உறுதிப்படுத்துமாறும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் செயற்பாட்டுப் பணிப்பாளர் மிலிந்த ராஜபக்ஷ கேட்டுள்ளார். (48)

# நல்லிணக்க செயலமர்வு



சர்வமத மற்றும் இன பன்மைத்துவத்தின் ஊடாக நல்லிணக்கத்தை கட்டியெழுப்புதல் தொடர்பான ஆரம்ப செயலமர்வு மன்னாரில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மன்னார் சமாதானத்திற்கும் மீளிணக்கத்திற்குமான வளங்கள் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தச் செயலமர்வுக்கு தேசிய சமாதானப் பேரவை அனுசரணை வழங்கியது.

மன்னார் ஆகாஸ் விடுதியில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில், மதத்தலைவர்கள் மற்றும் சிவில் சமூகத் தலைவர்கள் உள்ளிட்ட 30 பேர் கலந்து கொண்டனர்.

இந்தச் செயலமர்வில் தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜெஹான பெரேரா, உதவி நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் சமன் செனவிரட்ன, ஆர்.பி.ஆர்.அமைப்பின் தலைவர் சட்டத்தரணி எம்.எம். சபூறுதீன், ஆர்.பி.ஆர். அமைப்பின் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் செல்வானந்தராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மேலும், இந்தச் செயலமர்வின்போது மன்னார் மாவட்ட சர்வமதப் பேரவைக்கு இணைத தலைவர்களாக அருட்பணி தமிழ்நேசன் அடிகளார், சிவசிறி தர்மகுமார குருக்கள், அஸ்சொய்க் எஸ்.ஏ.அசீம் மௌலவி, வண.விமலரத்ன தேரர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# தமிழ்ச்சங்கத்தின் பாரதி விழா



யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் முன்னெடுத்த பாரதி விழாவும் இணையததளம் தொடக்க நிகழ்வும் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பாரதி பிறந்த நாளன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் தமிழ்ச் சங்க உபதலைவர் பேராசிரியர் மா.சின்னத்தம்பி தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வின் அனுசரணையாளர்களான கிருபா லேணேர்ஸ் உரிமையாளர் அ.கிருபாகரன் தம்பதியரும் திருநெல்வேலி தேனு களஞ்சிய உரிமையாளர் தி.சிறி மோகனராஸ் தம்பதியரும் மங்கல விளககேற்றியதைத் தொடர்ந்து சரவணை நாகேஸ்வரி வித்தியாலய ஆசிரியர் கு.பாலஷண்முகன் தமிழ்த் தெய்வ வணக்கம் இசைததார். வரவேற்புரையை இந்துநாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சுகந்தினி ஸ்ரீமுரளிதரனும் தொடக்க வுரையை தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பியும் வாழ்த்துரையைத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணமும் வழங்கினர்.

விழாவில் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்திற்கான உத்தியோகபூர்வ இணையத்தளம் தொடக்கிவைக்கப்பட்டது.

இணையத்தளத்தைத் துணைவேந்தர் தொடக்கி வைக்க அறிமுகவுரையை மருத்துவபீடப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா வழங்கினார். தொடர்ந்து இணையத்தளத்தை வடிவமைத்த தங்கராஜா தவரூபனுக்கான மதிப்பளிப்பு இடம்பெற்றது.

அண்மையில் பீமரத சாந்தி விழாக் கண்ட தமிழ்ச்சங்க உறுப்பினர் சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள் தம்பதியர் வாழ்த்துப்பத்திரம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

பாரதி யார்? என்ற தலைப்பில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவின் சிறப்புரை, இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் நடனத்துறையைச் சேர்ந்த 40 இற்கும் மேற்பட்ட கலைஞர்கள் இணைந்து வழங்கிய புதுமைப் பெண்கள் என்ற பொருளில் அமைந்த நாட்டிய நாடகம் பார்த்தோரை வியப் பில் ஆழ்த்தும் வண்ணம் மிகச் சிறப்பாக மேடையேறியது.

யாழ். வளரும் முன்னணிக் கலைஞர்கள் பல்வகையான பக்கவாத்தியங்களுடன் இணைந்து வழங்கிய நல்லதோர் வீணை என்ற பொருளில் அமைந்த பாரதி பாடல்களால் ஓர் இசை அர்ச்சனை நிகழ்வும் உணர்வு பூர்வமானதாக இடம்பெற்றது.

தமிழ்ச்சங்கப் பொருளாளர் ச.லலீசன் நிகழ்வுகளை முன்னிலைப்படுத்தினார்.

நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீல ஸ்ரீசோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், அருட தந்தையர்களான எஸ்.ஜெயசேகரம் அடிகள், செ.அன்புராசா அடிகள், நாடாளுமன்ற உறுபபினர் சிவஞானம் சிறிதரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (48)

## வவுனியா வடக்கில் மத்தியஸ்தசபை

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் முதன்முறையாக மத்தியஸ்தசபை அங்கத்தவர்களுக்கான நியமனக்கடிதங்கள் நேற்றுமுன்தினம் வழங்கிவைக்கப்பட்டன. 20 கிராம அலுவலகர் பிரிவை உள்ளடக்கிய வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் 15 அங்கத்தவர்களை உள்ளடக்கி மத்தியஸ்தசபை உருவாக்கப்பட்டுள்ளது.

வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மத்தியஸதசபை அங்கத்தவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், உத்தியோகபூர்வமாக மத்தியஸ்த சபையின் செயற்பாடுகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.இந்த நிகழ்வில் கனகராயன்குளம், புளியங்குளம், நெடுங்கேணி பொலிஸ் நிலையங்களின பொறுப்பதிகாரிகள், வங்கிகளின் முகாமையாளர்கள் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (40)

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper

**விஞ்ஞானம்** | 34 | T | I |

1) நிலக்கீழ் தண்டு மூலம் பதியமுறை இனப்பெருக்கம் மேற்கொள்ளும் தாவரம்
1) கரும்பு 2) இஞ்சி 3) மரவள்ளி 4) வற்றாலை


2) மையநரம்புத் தொகுதியில் சுவாசத்தைக் கட்டுப்படுத்தும் பகுதி
1) மூளையம் 2) முண்ணான்
3) நீள்வளையமைய விழையம் 4) மூளி

3) ஆவியுயிர்ப்பைக் குறைப்பதற்கு நாகதாளியில் காணப்படும் இசைவாக்கம்
1) இலை சதைப்பற்றாகக் காணப்படுதல்
2) இலை முற்களாக மாறிக் காணப்படுதல்
3) பரந்த வேர்த்தொகுதியைக் கொண்டிருத்தல்
4) தண்டில் பச்சையுருமணி காணப்படுதல்.

4) ரெப்டீலியா, அம்பீபியா கூட்டத்தைச் சேர்ந்த அங்கிகள் முறையே
1) பாம்பு, ஆமை 2) முதலை, தவளை
3) உடும்பு, அமை 4) பல்லி, முதலை

5) வளிமண்டலத்திற்கு நைதரசன் சேரும் முறை
1) நீலப்பச்சை அல்காக்கள் மூலம் பதித்தல் மேற்கொள்ளப்படுதல்.
2) சில பற்றீரியா இனங்கள் மூலம் இறந்த தாவர விலங்கு உடலை பிரிகைக்குள்ளாக்குதல் மூலம்.
3) அவரைத் தாவரங்களில் உள்ள வேர் முடிச்சுகளின் பற்றீரியா செயற்பாட்டின் காரணமாக.
4) சில பற்றீரியா இனங்கள் மூலம் மண்ணில் உள்ள நைத்திரேற்றை நைதரசன் இறக்கம் செய்வதன் மூலம்.

6) உருவில் தெறிவினைச் செயற்பாடு காட்டப்படுகின்றது. அதன் தூண்டல், இயக்க நரம்புக்கலம், புலன் நரம்புக்கலம், விளைவு காட்டி என்பவற்றை சரியாகக் குறிப்பது.





| தூண்டல் | இயக்க நரம்புக்கலம் | புலன் நரம்புக்கலம் | விளைவுகாட்டி |
|---|---|---|---|
| 1) B | D | C | A |
| 2) A | C | D | B |
| 3) B | C | D | A |
| 4) A | D | C | B |

7) மனிதனின் செங்குருதி சிறுதுணிக்கையில் இயல்பு என முன்வைத்த விடயங்கள் வருமாறு
A - கரு காணப்படாது
B - ஒட்சிசன் பெற்றுக்கொண்டதும் சிவப்பு நிறத்தைப் பெறும்
C - மாறாத வடிவத்தைக் கொண்டது.
இவற்றில் உண்மையானவை
1) A, C மட்டும் 2) A, B மட்டும்
3) B, C மட்டும் 4) A, B, C

8) உடலின் அகப்புற சூழலில் குளுக்கோசு மட்டம் அதிகரிக்கும் போது உடலில் நடைபெறும் மாற்றங்கள் அல்லாதது.
1) சதையிலிருந்து இன்சுலின் சுரக்கப்படும்.
2) குளுக்கோசு கிளைக்கோஜனாக மாற்றப்படும்.
3) சதையிலிருந்து குளுக்கோஜன் சுரக்கப்படும்.
4) குளுக்கோசு கொழுப்பாக மாற்றப்படும்.

9) அகஞ்சுரக்கும் சுரப்பியல்லாதது
1) கபச்சுரப்பி 2) தைரோயிற்சுரப்பி
3) உமிழ்நீர்ச்சுரப்பி 4) அதிரினல் சுரப்பி

10) படத்தில் தாவர இலையின் அமைப்பு தரப்பட்டுள்ளது. இதில் மேற்றோல் நீட்டங்கள் காணப்படுவது?




1) சூரிய ஒளியை நன்றாகப் பெறுவதற்கு
2) பூச்சிகளைப் பிடிப்பதற்கு
3) ஆவியுயிர்ப்பை குறைப்பதற்கு
4) காபனீரொட்சைட்டு வாயுவை தேக்க வைத்துக் கொள்வதற்கு

11) ஒருவரின் குருதியமுக்கம் 120 : 140 mmHg ஆகக் காணப்பட்டது. இவரின்
1) குருதியமுக்கம் சாதாரண நிலையில் காணப்படுகின்றது.
2) இதயவறை விரிவடையும்போது நாடியினுள் உயர் குருதியமுக்கம் காணப்படுகின்றது.
3) நாடியினுள் கொலஸ்ரோல் படிந்து காணப்படுதல்.
4) குருதி சுருங்கலமுக்கம் 140 mm Hg ஆகும்.

12) ஒளி கிடைக்கும் திசையில் தாவரத்தின் அங்குர நுனி வளரும் முறை படத்தில் காட்டப்பட்டுள்ளது. இத்தோற்றப்பாட்டை சரியாக விளக்குவது?




1) அங்குர நுனிக்கு சற்றுக் கீழே ஒளி கிடைக்கும் பக்கத்திற்கு எதிர்த்திசையில் உள்ள கலங்கள் ஒட்சிசன்களின் செறிவு அதிகரிக்கும் போது கலங்கள் நீள்கின்றன.
2) அங்குர நுனியில் உள்ள கலங்களில் ஒட்சிசன் செறிவு அதிகரிக்கும்போது அக்கலங்கள் நீள்கின்றன.
3) அங்குர நுனிக்குச் சற்றுக் கீழாக ஒளி கிடைக்கும் திசையில் உள்ள கலங்களில் ஒட்சிசன்செறிவு அதிகரிக்கும்போது அக்கலங்கள் நீள்கின்றன.
4) அங்கு நுனியில் உள்ள கலங்களில் ஒட்சிசன் செறிவு குறைவதால் அக்கலங்கள் நீளத்தில் அதிகரிக்கும்.

13) கீழே தரப்பட்டுள்ள பதார்த்தத்தின் I மூலாகக் காணப்படுவது எது?
1) ஐதரசன் 2g இல் உள்ள ஐதரசயன் அணு
2) ஒட்சிசன் 8g இல் உள்ள ஒட்சிசன் அணு
3) 8g நீரில் உள்ள நீர் மூலக்கூறுகள்
4) 16g மெதேனில் உள்ள ஐதரசன் அணு


14) வழங்கப்பட்ட கரைசல் அமிலமா எனக் கண்டறிய பின்பற்ற வேண்டிய பொருத்தமான செயற்பாடு பின்வருவனவற்றுள் எது?
1) புளிப்புச் சுவையை அறிய நாவில் தடவிப் பார்த்தல்.
2) செம்பு உலோகத்தை இட்டு ஐதரசன் வாயு வெளியேறுகிறதா எனப் பார்த்தல்.
3) மின்னைக் கடத்துகின்றதா எனப் பரிசோதித்தல்.
4) சோடியம் காபனேற்றைச் சேர்த்து காபனீரொட்சைட்டு வெளியேறுகின்றதா எனப் பரிசோதித்தல்.

15) $2\,Mg_{(s)} + O2_{(g)} \rightarrow 2MgO_{2(s)}$ மக்னீசியம் தகனமடையும் போது மக்னீசிய மொட்சைட்டு வெளியேறியது. அதற்குரிய சமப்படுத்தப்பட்ட சமன்பாடு மேலே தரப்பட்டுள்ளது. மக்னீசியமொட்சைட்டு 4 மூலைப் பெறுவதற்குத் தேவையான மக்னீசியத்தின் திணிவு
1) 2g 2) 24g 3) 48g 4) 96g

16) ஈயநைத்திரேற்றுக் கரைசலை நான்கு பரிசோதனைக் குழாயினுள் எடுத்து அவை ஒவ்வொன்றினுள் செம்பு, மக்னீசியம், ஈயம், நாகம் என்ற உலோகத் துண்டுகளை ஒவ்வொன்றாக இட்டனர். எந்த ஈய நைத்திரேற்றுக் கரைசல் மாற்றமடையாது இருக்கும்.
1) மக்னீசியம், நாகம் 2) செம்பு, மக்னீசியம்
3) ஈயம், செம்பு 4) செம்பு, நாகம்

17) Z என்னும் நியமக்குறியீடு அல்லாத மூலகம் ஒட்சிசனுடன் Zo என்னும் சூத்திரத்தை ஆக்குகின்றது. குளோரைட்டின் சூத்திரம் $Zcl_2$ ஆகும். Z மூலகம் ஆவர்த்தன அட்டவணையில் எத்தனையாம் கூட்டத்தைச் சேர்ந்தது.
1) i 2) II 3) vi 4) vii


18) படத்தில் காட்டப்பட்டுள்ள பரிசோதனை அமைப்பில் சேகரிக்கப்பட்ட வாயு




1) தணற்குச்சியை எரிய வைக்கும்
2) பொப் என்னும் சத்தத்துடன் எரியும்
3) சுண்ணாம்பு நீரைப் பால்நிறமாக்கும்.
4) ஈர நிலப்பாசிச் சாயத்தாளை சிவப்பாக மாற்றும்.

19) மின்பகுபொருள் பற்றிய சரியான விளக்கத்தைத் தரும் கூற்று
1) அது ஐதான கரைசலாகக் காணப்படும்
2) அது இலகுவாக நீரில் கரையும்
3) பங்கீட்டு வலுப் பிணைப்பைக் கொண்டது
4) உருகுநிலையில், கரைசல் நிலையில் அயன்களை உருவாக்கும்.

20) பல்வேறு அமுக்கங்களின் போது குழாயில் சிறைப்படுத்தப்பட்ட வாயுவின் கனவளவை அறிந்து அமுக்கத்திற்கும் கனவளவிற்குமான தொடர்பைக் காட்ட வரையப்பட்ட வரைபுகளில் சரியானது எது?



21) தாக்க வேகத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணி ஒன்றை கண்டறியும் பொருட்டு நடத்தப்பட்ட செயற்பாட்டை படம் காட்டுகின்றது. அவர்கள் பரிசோதித்த காரணி




1) தாக்கிகளின் பௌதீக நிலை
2) ஊக்கி
3) வெப்பநிலை
4) தாக்கிகளின் செறிவு

22) அறைவெப்பநிலையில் காணப்படும் மூன்று திண்மங்களான A, B, C என்பவற்றை வளியில் தகனமடைய விடப்பட்டபோது பின்வரும் அவதானங்கள் பெறப்பட்டன. (வழங்கப்பட்ட குறியீடுகள் நியமக் குறியீடுகள் அல்ல)

A - விரைவாக எரிந்து பெறப்பட்ட வெள்ளை நிறத்தூள் நீரில் கரைந்து பெறப்பட்ட கரைசலின் $p^H$ 14 ஆகும்.

B - எரிந்து வாயுக்களை உருவாக்கும். இவை நீரில் கரைந்து $P^H$ பெறுமானம் 4.5 ஐக் காட்டும்.

C - எரிந்து நீரில் கரையாத கறுப்பு நிறத்தூளைத் தந்தது.

A, B, C மேலே தரப்பட்ட இயல்புகளைக் கொண்ட மூலகங்கள் முறையே.

1) நைதரசன் மக்னீசியம், காபன் 2) சோடியம் காபன், செம்பு
3) மக்னீசியம், சோடியம், செம்பு 4) கந்தகம், நைதரசன்,அலுமினியம்


23) $Al(OH)_{3(aq)} + 3\,HCl_{3(aq)} \rightarrow Alcl_{3(aq)}\, 3H_2O_{(1)}$ மேற்படி தாக்கம் தொடர்பான கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களுள் உண்மையான கூற்று (Al=27) O=16 H=1 Cl=35.5)

1) 2 மூல $Al\,(OH)_3$ நடுநிலையாக்குவதற்கு 6 மூல் HCl அமிலம் தேவை
2) $Al\,(OH)_3$ பிரிகையடைந்து $AlCl_3$, $H_2O$ உருவாகும்.
3) $Al(OH)_3$, Hcl அமிலத்துடன் தாக்கமடைந்து காரமும், நீரும் உருவாகும்.
4) 78g $Al(OH)_3$, HCl 36.5g Hcl அமிலத்துடன் தாக்கமடைந்து 3 g நீர் கிடைக்கும்.

24) அறை வெப்பநிலையில் திண்மமாகக் காணப்படும். பளிங்குருவற்றை வடிவங்களில் உள்ள பல்பகுதிய வடிவங்கள் பலவற்றை இயற்கையில் கொண்ட மூலகங்கள்.

1) மக்னீசியம் 2) சோடியம்
3) சல்பர் 4) பொன்


25) பின்வரும் வரைபு காலினால் உதையப்பட்ட பந்தின் இயக்கத்திற்குரிய வேக நேர வரைபாகும். பந்து சென்றதூரம்.




1) 50 m
2) 25 m
3) 10 m
4) 5 m


26) படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு வில்லைகள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது

1) கூட்டு நுணுக்குக்காட்டியில்
2) அரிய இருவிழியனில்
3) தொலைகாட்டியில்
4) வழுக்கி எறியியில்




27) இச்சுற்றில் ஆளியை மூடும்போது கிடைக்கும் அவதானம்

1) மோட்டார் ஒருபக்கம் சுழன்று சிறிது நேரத்தில் நிற்கும்
2) கொள்ளளவி ஏற்றம் பெறுதல்.
3) மோட்டார் தொடர்ச்சியாக இயங்கும்.
4) மோட்டார் மாறிமாறி இரண்டு திசையிலும் இயங்கும்.




28) இசைக்கவையின் மீடிறன் 256 Hz ஆகும். வளியில் ஒலியின் வேகம் $330ms^{-1}$ எனின் அலை நீளத்தைக் காண்க.

1) $\frac{330}{256}$ m
2) $\frac{330}{256}$ Hz
3) 330 x 256m
4) $\frac{330 \times 256\ Hz}{2}$

29) வலிமையான மின்காந்தமொன்றை உருவாக்குவதற்கு பின்வரும் எந்த சுற்றினூடாக ஒரேயளவான மின்னோட்டத்தைச் செலுத்த வேண்டும்.

1) உருக்கினைச் சுற்றி அதிகளவான எண்ணிக்கையில் சுற்றப்பட்ட சுருள்
2) வலிமையான காந்தத்தின் மீது சுற்றப்பட்ட குறைந்தளவு எண்ணிக்கையான கம்பிச்சுருள்
3) வலிமை குறைந்த காந்தத்தின் மீது அதிகளவு எண்ணிக்கையான கம்பிச்சுருள் சுற்றப்பட்டதில்
4) மென்னிரும்பினைச் சுற்றி சுற்றப்பட்ட அதிகளவு எண்ணிக்கையான கம்பிச்சுருள்

30) நுணுக்குப் பண்ணிக்கு கிடைக்கும் ஒலியை மின்துடிப்பாக மாற்றும் செயன்முறையை அழைப்பது

1) பரிபாடையாக்கம் 2) மட்டிசைத்தல்
3) மட்டிசைப்பழித்தல் 4) ஊடுகடத்தல்

31) அமல், உமேஸ் நிறுத்தாருவலையின் இருபுறமும் இருக்கின்றனர். அமல் நிறுத்தாருவலையின் முனையில் உமேஸ் சுழலிடத்திற்கு அண்மையிலும் அமர்ந்துள்ளபோது நிறுத்தாருவலை சமநிலையில் உள்ளது. அவர்களின் நிறை பற்றிய சரியான கூற்று.

1) அமல், உமேஸ் இருவரினதும் நிறை சமனாகும்.
2) அமல் உமேஸை விட பாரம் கூடியவர்
3) உமேஸ், அமலை விட பாரம் கூடியவர்
4) அமல், உமேஸின் நிறை பற்றி யாதும் கூற முடியாது

32) மின்முலாமிடலுக்கு மாணவர்கள் தெரிவு செய்த பதார்த்தங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

a - முலாமிடப்போகும் உலோகத்தின் உப்பின் நீர்க் கரைசல்
b - முலாமிடப்போகும் உலோகத்தின் கோல்
c - ஆடலோட்டமின்
d - கண்ணாடித்தாழி


மேற்கூறிய பொருள்களுள் மின்முலாமிடலுக்கு பயன்படுத்தப்படாத பதார்த்தம்

1) a 2) b 3) c 4) d

33) மின்சூழிலிருந்து வெளியேறும் ஒளியை மிக நீண்டதூரத்திற்குச் செலுத்து வதற்குச் செய்யவேண்டியது


1) தெறியியினை அகற்றுதல்
2) தெறியியின் குவியத்தில் மின்குமிழ் இருக்கும் வகையில் பொருத்துதல்.
3) தெறியியின் குவியத்திற்கு முன்னால் மின்குமிழ் இருக்கும் வண்ணம் பொருத்துதல்
4) தெறியியின் குவியத்தினுள் மின்குமிழ் இருக்கும் வண்ணம் பொருத்துதல்.

34) கல்லை வளியில், நீரில் முழுமையாக அமிழ்த்திப் பெறப்பட்ட வாசிப்புகள் படத்தில் காட்டப்பட்டுள்ளன. கல்லினால் இடம்பெயர்க்கப்பட்ட நீரில் நிறையும், கல்லின் மீது நீரினால் வழங்கப்படும் மேலுதைப்பும்




1) 2N, 2N
2) 5N, 3N
3) 2g, 3N
4) 5g, 3g

35) படிகூட்டு நிலைமாற்றியொன்றை திருத்தமாகக் காட்டுவது




36) அடுப்புக்கு அருகில் நின்று கொண்டிருக்கும் ஒருவருக்கு சூட்டை உணரலாம். இங்கு அடுப்பில் இருந்து வெப்பம் கடத்தப்படும் முறை.

1) கடத்தல் 2) ஆவியாதல்
3) கதிர்வீசல் 4) மேற்வாவுகை

37) A,B, C,D என்னும் நான்கு இரசாயனப் பதார்த்தங்களின் விபரங்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| இரசாயன பதார்த்தம் | விபரம் |
|---|---|
| A | நிறமற்றது, நச்சுவாயுவைக்கும் தீயணைப்பதற்கு பயன்படும் |
| B | எண்ணெய் தன்மையானது விரைவில் வெடிக்கும். |
| C | எண்ணெய் தன்மையானது அரிப்புக்குள்ளாகும், நச்சுவாயு வைத்தரும். |
| D | மஞ்சள் நிறத்திண்மம் இலகுவில் எரிந்து சுவாசப்பைக்கு பாதிப்பை ஏற்படுத்தும். தூளை வெளியேற்றும். |

பின்வரும் குறியீடுகள் இரண்டும் மேலே தரப்பட்ட எப்பதார்த்தத்திற்கு இடப்படும்.



தீப்பற்றக்கூடியது



ஆபத்தானது

1) A
2) B
3) C
4) D

38) பின்வரும் கூற்றுகளுள் பிழையானது

1) மாமிச உணவைத் தவிர்த்து தாவர உணவை உண்பதன் மூலம் உணவுப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்.
2) பூச்சி நாசினிகளைப் பயன்படுத்துவதால் அதற்கு எதிர்ப்புத்தன்மை மிக்க பூச்சிகள் உருவாகும்.
3) செயற்கை உரங்களைப் பயன்படுத்துவதால் குறுகியகால பயன் கிட்டினாலும் நீண்டகால பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புண்டு.
4) சவர்க்காரம் பாவிப்பதைவிட காரத்தன்மையான சேர்வைகள் பயன்படுத்துவது சூழலுக்கு உகந்ததாகும்.

# வடமாகாண சாரதி சேவையின்வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்பு

வடமாகாண சாரதி சேவையின் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புசெய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை யின் பெறுபேறுகளிற்கமைவாக மாவட்ட அடிப்படையில் நேர்முகத் தேர்விற்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு இல 695 நாவலர் வீதி எனும முகவரியில் அமைந்துள்ள வடமாகாண பிரதிப்பிரதம செயலாளர் நிர்வாகம் அலுவலகத்தில் எதிர் வரும் 18.12.2013 மற்றும் 19.12.2013 ஆகிய தினங்களில் நேர்முகத்தேர்வு நடைபெறவுள்ளது.

உரிய விண்ணப்பதாரிகளுக்கான கடிதங்கள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்நேர்முகத்தேர்விற்காக பின் வரும் ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு வடமாகாண பிரதி பிரதம செயலாளரால் (நிர்வாகம்) கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

1)பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் *(புகைப்பட பிரதியுடன்)*

2) தேசிய அடையாள அட்டை (புகைப்பட பிரதியுடன்)

3)கல்விச்சானிறிதழ்-கல்விப்பணிப்பாளர் நாயகம் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை ஒன்றில் எட்டாம் வகுப்பு சித்தி அல்லது ஒன்பதாம் ஆண் டில் சித்திபெற்றிருத்தலை உறுதிப் படுத்தும் பாடசாலை விடுகைப்பத்திரம் (புகைப்படபிரதியுடன்)

4) தற்போது அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர் எனின் திணைக்களத்தலைவரின் சேவைச் சான்றிதழ்

5) கிராம சேவை உத்தியோகத்தரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலா ளரால் உறுதிப்படுத்தப்பட்ட நற்சான் றிதழ்.

6) வலுவிலுள்ள சாரதி அனுமதிப் பத்திரம் (புகைப்படபிரதியுடன்)

7) மூன்று வருடசாரதி அனுபவத்தை உறுதிப்படத்தும் சான்றிதழ்.

8) இரவிலும் பகலிலும் வாகனத்தினை செலுத்தக்கூடிய நல்ல உடல் ஆரோக்கியமுடையவராகவும் நல்ல கண்பார்வையுடையவராகவும் உள்ளார் என்பதனை உறுதிப்படுத்தும் அரச வைத்திய ரின் மருத்துவச் சான்றிதழ்

2013.04.12 ஆம் திகதிக்கு முன்னர் 6 வருட காலப்பகுதியில் ஆகக் குறைந்தது 03 வருடங்களாயினும் வடமாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்தமையை உறு திப்படுத்துவதற்கான வாக்காளர் இடாப்பின் மூலப் பிரதி அல்லது கிராமசேவை உத்தியோகத்தரின் வதிவிடச்சான்றிதழ் பிரதேச செயலாளரின் மேலொப்பத்துடன் இருபக்கம் கொண்ட ஆவணங்களின் நிழல்பிரதிகள் இருபக்கமும் பிரதி செய்யப்பட வேண்டும் என்பதனையும் கவனத்தில் கொள்ளவும்.

## வட மாகாண சாரதி சேவை வகுப்பு III பதவிக்கான நியமனம் - 2013

**மாவட்டம் : யாழ்ப்பாணம்**
வெட்டுப்புள்ளி : 170

இராசையா விநாயகமூர்த்தி 742371670V, அச்சலிங்கம் திருக்குமாரன் 833402463V, சரவண்பவான் பிரதீபன் 860754045V, கனகலிங்கம் கஜேந்திரன் 810793503V, அரியம் கஜரதன் 780922923V, இராசதுரை வசந்தன் 742921581V, செந்திநாதன் செல்வராசன் 812934279V, கனகரத்தினம் பிரதீபன் 913612736V, சுப்பிரமணியம் சுரேந்திரா 811961809V, சிவப்பிரகாசம் சிகாதரன் 873091100V, சிவபாதம் சிவதீபன் 762711745V, பொன்னம்பலம் மனோகரன் 742152634V, வடிவேல் கோகுலதாஸ் 883232321V, சிவ கணேசன் குசாந்தன் 770042038V, சுப்பிரமணியம் ஆறுமுகசாமி 850092914V, டேவிட் ஜேசுதன், 821604010V, தியாகராஜா ஜீவகரன் 762630893V, கனகசபாபதி சிவபரன் 773220530V, நாகன் தனராஜலிங்கம் 713431915V, செல்வ ராசா மனோரூபன் 813251868V, கந்தசாமி சுதர்சன் 820194322V, கோபால கிருஸ் ணன் செல்வகுமார் 802431279V, சின்னத்தம்பி தவலதன் 911032996V, செல்வராசா கிரேஸ்குமார் 840464326V, எட்முன்ட்வேட் சிவராசா சயந்தன் 881624125V , சிவராசா சுதர்சன் 832063819V, இன்பராசா கார்த்திக் 852571624V, திருச்செல்வம் துஷாந் 791182662V, மகேந்திரன் பிரபாகரன் 790974131V, கனகரத்தினம் ஜதீஸ் குமார் 821072034V, திருநாவுக் கரசு ஜெயநிமலன் 830664122V, கனகராசா அபராஜிதன் 852022515V, சுப்பிரமணியம் சுரேஸ் 860941783V, கபிரேஜல் நிக்சன் 733143460V, இராசையா தயாராசா 780084596V, சோதி வடிவேல் ஜசீதன் 782843966V, ஐயாத்துரை நிரஞ்சன் 863384117V, மகேந்திரன் முகந்தன் 770642230V, நடராஜா விஜயரூபன் 711760458V, இரட்ணசிங்கம் சுஜீவன் 731372195V, கந்தையா தனேந்திரன் 760251828V, சிவலிங்கம் சசிகாந்த் 882491595V, சுப்பையா மகிழ்நாதன் 750861393V.

குமாரசாமி வசந்தராஜ் 831353180V, பத்மநாதன் நாதபரன் 783343355V, இராஜேந்திரன் ஜோதீபன் 761104519V, வீரசிங்கம் சசி குமார் 801182232V, கந்தசாமி சுதாகரன் 802703597V, பத்மநாதன் பகீர் 860371480 V ஜெகசோதி ஜெகராஜ் 802102747V, மணிவண்னன் கஜந்தன் 871580383V, மகாதேவன் முரளீதரன் 842741327V, நடராஜா சுசீதரன் 802425325V, குகதாஸ் ஐயர் றிசங்க சர்மா 921082223V, நாகநாதன் ஆதவன் 912323587V, இராஜகுலசிங்கம் சிவசெல்வன் 871033773V.

குமாரசாமி ஜெயகாந்தன் 811151653V, செல்வரத்தினம் நீலவர்ணன் 812221388V, குணசிங்கம் சரவணன் 902192280V, திருநாவுக்கரசு செந்தூரன் 832381390V, கிருஸ்ணன் கிரிதரன் 793311885V, றொக் அருளானந்தம் டினேஸராஜ் 770074690V, சண்முகசுந்தரம் தயாமோகன் 843382371V, இராசப்பா தயாபரன் 593530752V, அன்ரன் டிக்சன் 801274706V, செல்வரட்ணசிங்கம் விமலேந்திரன் 792022642V, அந்தோனிப்பிளளை லூயிஸ் கோலின் சாள்ஸ் 812383450V, சுந்தரமபிள்ளை காண்டீபன் 811754528V, தில்லையம்பலம் ரங்கநாதன் 790151992V, ஸ்ரீராம் குகராசா 892410429V, திருவருள்ச்செல்வம் நிரோசன் 923411615V பாலசிங்கம் மயூரதன் 843301673V, ஆரோக்கியநாதன் அன்ரன் சதீஸ்குமார் 761393707V, ஞானப்பிரகாசம் சொரூபன் 732601090V, கண்ணியசீலன் உமாசங்கர் 841354443V பரமசிங்கம் அம்பிகைகுமார் 762103737V, பொன்னுச்சாமி ரதீஸ் வரன் 840304620V, இராசையா லோகரஞ்சன் 853583685V, சண்முகநாதன் ஜெயானந்தராசா 700942643V.

**மாவட்டம் : கிளிநொச்சி**
வெட்டுப்புள்ளி : 165

குணசேகரம் மதிவண்ணன் 851622802V, உதாமசிங்கம் உமாசங்கர் 761630946V, சுந்தரலிங்கம் துசியந்தன் 752541213V, சிததிரவேல் சிறிதரன் 800054931V, கோபாலாசாமி கமல்ராஜ் 763224198V, சிவயோகேஸ்வரன் யோகேந்திரன் 851294430V, பாலகிருஷ்ணன் கலையன்பன் 841534018V, அரியரத்தினம் பிரதாபன் 772030649V, அரியரட்ணம் இராஜமோன் நேசரட்ணம் 721570550V.

சுப்பிரமணியம் கஜேந்திரன் 880741616V, கணேசமூர்த்தி கேசகன் 883210409V, மகேஸ்வரன் தேவானந்த் 862910109V, பரமானந்தசிவம் சிறிவரதன் 852512601V, தர்மராசா கணநாதன் 800474647V, பண்ணர்செல்வம் பாலரூபன் 820934300V, சுந்தரலிங்கம் அஜந்தன் 901671249V, கனகசபை கலைச்செல்வன் 761613855V, அமிர்தலிங்கம் உதயகுமார் 62414325V, சேனாதிராசா அமரேஸ் 802211597V, ஜெகநாதன் ரமேஸ் 873240121V.

**மாவட்டம் : மன்னார்**
வெட்டுப்புள்ளி : 179

அபசுபியன் ஜபிரி 773350710V, ஞானபிரகாஸம் துரம் வஸ்தியான் துரம் 851242589V, மும்மது இரட்ணம் மும்மது அதீக் 713660086 V, நிகோலான் கிலேரேன்ஸ் 842243904V, நிலாமுதீன் ஷிஜாஸ் 753402829V, ஆறுமுகம் றெனோல்ட் 873110570V, அப்துல் அஜீஸ் முஹம்மது ரிஜாஸ் 712901306V, மோகன் பஜனன் 901902194V, ஜோன் பொஸ்கோ லம்பேட் யேசு செல்வம் லம்பேர்ற் 811053830V, நடராசா சிவராசன் 762273926V, சாகுல் ஹமீட் முஹம்மது கவதான் 781072842V, ஜேசுதாசன் சஞ்ஜீவன் 892830843V, பாலசுப்பிர மணியம் சிவநேசன் 832582328V, ஹாஜா முஹைதீன் முஹம்மது முபாஸ் 783514346V.

**மாவட்டம் : முல்லைத்தீவு**
வெட்டுப்புள்ளி : 170

தவராஜா அமலன் 823020880V, முஹம்மது சலீம் நலீர் 793130759V, தர்மலிங்கம் கிருஸ்ணகுமார் 750431356V, ஈழக்கோன் பத்திராகே பிரதீப்குமார ஜெயரத்னா 840900908V, சடாச்சரம் ஜெகதீஸ்வரன் 721513530V, கனகரத்தினம் சிறிஜீவராசரத்தினம் 7505649507V, பத்திநாதன் சிதம்பரநாதன் 760700444V, அம்பலத்தரசு பிறேம்குமார் 852143444V, பாலசுப்பிரமணியம் கெளரீகரன் 50873950V, முஹம்மது அலி முஹம்மது முஜீபார் 891642407V, முஸ்தப்பா சைபுல்லா 870060530V, சிவநேசன் தர்சன் 912880850V, யோகராஜா சாரங்கன் 850843350V, விநாயகமூர்த்தி ரசிகரன் 820235152V, குலசேகரம் சுதர்சன் 812235176V, எஸ்.ஏ.ஜானக பிரதீப்குமார 852370815V, தஸ்லீம் முஹம்மது ஷஹீ 940210143V, இராசையா தயாபரன் 790492021V, இராமசாமி துஸாந்தன் 820125797V.

**மாவட்டம் : வவுனியா**
வெட்டுப்புள்ளி : 175

மகேந்திரராஜா சிவமோகன் 872452494V, மகேஸ்வரன் மதனீஸ்வரன் 792902596V, செல்வராசா வனதீபன் 852670517V, பாஸ்கரன் அனுசன் 910811649V, இரட்ணபூபாலசிங்கம் குலேந்திரன் 781954373V, சிவசோதி சிவநாதன் 761552910V, ஜினதா சகே சுரங்க சேனரத் பண்டாரா 793510829V, நாகராசா பிரியதர்சன் 861712036V, மயில்வாகனம் டினேஸ் 812501526V.

# புதிய தரச்சான்று

உணவுப் பொருட்களுக்கான புதிய தரச்சான்று ஒன்று அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இலங்கை தரநிர்ணயசபையினால் எஸ்.எல்.எஸ்.1460 என்ற இந்த புதிய தரச்சான்று அறிமுகப்படுத்தப்படுகிறது.

மூன்று வகையான உணவுப் பொருட்களுக்கு இந்த தரச் சான்று இலட்சினை வழங்கப்படவுள்ளது.

சைவ உணவுப் பொருட்கள், உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் சிற்றுண்டிச் சாலைகள் போன்றவற்றுக்கு இந்த இலட்சினை வழங்கப்படவுள்ளன.

இந்த இலட்சினையைப் பெற்றுக்கொள்வதற்கு, அதற்குரிய வரைமுறைகளை குறித்த நிறுவனங்கள் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.





வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ........................................

முகவரி :- ........................................


பிறந்த ஆண்டு :- ........................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# நேர்மையான அரசியல்வாதிகளுக்கு ஆம் ஆத்மி கட்சி அழைப்பு



காங்கிரஸ், பா.ஜ.க உள்ளிட்ட அனைத்து கட்சிகளில் இருந்தும் நேர்மையான அரசியல்வாதிகளை ஆம் ஆத்மியில் இணையலாம் என அக்கட்சியின் தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால் அழைப்பு விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலிலும் போட்டியிடும் அரவிந்த் கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சி, ராகுல் காந்தியை எதிர்த்து வேட்பாளரை நிறுத்தவும் முடிவு செய்துள்ளது.


டில்லியில் நேற்று முன்தினம் ஆத்மி கட்சியின் வெற்றிக் கொண்டாட்டக் கூட்டத்தில் அரவிந்த் கெஜ்ரிவால் பேசும்போது, நாடாளுமன்றத் தேர்தலிலும் தமது கட்சி போட்டியிடும் எனினும், எந்தெந்த மாநிலங்களில் போட்டியிடும்.

ஊழலுக்கு எதிராகப் போராடுவதற்கு, ஆம் ஆத்மி கட்சியுடன் இணைந்து செயல்படுவதற்கு, காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க உள்ளிட்ட அனைத்துக் கட்சியில் இருந்தும் நேர்மையாளர்கள் முன்வர வேண்டும்.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு கூடுதலாக நிதி தேவைப்படுகின்றது. மக்கள் தங்களால் இயன்ற நிதியை தாராளமாக வழங்க வேண்டும் என்றார்.

உலகச் செய்திகள்

# வால் நட்சத்திரத்தில் விண்கலம் தரை இறங்கும்



விண்வெளியை ஆராய்ச்சி செய்வதற்காக ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் 'ரொசேட்டா' என்ற விண்கலத்தை அனுப்பியுள்ளது.இந்த விண்கலம், கடந்த 2004ஆம் ஆண்டு மார்ச் மாதம் சூரிய மண்டலத்தை நோக்கி தனது பயணத்தை தொடங்கியது. இது 3 தடவை பூமியின் புவி வட்ட பாதையிலும் செவ்வாய் கிரகத்தையும் சுற்றி சென்றுள்ளது. பல இலட்சம் கி.மீற்றர் தூரம் பயணம் செய்துள்ள இந்த விண்கலம் 2 விண்கற்களை தாண்டியும் பயணம் செய்துள்ளது.

இந்த நிலையில் இது 67-பி களியுமோல் ஜெராசி மென்கோ என்ற வால் நட்சத்திரத்தையும் கடந்து சென்றது. அதைப்பார்த்த விஞ்ஞானிகள் அந்த மிகப் பெரிய வால் நட்சத்திரத்தில் 'ரொசேட்டா' விண்கலம் தரை இறங்கும் என எதிர்பார்த்தனர்.

இந்த நிலையில், 'ரொசேட்டா' விண்கலம் எதிர்வரும் நவம்பர் 11ஆம் திகதி வால் நட்சத்திரத்தில் தரை இறங்கும் என துல்லியமாக கணக்கிட்டு அறவித்துள்ளனர்.

இது தொடர்பில் ரொசெட்டா விண்கல திட்ட விஞ்ஞானி மட்டெல்வர் கருத்து வெளியிடுகையில்,

இது போன்று அதற்கு முன் நடைபெற்றதில்லை. அதுபோன்று நடப்பதற்கு பல தடைகள் ஏற்படும். இதில் அதையெல்லாம் கடந்து 'ரொசேட்டா' விண்கலம் குறிப்பிட்ட நாளில் அந்த வால் நட்சத்திரத்தில் தரை இறங்கும் என தெரிவித்துள்ளார்.

# இந்தியா-பாக். போர் மூண்டால் 200கோடிபேர் உயிரிழக்க நேரிடும்

## அணுவாயுத போர் தடுப்பு கூட்டமைப்பு எச்சரிக்கை



இந்தியா, பாகிஸ்தான் இடையே அணுஆயுதப் போர் மூண்டால் சுமார் 200 கோடி பேர் கொல்லப்படுவார்கள் என்று சர்வதேச மருத்துவர்களின் அணுஆயுத போர் தடுப்பு கூட்டமைப்பின் (ஐ.பி.பி.என்.டபிள்யூ.) இணைத் தலைவர் ரா ஹெல்பண்ட், அமெரிக்க தலைநகர் வொஷிங்டன் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் 1947 ஆம் ஆண்டு முதல் இந்தியாவும் பாகிஸ்தானும் 3 முறை கடும் போர்களில் ஈடுபட்டுள்ளன. இரு நாடுகளுக்கும் இடையே அணு ஆயுத போர் மூண்டால் பேரிழப்புகள் ஏற்படும்.

உலக மக்கள் தொகையில் 3இல் ஒரு பங்கு மக்கள் கொல்லப்படுவார்கள். அதாவது சுமார் 200 கோடிக்கும் அதிகமான மக்கள் கொல்லப்படும் அபாயம் உள்ளது.

தெற்காசியாவில் அணுகுண்டுகள் வெடித்தால் அமெரிக்காவின் வேளாண் உற்பத்தி 10 சதவீதம் குறைந்துவிடும். அருகில் உள்ள சீனாவில் கோதுமை உற்பத்தி 50 சதவீதம் பாதிக்கப்படும். இதனால் சீனாவில் உணவுப் பஞ்சம் ஏற்படும்.

அணுகுண்டு கதிர்வீச்சால் சுமார் 100 கோடி பேர் கொல்லப்பட்டால், அதன்பின் அந்த சுற்றுவட்டார பகுதிகளில் ஏற்படும் உணவுப் பஞ்சத்தால் மேலும 100 கோடி பேர் பாதிக்கப்படுவார்கள்.

உலகின் எந்த மூலையாக இருந்தாலும் 100 அணுகுண்டுகள் வெடித்துச் சிதறினால் அதுவே ஒட்டுமொத்த மனித குல வீழ்ச்சிக்கு காரணமாகி விடும். உலகம் முழுவதும் பருவநிலை மாறும். வேளாண் உற்பத்தி சரிந்து உலகம் அழிவுப் பாதையை நோக்கி வேக மாகச செல்லும்.

ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி நகரங்கள் மீது அமெரிக்கா வீசிய அணுகுண்டுகளால் 2 இலட்சம் பேர் உயிரிழந்தனர். அதைவிட அதிக சக்தி வாய்ந்த அணுகுண்டுகள் உலக நாடுகளிடம் இப்போது உள்ளன. இதனால் உயிரிழப்புகள் மிக அதிகமாக இருக்கும். இந்த பேராபத்தை தடுக்க உலகம் முழுவதும் அணுஆயுதங்களை முழுமையாக அழிக்க வேண்டும் என்று ரா ஹெல்பண்ட் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# காங்கிரஸின் தோல்விக்கு விலை உயர்வே காரணம்



இந்தியாவில் நடந்து முடிந்த 4 மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் தோல்வி அடைந்ததற்கு, விலைவாசி உயர்வுதான் காரணம் என்று மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

டில்லியில் நேற்று முன்தினம் நடந்த பொருளாதார மாநாட்டில் அவர் பேசும்போது, "பணவீக்கம் தொடர்ந்து அதிகரித்து வருவதற்கு விலைவாசி உயர்வு முக்கியக் காரணம். இதன் எதிரொலியாக மத்தியில் ஆளும் கட்சியான காங்கிரஸ் நடந்து முடிந்த மாநில சட்டப் பேரவைத் தேர்தலில் தோல்வியைச் சந்தித்துள்ளது.

வேளாண் விளை பொருள்களுக்கான ஆதார விலை அதிகரித்தது, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் பிரதான திட்டமான கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் மூலம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தியது உள்ளிட்ட வாதங்கள் ஏழை மக்களிடம் எடுபடவில்லை.

பணவீக்கம் மற்றும் விலை உயர்வுக்கு அரசுதான் காரணம் என்ற பொதுவான அபிப்ராயத்தின் எதிரொலிக்கான விலையை ஆளும் மத்திய அரசு கொடுத்துள்ளது.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதுதான் அரசின் பிரதான நோக்கமாகும். இந்த விஷயத்தில் அரசு புத்திசாலித்தனத்துடன் நடந்து கொள்ள வேண்டியுள்ளது. அறுவடை, சந்தைப்பதுத்தல் ஆகிய விஷயங்ளில் பதுக்கல்காரர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது என்றார்.

# நெல்சன் மண்டேலாவுக்கு சர்வதேசம் திரண்டு அஞ்சலி



தென்னாபிரிக்க முன்னாள் அதிபரும் கறுப்பின தலைவருமான நெல்சன் மண்டேலாவின் பூதவுடலுக்கு சர்வதேச தலைவர்களும் பொதுமக்களும் பெருமளவில் திரண்டு அஞ்சலி செலுத்திவருகின்றனர்.

ஜோகனஸ்பர்கில் உள்ள அவரது வீட்டில் கடந்த 6ஆம் திகதி மரணம் அடைந்தார். அவரது மறைவுக்கு பல்வேறு நாடுகளும் இரங்கல் தெரிவித்துள்ள நிலையில் நேற்று முன்தினம் ஜோகனஸ்பர்க் நகரில் உள்ள எப்.என்.பி மைதானத்தில் உலக நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்ட இரங்கல் கூட்டம் நடைபெற்றது.

பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி உள்ளிட்ட பல நாட்டு தலைவர்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இராணுவ மருத்துவமனையில் பாதுகாப்பாக வைக்கப்பட்ட மண்டேலாவின் உடல் நேற்று பொதுமக்கள் பார்வைக்காக பிரட்டோரியாவில் உள்ள ஒன்றிய கட்டடத்தில் வைக்கப்பட்டது. மக்கள் அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளனர்.

பொதுமக்களும், பல்வேறு நாட்டு தலைவர்களும் அவரது உடலுக்கு மரியாதை செலுத்தும வகையில் 3 நாட்கள் அங்கு வைக கப்பட்டிருக்கும். பின்னர் வரும் ஞாயிற்றுக்கிழமை மண்டேலாவின் உடல் அவரது சொந்த ஊரான குனுவிற்கு கொண்டு செல்லப்பட்டு இறுதிச்சடங்குகள் செய்யப்படவுள்ளது.

# மைசூர் மகாராஜா மரணம்



இந்தியாவின் மைசூர் கடைசி மகாராஜா ஸ்ரீகண்டதத்த நரசிம்மராஜ உடையார் பெங்களூரில் கடந்த செவ்வாய்க்கிழமை மாரடைப்பால் காலமானார். அவருக்கு இறக்கும் போது வயது 60 ஆகும்.

மைசூரின் கடைசி மகாராஜா ஸ்ரீகண்டதத்த உடையார் பெங்களூரில் உள்ள அவரது அரண்மனையிலும்,மைசூரில் உள்ள அவரது அரச இல்லத்திலும் மனைவி மகாராணி பிரமோத தேவியுடன் வசித்து வந்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை முதலே லேசான காய்ச்சலால் உடல்நலக்குறைவுடன் இருந்தார். நண்பகல் 1 மணியளவில் உணவு அருந்திய சிறிது நேரத்தில் திடீரென மாரடைப்பு ஏற்பட்டு இறந்தார். மறைந்த மகாராஜாவுக்கு இராஜமரியாதையுடன் இறுதிச்சடங்கு நடத்த கர்நாடக அரசு முடிவெடுத்துள்ளது.

# காங்கிரஸின் பின்னடைவு ராகுல் காந்திக்கு எதிரான தல்ல

இந்தியாவின் மத்தியப் பிரதேசம் உள்ளிட்ட 4 மாநில சட்டமன்றத் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவு துணைத் தலைவர் ராகுல்காந்திக்கு எதிரானதல்ல. இந்தத் தேர்தல் ஒன்றும் ராகுல் காந்தி தொடர்பாக எடுக்கப்பட்ட பொது வாக்கெடுப்பு இல்லை என்று காங்கிரஸ் பொதுச் செயலாளர் திக்விஜய்சிங் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

மத்தியப் பிரதேசம், ராஜஸ் தான், சத்தீஸ்கர், டில்லி ஆகிய மாநில சட்டமன்றத் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவு துணைத் தலைவர் ராகுல் காந்திக்கு எதிரான தல்ல. மாநிலத்தில் நிலவிய உள்ளூர் பிரச்சினைகளின் அடிப்படையிலேயே இந்தத்தேர்தல் நடந்தது. தேசிய அளவிலான பிரச்சினைகள் இத்தேர்தலில் விவாதிக்கப்படவில்லை என்றார்.

# மலேரியாவை முற்றாக ஒழிப்பதில் இலங்கைக்கு அதியுச்ச வெற்றி




தெற்காசிய நாடுகளில் மலேரியாவை ஒழித்த நாடு என்ற வகையில், இலங்கையை பெயரிட கிடைத்தமை இலங்கை பெற்ற வெற்றி என மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் உரிமையாளர் பில்கேட்ஸ் தெரிவித்துள்ளார்.

மலேரியாவை ஒழிக்க இலங்கை எடுத்த நடவடிக்கைகளை எடுத்தமை பாராட்டத்தக்கது.

இந்த விடயத்தில் இலங்கை தெற்காசிய பிராந்திய நாடுகளுக்கு முன்னுதாரணமாக செயற்பட்டுள்ளது எனவும் பில்கேட்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

வொஷிங்டனில் இலங்கை சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் பாலித மஹிபாலவுடன் நடந்த நல்லெண்ண சந்திப்பொன்றின் போதே கேட்ஸ் இதனை கூறியுள்ளார். மைக்ரோசொப்ட் தலைவர் பில்கேட்ஸ், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா உள்ளிட்டோர் கலந்து கொண்ட சர்வதேச நாணய நிதியத்தின் விசேட கலந்துரையாடலுக்கு இடையில் இந்தச் சந்திப்பு நடந்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் இந்த விசேட கலந்துரையாடலில் இலங்கையின் சார்பில் பாலித மஹிபால கலந்து கொண்டார்.

# மண்டைதீவுக்கு விரைவில் காப்பற்

(வேலணை)

யாழ்ப்பாணத்தில் இருந்து பண்ணை ஊடாக தீவகம் செல்கின்ற பிரதான வீதியில் இருந்து மண்டைதீவு செல்கின்ற பிரதான வீதியானது அடுத்த வாரம் காப்பற் வீதியாக்குவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வேலணை பிரதேச சபையின் தலைவர் சி.தவராசா தெரிவித்துள்ளார்.

மேற்படி இந்த மண்டைதீவுக்குச் செல்லுகின்ற பிரதான வீதியானது பல காலங்களாக எவ்வித திருத்தங்களோ, புனரமைப்புக்களோ இன்றி போக்குவரத்திற்கு இடைஞ்சலான நிலையில் குண்டும், குழிகளாகக் காட்சியளித்தது.

வருவதாக அந்த ஊர் பொதுமக்களும் பல பொது நிறுவனங்களும் யாழ். அரச அதிபர், பிரதேச செயலர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இவை சம்பந்தமான அதிகாரிகளையும் மகஜர்கள் மூலமாகக் கேட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# மின்மானியில் மோசடி; யாழில் அறுவர் கைது

(யாழ்ப்பாணம்)

வீட்டு மின்மானிகளினைச் சேதப்படுத்திய குற்றச்சாட்டில் யாழ்.மாவட்டத்திலிருந்து ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக மின்சார சபை தெரிவித்தது.

கொழும்பிலிருந்து வருகை தந்த இலங்கை மின்சார சபையின் சோதனைக் குழுவும், பொலிஸாரும் இணைந்து யாழ் மாவட்டத்தின் பல பிரதேசங்களில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

வட்டுக்கோட்டை பொலிஸாரின் உதவியுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை வட்டுக்கோட்டைப் பிரதேசத்தில் இடம்பெற்ற சோதனையில் மின் மானியினைச் சேதப்படுத்திய மூவர் கைது செய்யப்பட்டனர்.

தொடர்ந்து சுன்னாகம் பிரதேசத்தில் சுன்னாகம் பொலிஸாரின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் அதே குற்றத்தில் மூவர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் தங்கள் வீட்டு மின்மானியினுள் கம்பிகளைச் செருகி மின்மானியின் வாசிப்பினைக் குறைத்துக் காட்டுவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டதினாலேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை மல்லாகம் நீதிமன்ற பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (48,114)

# டெங்கு தாக்கம் 10 பேருக்கு சிகிச்சை

யாழ்ப்பாணத்தில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட 10 இற்கும் மேற்பட்டவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த ஒரு சில வாரங்களில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலு[illegible]ங்கு நோயால் பாதிக்க[illegible]பேர் கடந்த செவ்வா[illegible]ம மட்டும் யாழ். போதனா [illegible]தியசாலையில் அனுமதிக்கப்ப[illegible]ள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2 பெண்களும், சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒரு பெண்ணும், நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2 பெண்களும், யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒரு பெண் உட்பட 2 மாணவர்களும் யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைததியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உடுவில், சண்டிலிப்பாய், நல்லூர், யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ஆகியவற்றில் பெண்களே அதிகமாக டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சுகாதார...

க்கடிகள், அசௌகரியங்கள் பற்றித் தொழிலாளர்கள் இச்சந்திப்பில் எடுத்து விளக்கினர்.

தொழிலாளர்களின் அனைத்து பிரச்சினைகளையும் கேட்டறிந்து கொண்ட ஒருங்கிணைப்பாளர் ஜெகன், தொழிலாளர்களின் ஆட்சேர்ப்புக்காக யாழ். மாநகர சபையால் இம் மாதம் 23 ஆம் திகதி நடத்தப்படவுள்ள நேர்முகத் தேர்வில் தவறாது கலந்துகொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக்கொண்டார்.

இத்தொழிலாளர்களின் நிரந்தர நியமனத்துக்காக ஏற்கனவே மாநகர முதல்வர் வடக்கு மாகாண சபை ஆளுநருடன் பேசி இதுவிடயத்தில் ஒரு இணக்கப்பாட்டை எட்டியிருப்பதையும் இச்சந்திப்பில் அவர் சுட்டிக் காட்டினார்.

நேர்முகப்பரீட்சையின் போது சேவைக்காலம், ஒழுங்காக கடமைக்கு சமுகமளித்தமை போன்ற அடிப்படையில் நிரந்தர நியமனத்துக்கு தொழிலாளர்கள் முன்னுரிமைப்படுத்தப்படவுள்ளதைச் சுட்டிக்காட்டிய ஒருங் கிணைப்பாளர், கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனையுடன் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நிரந்தர நியமனத்தை பெற்றுக்கொடுக்க தம்மாலான முயற்சிகளை முடிந்தவரை மேற்கொள்ளவிருப்பதையும் இச்சந்திப்பில் அவர் தொழிலாளர்களின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

# புலமைப்பரிசில் வெட்டுப்புள்ளி அடுத்த வாரம்

2013 ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய, அந்தந்த பாடசாலைகளில் தெரிவு செய்வதற்கான வெட்டுப் புள்ளிகள் அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ளன.

இதன்படி எதிர்வரும் 18 ஆம் திகதி இந்த வெட்டுப் புள்ளிகள் வெளியிடப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## வடக்கின்...

செலவுத்திட்டத்திற்கு இம்முறை மத்திய அரசிலிருந்து அதிக நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றுள்ளது. கடந்த வருடத்தைவிட இருபது வீதம் அதிகமாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. இலங்கையில் உள்ள ஒன்பது மா[illegible]ணங்களுடன் ஒப்பிடுகையில் வடக்கு மாகாணத்திற்கு இரண்டாவது அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

வடமாகாணத்தில் கிளிநொச்சி மாவட்டமே முதன்மையான விவசாய மாவட்டமாக உள்ளது. இங்கு பாரிய நீர்ப்பாசனக் குளங்கள் ஐந்து உண்டு. அத்துடன், யாழ். பல்கலைகழக்கத்தின் விவசாய பீடமும் கிளிநொச்சியில் இருப்பதனால் 2009 இற்கு பின்னர் கிளிநொச்சியில் இயங்கிய வடமாகாண விவசாய அமைச்சு அலுவலகம் தற்போது யாழ்ப்பாணத்தில் இயங்கிவருகிறது. இது மீண்டும் கிளிநொச்சியிலேயே இயங்குவது பொருத்தமானதாக அமையும் என தெரிவித்த அவர்,

பூநகரி, வன்னேரிக்குளம் போன்ற பகுதிகளில் நீர் மற்றும் நிலம் உவராகி வருவதனால் அந்தப் பிரதேசங்களில் பாரிய சுற்றுச்சூழல் ஆபத்து எதிர்நோக்கப்படுகிறது. குஞ்சுகுளம் என்ற கிராமம் இந்தப் பிரச்சினை காரணமாக மக்கள் இல்லாத கிராமமாகப் போய்விட்டது. இவ்வாறு உவராகி வரும் தன்மையானது தற்போது ஆனைவிழுந்தான் பகுதிகளை நோக்கியும் பரவி வருகிறது. எனவே விவசாய அமைச்சு உவராகிவரும் தன்மையைத் தடுக்கும் வகையில் பாரியளவிலான உவர்நீர்த் தடுப்பு அணை மற்றும் உவர்த்தடுப்பு தாவரங்கள் என்பவற்றை வளர்த்தல் போன்ற திட்டங்களை மேற்படி பிரதேசங்களில் மேற்கொள்ள வேண்டும்.

அத்தோடு நன்னீர் வளர்ப்புத் துறையில் அதிக கவனம் செலுத்தப்படல் வேண்டும் கடந்த ஆண்டு வடக்கு மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் சுண்டிக்குளம் கடல்நீரேரியினல் இலட்சக்கணக்கான இறால் குஞ்சுகள் விடப்பட்டன. ஆனால் அதிலிருந்து அந்த மக்கள் முழுமையான பயனைப் பெறமுடியவில்லை.

காரணம் பொருத்தமான காலத்தில் அந்த பணி மேற்கொள்ளப்படவில்லை எனவே இனிவரும் காலங்களில் நன்னீர் மீன்பிடித் துறையின் மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். என குறிப்பிட்ட அவர் பாடசாலை மாணவர்களுக்கான சீரான பேருந்து சேவையினை மேற்கொள்ள வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக், வாணிப மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

## வதிவிட..

களைப் பொறுத்தவரை அங்குள்ள பெண்கள் மற்றும் சிறுமிகளின் உடல் ரீதியான தன்னாதிக்கம், அவர்களது இனப்பெருக்கத்துக்கான உரிமை ஆகியவை பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், காணிகளுக்கான உரிமை பாதுகாக்கப்படுவதுடன், உரிய விகிதத்தில், தேசிய பாதுகாப்புக்கான இராணுவ கரிசனைகளும், பொது மக்களின் நடமாடுவதற்கான, வாழ்வதற்கான இடத்தை தேர்வு செய்வதற்கான உரிமையும் சமநிலையில் பேணப்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இராணுவத்தினால் கையகப்படுத்தப்பட்ட காணிகளின் விபரங்களில் வெளிப்படைத் தன்மை பேணப்பட வேண்டும் என்றும் அவா தெரிவித்தார்.

கடந்த 30 வருட போரினால் பாதிக்கப்பட்ட இடம்பெயர்ந்தவர்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்புவதற்கான ஒரு நிலைமை ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

போருக்குப் பின்னர் நிவாரண நடவடிக்கைகளில் இருந்து அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மாறுகின்ற காலப்பகுதியில், இடம்பெயர்ந்தவர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான காத்திரமான நடவடிக்கைகளை அரசாங்கமும், வளர்ச்சிக்கான செயற்பாட்டாளர்களும் மேற்கொள்ள வேண்டும் என்றும் சலோகா பெயானி தெரிவித்துள்ளார்.

போரில் இடம்பெயர்ந்த அகதிகளை மீளக்குடியமர்த்த அரசாங்கம் கணிசமான நடவடிக்கைகளை எடுத்துள்ள போதிலும், கணிசமான தொகையினர் இன்னமும் இடம்பெயர்ந்த நிலையிலேயே தொடர்வதாகவும், இருப்பிடங்களுக்கு திரும்பிய பலர் மோசமான நிலையில் இன்னமும் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இந்திய...

யாழ். மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அதிகாரி மேற்படி 30 மீனவர்களையும் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்திய போது அவர்களை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

அத்துடன், குறித்த மீனவர்களின் 8 படகுகளையும் காங்கேசன்துறை கடற்படையினரின் பாதுகாப்பில் வைத்துக்கொள்ளுமாறும், மீனவர்களினால் பிடிக்கப்பட்ட மீன்களை அழிக்குமாறும் உத்தரவிட்டுள்ளார். (25,பா)

## பொலிஸ்...

பொலிஸ் உத்தியோகத்தரை கடுமையாக சகட்டுமேனிக்கு தாக்கியுள்ளனர். இந்தத் தாக்குதலிலிருந்து குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் தப்பியோடி யாழ். பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்துள்ளார். விசாரணைகள் தொடர்கின்றன. (25)

## காற்றழுத்த...

எனவும் தெரிவித்துள்ளது. நேற்றுக்காலை 9.30 மணி முதல் வரும் 24 மணி நேரத்திற்குள் இந்தக் காலநிலை நிலவும் எனவும், மேலும் தெரிவித்துள்ள வானிலை அவதான நிலையம் மீனவர்கள் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதனைத் தவிர்க்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் கரையோரப் பகுதி மக்களும் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (பா)

## சட்ட...

என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிறப்புச் சான்றிதழின் பிரதிகள், இறப்புச் சான்றிதழ் பிரதிகள், விவாகச் சான்றிதழின் பிரதிகள், காலங்கடந்த இறப்புகளுக்கான பதிவுகள், காலங்கடந்த பிறப்புகளுக்கான பதிவுகள், விவாகப் பதிவு, தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள், முதியோர் அடையாள அட்டை வழங்கல், தெலைந்த அடையாள அட்டைக்கான பொலிஸ் அறிக்கை, அன்றைய தினம் இலவச ஆயுர்வேத சிகிச்சையும் இடம்பெறும் என்றும், அத்துடன் சட்ட உதவி ஆலோசனைகளும் எழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# புனர்வாழ்வு பெற்ற ஒருவரை மீண்டும் கைது செய்ய முடியுமா?

## விளக்கம் கோருகிறது உயர் நீதிமன்றம்

(கொழும்பு)

போரின் பின்னர் முன்னாள் போராளி என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு, புனர்வாழ்வளிக்கப்பட்டு, விடுதலை செய்யப்பட்ட ஒருவரை மீண்டும் கைதுசெய்து தடுத்து வைத்திருப்பதற்கான காரணத்தை கூறுமாறு சட்டமா அதிபரை உயர் நீதிமன்றம் கேட்டிருக்கிறது.

திருகோணமலையைச் சேர்ந்த ஜோசப் அமலதாஸ் என்னும் கைதியின் மனுவை விசாரித்தபோதே உச்சநீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் பொலிஸார் தன்னைக் கைது செய்ததாக மனுதாரர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார். அதன்பின்னர் ஒரு வருடகால புனர்வாழ்வு நடவடிக்கையின் பின்னர் 2012 ஆம் ஆண்டு, தான் விடுதலை செய்யப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

அவ்வாறு விடுதலை செய்யப்பட்ட தன்னை பொலிஸார் மீண்டும் கைது செய்து வழக்கு விசாரணை எதுவும் இன்றி தடுத்து வைத்திருப்பதாகவும் மனுதாரர் தெரிவித்துள்ளார். இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் புனர்வாழ்வு வழங்கப்பட்டு, விடுதலை செய்யப்பட்ட ஒருவர் ஏன் மீண்டும் கைது செய்யப்பட்டார் என்று அரச தரப்பு சட்டத்தரணியிடம் கேள்வி எழுப்பியது.

அதேவேளை இந்தச் சந்தேக நபர் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடம் குறித்த தகவல் தன்னிடம் இல்லை என்று இன்னுமொரு கேள்விக்கு பதிலளித்த அரச சட்டத்தரணி தெரிவித்தார்.

வழக்கை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிமன்றம், அன்றைய தினம் இந்த மனுதாரர் மீண்டும் கைது செய்யப்பட்டமைக்கான காரணத்தை முன்வைக்குமாறு அரச சட்டத்தரணிக்கு உத்தரவிட்டது.

# மரக்கடத்தல் முறியடிப்பு; இருவர் மீது வழக்கு

(மாங்குளம்)

மாங்குளம் பகுதியில் பல இலட்சக்கணக்கான மரங்களை வெட்டிக் கடத்த முற்பட்ட வேளை, கடந்த 10 ஆம் திகதி கைது செய்யப்பட்ட இருவரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

மேலும், அனுமதிப்பத்திரமின்றி மரக்காலை நடத்தி வந்த மேலும் இருவரையும் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும், கைப்பற்றப்பட்ட மரங்களை நீதிமன்றுக்கு பாரப்படுத்துமாறும் நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார். (170)

# பால்மா பதுக்கலை தடுக்க நடவடிக்கை

(கொழும்பு)

பால்மா நிறுவனங்களின் அனைத்து களஞ்சியசாலைகளையும் நுகர்வோர் அதிகார சபையில் பதிவு செய்யுமாறு வர்த்தமானி அறிவித்தல் விடுக்குமாறு நுகர்வோர் மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளருக்கு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெனாண்டோ பணிப்புரை விடுத்துள்ளார்.

24 மணித்தியாலமும் பால்மா நிறுவன களஞ்சியசாலைகளை சோதனை செய்யும் அதிகாரம் அடங்கும் வகையில் சுற்றறிக்கையை தயாரிக்குமாறு அவர் தெரிவித்துள்ளார்.

களஞ்சியசாலைகளில் பால் மாவை ஒழித்து வைத்து சந்தையில் பால் மா தட்டுப்பாடு இருப்பதாகக் காட்டி விலை உயர்வை கோர சில நிறுவனங்கள் முயற்சிப்பதாக அமைச்சர் தெரிவித்தார். இதனை தவிர்க்கவே சுற்றறிக்கை விடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# கென்யாவில் ஜனாதிபதி



(கொழும்பு)

கென்யாவிற்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அந்நாட்டின் 50 ஆவது சுதந்திர தின நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டுள்ளார்.

நைரோபிக்கு அருகிலுள்ள கசராய் நகரத்திலுள்ள மைதானத்தில் இலங்கை நேரப்படி நேற்று பிற்பகல் 12.45 அளவில் சுதந்திர தின நிகழ்வுகள் ஆரம்பமானதாக ஜனாதிபதியின் பேச்சாளர் மொஹான் சமரநாயக்க தெரிவித்தார்.

1969 ஆம் ஆண்டு பிரித்தானியாவின் ஆட்சியிலிருந்து கென்யா சுதந்திரம் அடைந்தது. இதேவேளை, கென்ய ஜனாதிபதி உகுறு கென்யாட்டாவுடன் ஜனாதிபதி கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ள தாக ஜனாதிபதி பேச்சாளர் தெரிவித்தார்.

அத்துடன் நைரோபியிலுள்ள ஐக்கிய நாடுகளின் ஆபிரிக்க தலைமையகத்தையும் ஜனாதிபதி பார்வையிட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பனிச்சங்குளம் விபத்து; சாரதி மீது வழக்கு

(பனிச்சங்குளம்)

பனிச்சங்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 19 பேருக்கு காயம் ஏற்படுவதற்கு காரணமான பஸ் சாரதி சுரேஸ்குமார் என்பவர் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் ஆஜராக்கப்பட்ட வேளை, சாரதியை 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

இவ் பஸ் விபத்தில் பஸ் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் மூவர் கவலைக்கிடமான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (170)

## நிறைவேறியது பிரேரணை

(கொ...)

நேற்றைய ... வடமாகாண சபை... ஏகமனதாக ஒரு பிரேர... நிறைவேற்றப்பட்டுள்ளது.

தகவல் முகாமைத்துவ மீளாய்வு ஸ்தாபனம் மற்றும் தகவல் தொழில்நுட்ப பிரிவு ஆகியவற்றை 2014 ஆம் ஆண்டு ஸ்தாபிப்பதற்கான மீளாய்வு பிரேரணை வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் சபையில் நேற்று முன்வைக்கப்பட்டது.

இதனை வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சஜந்தன் வழிமொழிந்தார். தொடர்ந்து சபையின் முழு உறுப்பினர்களுடைய ஏகோபித்த ஆதரவுடன் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

# புகையிரதப் பாதை துரித ஏற்பாடு

(பளை)

பளை வரையான புகையிரதப் பாதையானது அமைக்கப்பட்டு பளை நகரம் வரை புகையிரதமானது பாதைக்குத் தேவையான கல்லு முதலான பொருட்களை கொண்டுவந்து செல்கின்றது.

பளை நகரத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிய பாதையில் கொங்கிறீற் தூண் அமைக்கப்பட்டு தண்டவாளம் பொருத்தும் பணி துரித வேகத்தில் நநடைபெறுகின்றது.

மேலும் பளையில் இருந்து சாவகச்சேரி வரையான பகுதியில் உள்ள பால வேலைகளும் நிறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (130)

# இலங்கைக்கு எதிராக தீவிர பிரசாரம்

## விமல் ஆதங்கம்



(கொழும்பு)

எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவிருக்கின்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையை இலக்கு வைத்து உள்ளூர் மற்றும் உலக சக்திகள் இலங்கைக்கு எதிரான ஒரு பாரிய பிரசார இயக்கத்தை தொடங்கியுள்ளன என்று அமைச்சர் விமல் வீரவன்ச நேற்று தெரிவித்தார்.

இவற்றுக்கு ஜேர்மனியிலுள்ள நிரந்தர மக்கள் விசாரணை மன்றம் எனப்படும் அமைப்பு இயங்குகின்றது. அதற்கு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தலைமை தாங்குகின்றது என்றும் அவர் கூறினார்.

பத்தரமுல்லையிலுள்ள கட்சி அலுவலகத்தில் இன்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை தொடர்ந்தும் உத்வேகத்துடன் வைத்திருப்பதும் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான ஒரு தீர்மானத்தை இயற்ற உறுப்பு நாடுகளை தூண்டிவிடுவதும் இந்த இரண்டு அரச எதிர்ப்பு அமைப்புகளினதும் நோக்கமாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

## கடலில் தத்தளித்த இந்திய மீனவர்கள் மீட்பு

(வடமராட்சி)

வடமராட்சி கடற்பரப்பில் நேற்று இரு இந்திய மீனவர்களின் மீன்பிடிப் படகுகள் கரையொதுங்கியதுடன், அவற்றில் இருந்து 6 இந்திய மீனவர்களும் மீட்கப்பட்டிருக்கின்றார்கள்.

தொண்டைமானாறு கடற்பரப்பில் கரையொதுங்கிய இந்தியப்படகில் மூன்று இந்தி மீனவர்களும் கரையொதுங்கியுள்ளனர். இவர்களுக்கு உள்ளூர் கடற தொழிலாளிகள் தேவைான உதவிகளை வழங்கினர். இவர்கள் அனைவரையும் பொலிஸார் பொறுப் பேற்றுக்கொண்டுள்ளனர். (116,25)

## "நாகமாலை" இறுவட்டு வெளியீடு

வரலாற்றுச் சிறப்பு மிக்க நாகர்கோயில் நாகதம்பிரான் ஆலயத்தின் சிறப்புக்களை வெளிப்படுத்தும் 10 பாடல்களைக் கொண்ட 'நாகமாலை' இறுவட்டு வெளியீட்டுவிழா எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அவுஸ்ரேலியாவிலுள்ள மெல்போர்னில் நடைபெறவுள்ளது.

இப்பாடல்களை ஈழத்து சௌந்தராஜன், அருள்ஜோதி, தென்னிந்திய பாடசார்களான எஸ்.பி.பாலசுப்பிரமணியம், சீர்காழி சிவசிதம்பரம், உன்னிகிருஷ்ணன், அனுராதா ஸ்ரீராம், காசினி, மாலதி, வசந்தா ஆகியோர் பாடியுள்ளனர். (109)

# புதிய பொலிஸ்மா அதிபர் யாழ்ப்பாணத்தில் பதவியேற்பு



யாழ். மாவட்டத்தின் பிரதிப் பொலிஸ் மா அதிபராக றொகான் டயஸ் நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

யாழ். பொலிஸ் நிலையத்தில் இந்து, பௌத்த, கிறிஸ்தவ, முஸ்லிம் மதங்களின் குருமார்களின் விசேட பூஜை வழிபாடுகள் மற்றும் ஆசிர்வாதங்கள் நடைபெற்ற நிலையில் அவர் தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

தொடர்ந்து, பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கான பொலிஸ் அணிவகுப்பு மரியாதை யாழ். பொது நூலகத்திற்கு முன்பாக நடைபெற்றது. சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.முகமட் ஜெப்ரியுடன் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அணிவகுப்பு மரியாதையில் ஏற்றுக்கொண்டார். (25)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 டிசம்பர் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.